

# நாதக்குடம்

146 வது ஆண்டு சிறப்பு மலர் – 2015

யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்

# நாதக்குடம்

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்


யாழ்ப்பாணம்.

# நூல் விபரம்



| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | "நாதக்குடம்" |
| இதழாசிரியர் | : | சுப்பிரமணியம் சுதர்சன் |
| வெளியீடு | : | யா/நாவற்குழி மகா வித்தியாலயம்<br>யாழ்ப்பாணம். |
| பதிப்பு | : | 2015 |
| பக்கங்கள் | : | 140 |
| அட்டைப்படம் | : | தர்மலிங்கம் துளசிகரன் ஆசிரியர் |
| அச்சுப்பதிப்பு | : | தீபம் பிறிண்டேர்ஸ்,<br>717,கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம். |

# நாவற்குழி மகா வித்தியாலய அமைவிடம்







# மகுட வாக்கியம்

"ஒழுக்கமும் கல்வியும் உயிரெனப்படும்"

# VISION - நோக்கு

"மாறி வரும் சமூகக் கட்டமைப்புகளுக்கு

அமைவாக இணைந்து செல்லக்கூடிய

பிரஜைகளை உருவாக்குதல்"

# MISSION - பணிக்கூற்று

"வளங்களை ஒன்றிணைத்து மாற்றங்களை

உள்வாங்கி அறிவு திறன், மனப்பாங்கு கொண்ட

நற்பிரஜைகளை உருவாக்கும் விதத்தில் கல்வி

நடவடிக்கைகளை வடிவமைத்து செயற்படுத்துதல்"

# மலர்வெளியீட்டுக் குழு

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி வ. மேகலிங்கம் | - | அதிபர் |
| 02. | திருமதி.சு.செல்வராசா | - | உபஅதிபர் |
| 03. | திரு.சு.சுதர்சன் | - | இதழாசிரியர் |
| 04. | திரு.கி.தருமராசா | | |
| 05. | திரு.த.சிவகுமார் | | |
| 06. | திரு.கூ.ஜெபநேசன் | | |
| 07. | திரு.சி.சத்தியசாயிபாவா | | |
| 08. | திரு.க.முரளி | | |
| 09. | திரு.தி.மதிபரன் | | |
| 10. | திருமதி.பி.அங்கசன் | | |
| 11. | திருமதி.சு.வஜீகரன் | | |
| 12. | திருமதி. வி.செல்வகுமார் | | |
| 13. | திருமதி.ப. ஆசா தமயந்தி | | |
| 14. | செல்வி.ந.யசோதை | | |
| 15. | செல்வி. ஐ.கோமளா | | |
| 16. | செல்வி.வே.தேவரஞ்சினி | | |

# பாடசாலைக்கீதம்

உயிரினும் இனியநம் உயர்வாழ்வினையே
உணர்வொடு போற்றுவோம் வாரீர்!


ஓங்குக கல்வி செல்வ மோடகை
ஒளி திகழ் தெய்வீக வாழ்க்கை
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

- உயிரினும்..

ஒரு குல மென உயிர் வாழ்வோம்
உளமதில் நடுநிலை சேர்வோம்
உயர்தர நமதுயர் மகாவித்தி யாலயம்
உருவளர் நாவற்குழியினை நினைவோம்

ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

- உயிரினும்...



# ஆசிச் செய்தி

தென்மராட்சி வலயத்தில் அமைந்திருக்கும் யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் தனது 146 வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதும் மலர் வெளியிடுவதும் மகிழ்ச்சிக்குரியவை. சிறந்த அதிபரின் வழிகாட்டலில் அர்ப்பணிப்பான ஆசிரியர் குழாத்தினால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் ஏனைய செயற்பாடுகளும் வேகமாக மேம்பட்டு வருவதைத் தற்போது காணமுடிகிறது. ஒழுக்க விழுமியங்களும் மேம்படுகின்றன. இவை தொடர்ந்து சிறப்பாக மேம்படவும் ஆண்டு விழா சிறப்பாக அமையவும் நூல் சிறப்பாக வெளிவரவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

இறைபணியில்,
ஜாக்ரத சைதன்யா,
வதிவிட ஆச்சாரியார்
சின்மயா மிஷன் – யாழ்ப்பாணம்.



# Massage From Hon.Governor

I have great pleasure of sending this message to felicitate the J/Navatkuli Maha Vidyalayam on the occasion of the release of the School's 146th year - end Magazine.

It is widely known that Navatkuli Maha Vidyalayam has a proud record of achievements that will certainly place it among the school of excellence in the country. Founded in 1868 and upgraded as a Maha Vidyalayam in 1950, this senior Tamil mixed school has produced a number of distinguished citizens, who have made significant contribution to the country in country in general and to Northern Province in particular.


For nearly 150 years now Navatkuli Maha Vidyalayam has achieved a number of academic successes at the Primary and Secondary levels of education. Dedicated leadership of the Principal and commitment of her teaching staff have enabled the Vidyalayam to accomplish their Mission goals.

On this happy occasion, T wish them continued success in the future.

**H.M.G.S. PALIHAKKARA**

Governor

Northern Province



# முதலமைச்சரின் வாழ்த்துச்செய்தி

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 60 பாடசாலைகளில் ஒரு பாடசாலையாக விளங்குகின்ற யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் தனது 146 வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ் வேளையிலே வெளிவரவிருக்கும் விழா மலருக்கான வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். 1868 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது 1946ம் ஆண்டில் அரசினால் கையேற்கப்பட்டு நாவற்குழி அரசினர் கலவன் பாடசாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதே ஆண்டிலேயே இப் பாடசாலை சிரேஷ்ட தமிழ் கலவன் பாடசாலை என தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து வந்த அதிபர்கள், ஆசிரியர்களின் தொடர் முயற்சியால் 1961 ம் ஆண்டில் நாவற்குழி மகா வித்தியாலயம் என்ற தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டு இன்று 39 ஆசிரியர்களுடனும் 700க்கும் மேற்பட்ட மாணவர்களுடனும் ஒரு மகா வித்தியாலயமாக மிளிர்கின்றது.


இப்பகுதியில் இருந்து கூடுதலான பிள்ளைகள் நகரப்புற பாடசாலைகளை நோக்கிச் செல்லுகின்ற போதிலும் இங்குள்ள மாணவர்கள் க.பொ.த சா/த மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபெறுகளை பெற்றிருப்பது பெருமைக்குரியது. குறிப்பாக 2012ம் ஆண்டில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட வர்த்தகப் பிரிவு மாணவர்கள் முதற் தடவையிலேயே 3A சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 44வது நிலையைப் பெற்றுள்ளமை ஒரு வரலாற்று முக்கியமானதொன்றாகும்.

இம் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் மட்டும் நின்று விடாது பிற நிகழ்ச்சிகளிலும் கணித வினாடிவினாப் போட்டி, சிங்களப் போட்டி, சிறுகதையாக்கம் சமூக, விஞ்ஞானப் போட்டி ஆகிய பல போட்டிகளில் மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பல வெற்றிகளைக் குவித்து இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

எதிர்வரும் காலங்களில் இக்கல்லூரி மேன்மேலும் வளர்ச்சி பெற்று சிறந்த பல மாணவர்களை உருவாக்க வேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்தி செய்கின்றேன்.

**நீதியரசர் க.விக்னேஸ்வரன்**

முதலமைச்சர்



# கல்வியமைச்சரின் வாழ்த்துச் செய்தி

யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தின் 146ம் ஆண்டு நிறைவில் அன்று வெளியிடப்படும் ஆண்டு நிறைவு மலருக்கு ஆசிச்செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

ஆண்டு நிறைவில் இத்தகைய மலர்களை வெளியிடுவது தற்காலத்தில் மாணவர்களும், இன்றைய சமூகத்தினரும் பாடசாலை தொடர்பான வரலாறுகளை அறிவதற்கும், எதிர்கால சந்ததியினர் பாடசாலை தொடர்பான அறிக்கைகள் தயாரிப்பதற்கும், பாடசாலை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு சிறந்த ஆவணப்படுத்தலாக அமையும். இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட பாடசாலைச் சமூகத்தினரை பாராட்டுகின்றேன்.

பாடசாலை சமூகத்தினர் மாணவர்கள் ஆக்கங்கள் பொதிந்த மேலும் பல மலர்களை வெளியிட வேண்டும். காரணம் மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு சிறந்த ஏணியாக அமையும். இப்பாடசாலை சமூகத்தினர் பல சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டும். என ஆண்டு விழா மலரினூடாக கேட்டுக்கொள்கிறேன்.

முதன்முறையாக இவர்களால் வெளியிடப்படும் ஆண்டுநிறைவு மலர் சிறப்பாக வெளிவருவதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, ஆண்டுவிழா சிறப்பாக நடைபெறவும் எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.த.குருகுலராசா
கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.
வடக்கு மாகாணம்.



# வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்து

"காலம் உணர்ந்து படைக்கப்பட்ட காலடித் தடம்"

இது யா/நாவற்குழி மகா வித்தியாலயம் தனது பயணப்பாதையில் 146 ஆவது ஆண்டினைக்கடந்து பயணித்துக்கொண்டிருக்கும் வேளை இதனில், தனது வரலாற்றை ஆவணமாக்கித் தருகின்ற இந்த நாதக்குடம் மலரிற்கு ஆசியுரை வழங்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தமை மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

146 வருடங்களைக் கடந்த பயணம் என்பது ஒரு சாதனை தான் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் வியக்கத்தக்க வளர்ச்சியைக்கண்டுவிட்ட நிலையிலும் வரலாறுகளைப்பேணுதல் என்பது எமது சமூகத்தில் பலவீனமான ஒரு விடயமாகவே இன்றும் உள்ளது.

ஒவ்வொரு பாடசாலையுமே தனது பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பவற்றை அடிக்கடி சரியாக அடையாளம் கண்டு அவற்றை சரியாக முகாமை செய்தபடி தனது பயணப்பாதையை தெரிவு செய்து, பயணப்படும் போதுதான் எமது பிரதேச் கல்வியில் ஒரு மடைமாற்றம் (Sublimation) ஏற்படும் என்பது எனது நம்பிக்கை.

கல்வியின் மூலம் மனித அபிவிருத்தியும் சீரிய வகையில் அமைந்த சமூகநடத்தைப்பாங்கும் எதிர்பார்க்கப்படுவது ஒன்றும் புதியதல்ல.

பிரிவுபட்ட சமூக அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட மனிதர்களுக் கிடையில் வேறுபடுகின்ற விருத்திமட்டங்கள், நடத்தைக்கோலங்கள் என்பவற்றை விளங்கிக் கொண்டு அவற்றில் செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகளை அடையாளம் கண்டு, உரிய திசைக்கு அச்சமூகத்தைத் திருப்புவதில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்து வதில் கல்விக்கூடங்கள் தம் பங்கை ஆற்றலுடன் நிறைவேற்ற வேண்டும். மாமனிதர் நெல்சன் மண்டேலா அவர்களுடைய "கல்வி என்பது ஒருசக்தி மிக்க ஆயதம்" என்ற கூற்றை நாம் அடிக்கடி நினைவுக்கு கொண்டுவருவது அவசியம்.

பரம்பரைக்காரணிகள், மற்றும் சூழல் காரணிகள் தனிமனிதனது ஆளுமை யில் செல்வாக்கு செலுத்தி நிற்கின்ற போதும், இன்று கல்விக்கான பாதை என்பது

தடைகள் களைந்து பல்வேறு பக்கங்களினூடாகவும் திறந்து விடப்பட்டிருக்கின்றது என்பதனையும் பாடசாலைகள் நன்கு விளங்கிக்கொள்வது இன்று அவசியமாக உள்ளது.

தமிழர் எமது வாழ்க்கைச் சூழலில், பாரம்பரியமான பிள்ளை வளர்ப்பு முறைகளே பெருமளவில் காணப்படுகின்றன. பாரம்பரியமான இப் பிள்ளை வளர்ப்பு முறைகளும், பெற்றோர்களிடம் காணப்படும் சமூக மட்ட அதிகாரத்தனமும் பாரியளவிலான மாற்றமின்றி சந்ததிசந்ததியாகவே கையளிக்கப் பட்டு வருகின்றது. தனது நான்கே வயதான பிள்ளையின் இரு கைகளையும் பிடித்தபடி அதனது கன்னத்தில் அறைந்த ஒரு இளவயது தந்தையிடம் கதைத்தபோது "எனது தந்தையார் என்னை எப்படி வளர்த்தாரோ அதைப்போலவே நானும் என்பிள்ளையை வளர்க்கின்றேன்." என்று நிமிர்ந்து நின்று பதில் கூறும் தந்தையர்கள் பலரை நான் கண்டிருக்கின்றேன். இவ்வாறானவர்களும் அரசு உத்தியோகத்தர்கள் என்ற ஒரு நிலையில் சமூக வழிகாட்டிகளாக பங்கு வகித்துக் கொண்டிருப்பது இன்னுமொரு ஆபத்தாக உள்ளது.

இந்த மனப்பாங்குடனேயே இவ்வகையான அறிவூட்டலுடனேயே எமது பிள்ளைகளது பெற்றோர் பலரும் அம்மா அப்பா என்ற அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கின்றனர். இந்த அதிகார பீடங்களும் பிள்ளைகளது நடத்தைகளில் நிச்சயம் பாதகமான மாற்றத்தை ஏற்படுத்தி நிற்கின்றன. ஒவ்வொருதாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் உண்டு. இது அறிவியல் விதி மட்டுமல்ல, ஆன்மீக தத்துவமும் கூட இது குழந்தைகளுக்கும் பொருந்துமல்லவா?

இத்தகைய சூழலில் இருந்துவரும் பிள்ளைகள் பாடசாலைக்குள் நுழையும் போது அப்பிள்ளைகளை எவரோ ஒருவரது குழந்தை தானே என்ற அலட்சிய எண்ணத்தோடு பார்க்கும் அணுகும் ஆசிரியர்கள் ஒரு சிலரும் இன்றுவரை எம் மத்தியில் இருப்பதும் இன்னுமொரு பக்கத்திலான ஆபத்தான விடயமே.

பிள்ளைகளைப் பொறுத்து இந்த இரு பக்கமுமே ஆபத்தானது தான். அதிகாரத்தனத்துடன் இணைந்த அடக்குமுறை நடத்தைகளை வளர்த்தவர்கள் எவ்வாறு விரும்பாதிருக்கின்றோமோ, அதேபோல் தான் பிள்ளைகளும் இவற்றை விரும்புவதில்லை. என்பது யதார்த்தமானதே. இதனைப்பெற்றோர்களும் ஆசிரியர்களும் மறந்து போவது தான் இன்று கல்வித்துறை எதிர்கொள்ளும் பாரிய சவால்களுள் ஒன்றாக இருக்கின்றது.

இலகுவில் மறந்துவிட முடியாத போர்க்காயங்கள், இழப்புக்கள், அவல வாழ்க்கையோடு தொடரும் அவல வாழ்வியல், எமது சமூகத்தின்மீது பாரிய வடுக்களையும், ஆறாத காயங்களையும் உள்ளேயும், வெளியேயும் ஏற்படுத்தி விட்டுள்ளது. இந்த வடுக்களும், காயங்களும் ஓரிரண்டு தலைமுறைகளுக்குள் ஆறிவிடக்கூடும் என எதிர்பார்ப்பது மடமையானது என்பது உளவியல் அறிஞர்களது கருத்து. எனவே எமது சமூகம் நீண்டகாலத்துக்கு இவற்றோடு இவைதரும் மனவெழுச்சிகளோடு வாழவேண்டியுள்ளது. இது எமது அறிவு கலாசார பண்பாட்டுக் கூறுகளிலும், மற்றும் உளவியல், சமூகவியல் தளத்திலும் அதிர்வுகளை (வெடிப்புக் களை) ஏற்படுத்தி விடுவதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இத்தகைய அடித்தளத்தில் நின்றபடி பிள்ளைகளை விளங்கிக்கொண்டு இன்றைய மாணவர்களுக்கான கல்வியை வழங்குவது என்பது பாரிய சவால்மிக்கதே.

இவ்வகைச் சவால்களுக்கு முகம் கொடுத்தபடி, அவற்றை தன்னால் முடிந்தளவுக்கு வெற்றி கொண்டு தன் பணி ஆற்றிவரும் யா/ நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாத்தினை நான் பாராட்டி நிற்கின்றேன்.

காலம் உணர்ந்து தன் வரலாற்றில் ஒரு ஆதாரத்தை நிலைபெறச் செய்வதற்காக இவ்வித்தியாலய சமூகம் எடுத்த பல மாத முயற்சிகளின் பயனாக இன்று வெளிவரும் நாதக்குட மலரினை பெருமையுடன் வரவேற்று, வாழ்த்தி, மகிழ்கின்றேன்.

"மாந்தர் தம் உள்ளத்தனைய உயர்வு"

சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.



# வாழ்த்துச் செய்தி

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் எனும் கூற்று உண்மையானால் எழுத்தறிவிக்கப்படும் இடம் கோவில் எனலாம் கோவிலாகவுள்ள பாடசாலையை தாய் என போற்றுவது நமது மரபு.

எழுத்தறிவிப்பதன் உயர்வை பாடசாலையானது "அன்னசத்திரம் ஆயிரம் அமைப்பதிலும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என பதிவு செய்கின்றது.

என்னை கற்றோனாக்கி அவையில் முந்தியிருக்கச் செய்த என் தந்தை நாவற்குழியூர் நடராஜனின் கற்றறிந்த இடம் நாவற்குழி மகாவித்தியாலயம் ஆதலினால் எனக்கும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஆர்வம் உண்டு.

என் தந்தையின் பிறப்பிடத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையை நான் நேசிக்கின்றேன். இப்பாடசாலையின் 146வது அகவையை கொண்டாடும் பாடசாலை சமூகத்தின் பணியினை பாராட்டி வாழ்த்தி உளம்பூரித்து செய்தி அளிப்பதில் பெருமையடைகின்றேன்.

திரு.நடராஜா மகிழ்னன்
நிர்வாக இயக்குனர்
பாதுகாப்பு கட்டமைப்பு
தனியார் நிறுவனம்
கொழும்பு.

# வாழ்த்தி மகிழ்கிறோம்...!

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்றான் மகாகவி பாரதி. செம்மொழியான இனிய தமிழின் சிறப்பால் உயர்வதும் நமது தமிழினமாகும். பல நூற்றாண்டுகளைக் கண்டு பண்பட்டுச் செழித்து வளர்ந்துவானத்தைத் தொட்டு நிற்பதும் நமது தமிழ் மொழியாகும். உயிரினும் மேலான கல்வியைப்பற்றி ஒரு துளி வள்ளுவப் பெருந்தகை எடுத்துக் கூறுகையில்.......

"ஒருமைகண் தான்பெற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் அமையும் என்பது பொருளாகும். அந்த வகையில் நானும் எனது குடும்பத்தவர்களும் ஏன் என் ஊரவர்களும் கல்வி கற்று நல்லபடி வாழ்வாங்கு வாழப்பேருதவிபுரிந்தது. எமது யாழ் – நாவற்குழி மகா வித்தியாலயம் என்று பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். எங்கள் பாடசாலையானது இந்த வருடம் நூற்றிநாற்பத்தாறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதை அறிந்து மகிழ்ந்து பாராட்டுவதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

எங்கள் பாடசாலையில் கல்விகற்ற பல நூற்றுக்கணக்கானோர் தாய் நாட்டில் மட்டுமல்ல புலம் பெயர் நாடுகளிலும் அரச துறைகளிலும் ஏனைய பல துறைகளிலும் புகழ் பரப்பி வந்திருக்கிறார்கள். தற்போதும் பலர் எமது பாடசாலையின் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். தென்மராட்சிப் பகுதியின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் நமது பாடசாலை கல்வி, கலை, கலாசாரம், முத்தமிழ், விளையாட்டு எனப் பலதுறைகளில் சரித்திரம் படைத்துவருதை நான் அறிந்து வாழ்த்துகிறேன்.

நூற்றிநாற்பத்தாறாவது ஆண்டு விழாவை கொண்டாடும் வேளையில் எனது பாடசாலை நாட்களை இப்போது எண்ணிப்பார்க்கையில் பெருமகிழ்வுதான். எத்தனை ஆசிரியர்கள்,எத்தனை மாணவர்கள்,பெற்றோர்கள், விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என எண்ணும்போது மீண்டும் அந்தப்பாடசாலை நாட்கள் வரமாட்டாதா...! என எண்ணி வாழ்த்துகிறேன்.

நமது பாடசாலை இன்னும் வளரவேண்டும். சகல துறைகளிலும் வெற்றி பெற்றுப் புகழ் பரப்பவேண்டும். நல்ல அறிவான, மனிதநேயம் மிக்க மாணவச் செல்வங்கள் உருவாக வேண்டும். இதற்கெல்லாம் நம் இனத்திடம் இருப்பது கல்வியே. எனவே அந்த அரும்பெரும் செல்வத்தை அனைவரும் கண்போல் பாதுகாப்போம். நமது எதிர்காலச் சந்ததிகளும் உலகப்பரப்பெங்கும் இசைபட வாழ்வார்கள்.

நூற்றிநாற்பத்தாறாவது ஆண்டு விழாவை முன்னெடுத்துச் சிறப்புடன் நடாத்தி மகிழும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் புலம்பெயர் தேசத்திலிருந்து எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். விழா இனிதே நடைபெற்றுச் சிறக்க மனமார வாழ்த்தி மகிழ்கிறேன்...!

“கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை”

நன்றிகள் பல கோடி-

வைரமுத்து சிவராசா
பழைய மாணவன்(வேலம்பராய் - நாவற்குழி கிழக்கு)
பிரதம ஆசிரியர் - ஜேர்மனி “மண்” கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை
தலைவர் - ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்
பணிப்பாளர்சபை உறுப்பினர் - ஜேர்மனி தமிழ்க் கல்விச் சேவை



# அதிபர் செய்தி

யா/ நாவற்குழி மகா வித்தியாலயத்தின் 146 வது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்தினை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பாடசாலையின் வளர்ச்சிப்போக்கின் பாதையிலே 1961ம் ஆண்டிலே அதிபராகக் கடமையாற்றிய H.W.A நந்தானியல் காலப்பகுதியிலிருந்து எனக்கு அறிமுகமும் அனுபவமும் இருக்கின்றது. ஆவணப்படுத்தலின் தேவை கருதி மலர் ஒன்றை வெளியீடு செய்யவேண்டியது மிகவும் பொருத்தமானதே மலர் வெளியீடு செய்வதற்கான ஆளணி வளம் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இம்முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. நீண்டகாலமாக 3 பிரிவுகளைக் கொண்டு 1200 மாணவர்களுடனும் 45 ஆசிரியர்களுடனும் இப்பாடசாலை இயங்கிக் கொண்டிருந்தது. தரம் 1 தொடக்கம் 11 வரை நான் இப்பாடசாலையில் எனது கல்வியைத் தொடர்ந்திருக்கிறேன். அக்காலப்பகுதிகள் பொற்காலம் என்றே உணர்கின்றேன். பொருளாதார வளம் குறைந்த ஒரு சில குடும்பத்து பிள்ளைகள் தவிர ஏனையோரது கற்பதற்கான வசதி வாய்ப்புகளையுடையவர்களாயிருந்தனர். பாடவிதான செயற்பாடுகள் இணைபாடவிதான செயற்பாடுகளில் முன்னணியில் திகழ்ந்த பாடசாலையாகவிருந்தது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் மாணவர் தொகையில் 2ம் இடத்தையும் பெறுபேறுகளினடிப்படையில் மூன்றாம் நிலையில் இருந்தது. இப்பாடசலையின் வளர்ச்சிப் பாதையில் பழைய மாணவர்களின் பங்களிப்பு மிகவும் உன்னதமானது,

இடப்பெயர்வின் பின் இப்பிரதேச குடும்ப அமைப்புகளின் அடிக்கட்டு மானங்கள் சிதைவடைந்து போயிந்தது. பாடசாலை இடம் பெயர்ந்து வசாவிளான் மத்திய கல்லூரியுடன் இணைந்து இயங்கிக் கொண்டிருந்தது. குடும்பங்களின் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. வளமான குடும்பங்கள் யாவும் இப்பிரிதேசத்தை விட்டு வெளியேறிவிட்டன. இப்பிரதேசம் சார்பாக 100 குடும்பங்கள் வரை கனடாவில் வாழ்ந்து வருவதை நான் அங்கு சென்றவேளை அவதானிக்க கூடியதாகவிருந்தது.

இந்நிலையில் வேறு பிரதேசங்களிலிருந்து இப்பிரதேசங்களில் வருகை தந்து குடியேறிய மக்களின் பிள்ளைகளின் வருகை இப்பாடசாலை கலாசாரத்தில் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியுள்ளது.

அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாமலும் தந்தையை அல்லது தாயை அல்லது இருவரையும் பிரிந்த நிலையில் வாழும் பிள்ளைகளின் பாடசாலை வரவினை உறுதிப்படுத்துவதே பெரும் சவாலாக உள்ளது. இந்நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் அடைவுமட்டத்திலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நீண்டகாலமாக இப்பாடசாலையில் நிலவிய ஆசிரியப்பற்றாக்குறையானது பெறுபேறுகளின் வீதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட போது குடும்பங்களின் கல்விக்கான ஈடுபாட்டில் காணப்பட்ட அக்கறையற்ற தன்மையானது பெரும் தாக்கத்தை ஏற்பத்தியுள்ளது. அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை யும் இப்பிரதேச மாணவர்களின் அடைவு மட்டத்தில் வீழ்ச்சியை ஏற்பத்தியுள்ளது. பற்றைப் பகுதிகளுக்குள் பாடசாலை மாணவர்கள் பதுங்கி இருக்கும் செயற்பாடு களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் நேரம் கடந்து செல்கிறது.

இத்தகைய இடர் நிறைந்த நிலையிலும் 2013ம் ஆண்டில் இப்பாட சாலைக்குள் மாற்றங்கள் பெருமளவில் ஏற்பட்டதை எனது அனுபவம் உணர்த்து கிறது. மாணவர்களின் ஒழுக்கம், பெறுபேறுகள் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளது. 22 மாணவர்கள் மாகாணமட்டம் தேசிய மட்டங்களில் சாதனையாளர்களாக உள்ளனர். பாடசாலை நூலகமானது வடமாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. கற்றல் வளநிலையமானது தரம் 13 மாணவி செல்வி. சோபானாவின் நேர்கோடுகள் வளைவதில்லை என்ற சிறுகதைத் தொகுதியை வெளியீடு செய்திருந்தது. வணிகப் பிரிவில் செல்வன் தி.புஸ்பரூபன் 3A சித்திபெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளான்.

எனினும் இவற்றையிட்டு எம்மால் திருப்தி கொள்ள முடியவில்லை. இப்பாடசாலை இன்னமும் பல படிநிலைகளைத்தாண்ட வேண்டியுள்ளது. வகுப்பறைப் பற்றாக்குறை தீர்க்கப்பட வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடம் அமைக்கப்பட்ட வேண்டும். அடிப்படை வசதிகளற்ற குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். பலநோக்கு மண்டபம் அமைக்கப்படவேண்டும். குடும்பங்களிடையே காணப்படும் குடும்பங்

களிடையே காணப்படும் பகைமை உணர்வை குறைப்பதற்கான வினைத்திறன்மிக்க அமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். எனது அனுபவத்தில் நான் நினைத்துப் பார்த்தவை இவை.

இன்றைய இனிய நாளை வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகள். இப்பாடசாலையை வளர்த்தெடுப்பதற்காக அர்ப்பணிப்போடு உழைத்த முன்னாள் அதிபர்களை சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன். இன்றைய நிலைக்கு உயர்த்த அரும்பாடு பட்டுழைத்த ஆசிரியப் பெருந்தகைகள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். எதிர்காலத்தில் இப்பாடசாலை யின் வளர்ச்சிக்கு அனைத்துத் தரப்பினரும் சேர்ந்து உழைக்கவேண்டும். இதற்காக எல்லாம் வல்ல இறையருளை பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம்
அதிபர்

# எங்கள் அதிபர்




திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம்

SLEAS - III

# அள்ளி கொடுத்த பாரி பாபுவை நினைந்து......

அன்போடு பண்பு
ஆறறிவு - மானிடர்க்கு
ஆண்டவன் கொடையல்லோ?
என்பொடு தோலால் - யாக்கை
என்று வரை நிலைத்திடும்?
என்றெண்ணியோர்................

பண்போடு
பிறர் நலன்பேணி
என்பழிந்தாலும் - பெயர்
என்றும் நிலைத்திருப்பர்

ஆண்டவனுக்கு ஆலயம் கோடி
ஆண்டு தோறும் விழாவெடுக்க......
ஆயிரம் கோடி கோடி
ஆற்றுவோரே இங்கு கோடி

ஏழைகள் வாழ்வில்
கல்வி ஈந்திட நாடி
கல்விச்சாலைகள் தேடியோடி
காணிக்கையளித்த
வள்ளல்கள் - இங்கு
எத்தனை கோடி?

எழுத்தறவிக்க - ஈந்த
நன்கொடையால்
பாபு - நீ
என்றும் இறையல்லோ!

ஆண்டவன் கணக்குமுடிந்து
மாண்டு தான் போனாலும்
ஆண்டு விழாவின்று - உன்
ஆற்றல்கள் கண்டு ..........
என்னுளம்
பள்ளி நுழைவாயில்
படித்திட வகுப்பறை
பரிசளிப்பு விழா என எண்ணி வியந்து
துதிபாடியுருகி அஞ்சலிக்கின்றது.

அதிபர்

# எங்கள் பிரதிஅதிபர்



திருமதி. சுசீலா செல்வராஜா

SLTS - I



# பிரதி அதிபர் உள்ளத்திலிருந்து...

நீண்ட வரலாற்றைக் கொண்ட நாவற்குழி மகா வித்தியாலயத்தின் 146 வது மலர் வெளிவருவதையிட்டு மகிழ்வு கொள்கின்றேன். 1993ம் ஆண்டில் இப்பாடசாலையில் ஆசிரியராகக் காலடி வைத்த நான் 2002ல் பிரதியதிபராக பொறுப்பேற்று கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன். எமது பாடசாலையானது மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்த போது நாட்டுச்சூழல் காரணமாக இடையில் நலிவு பெற்றிருந்தாலும் மீண்டும் புதுப்பொலிவுடன் இன்று வேகமாக சகல வழிகளிலும் மேம்பாடு கண்டு கொண்டிருப்பதையிட்டுப் பெருமையடைவதுடன் மேலும் வளரவேண்டும் என நல்லாசி கூறி நிற்கின்றேன்.

**திருமதி.சு. செல்வராசா**
பிரதி அதிபர்



# இதழாசிரியர் இதயத்திலிருந்து....

எண்ணங்களாயிரம் சிந்தையில் கணம் கணம் ஓடினும் எண்ணங்களை ஒழுங்குபடுத்தி இன்றைய எண்மிய உலகோடு ஒட்டி மாணவர்களை வழிப்படுத்த வேண்டிய தேவை பள்ளிகளுக்குண்டு. அவ்வகையில் கலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக இணைப்பாட கலைத்திட்டத்தினூடு எமது வரலாறு,பண்பாடு, கலாசாரங்களை கடத்தவேண்டியும் உள்ளது. அவ்வகையிலேயே மலர் வெளியீடும் களம் கொடுக்கும்.

இதனூடு மாணவர்கள் ஆக்கமலர்ச்சி சிந்தையுடையவர்களாக உருவாவ தோடு அறிவியலாளர்களாவதும் திண்ணம்.

சுப்பிரமணியம் சுதர்சன்
ஆசிரியர்.

# ஆசிரியர் அணி–2014



## ஆசிரியர் அணியில் புதிதாக இணைந்தோர் – 2015



# J/Navatkuli Maha Vidyalayam

## Teacher's Particular

| No | Teacher's Name | Grade | Qualification |
|---|---|---|---|
| 01. | Mrs.V.Mehalingam | SLPS – 1, SLEAS - 111 | BA,Dip.in.Edu |
| 02. | Mrs.S.Selvarajah | SLTS - 1 | BA,Dip.in.Edu |
| 03. | Mrs.K.Anpalagan | SLTS 3-1 | BA |
| 04. | Mrs.I.Sivakurunathan | SLTS 2- 11 | Primary Trained |
| 05. | Mrs.P.Angashan | SLTS 2- 11 | Primary Trained, BA,Dip.in.Edu |
| 06. | Mrs.S.Nadarajakumar | SLTS 2- 1 | BA,Dip.in.Edu |
| 07. | Mrs.K.Selvamoorthy | SLTS 3-1 | BFA (Music) |
| 08. | Mrs.K.Annamalai | SLTS 2- 11 | BFA (Music) |
| 09. | Mrs.R.Rajadurai | SLTS 2- 11 | BA,Dip.in.Edu |
| 10. | Mrs.Asha Damayanthi | - | Dip.in Sinhala Contract |
| 11. | Mrs.G.Chandrakumar | SLTS - 1 | Sp.Trained Home Economics |
| 12. | Mrs.I.Nithiyanantharajah | SLTS 2- 11 | Dip.in.Teaching Primary, BA |
| 13. | Mrs.P.Thamilchchelvan | SLTS 2- 11 | BA,Dip.in.Edu |
| 14. | Mrs.S.Sivakumar | SLTS 2- 11 | Dip.in.Teaching Home Economics |
| 15. | Mrs.S,Srikanthan | SLTS 2- 11 | BA, Dip.in.Edu |
| 16. | Mrs.V.Selvakumar | SLTS 2- 11 | B.Com, Dip.in.Edu |
| 17. | Miss.K.Iyaththurai | SLTS 2- 11 | Dip.in.Teaching Primary |
| 18. | Mrs.M.Abraham | SLTS 3-1 | Primary Trained |
| 19. | Mrs.T.Satheeswaran | SLTS 3-1 | Dip.in.Teaching Primary |
| 20. | Mrs.J.Srikaran | SLTS 2- 11 | Primary Trained |
| 21. | Mrs.S.Thevarajah | SLTS - 1 | Sp.Trained Science, BA, Dip.in.Edu |
| 22. | Mrs.V.Subaschandrabose | SLTS 2- 11 | B.Com, Dip.in.Edu |
| 23. | Mrs.N.Thanikasalam | SLTS 2- 11 | BA, Dip.in.Edu, M.Ed |
| 24. | Miss.Y.Nadarajesunderam | SLTS 2- 11 | Sp.Trained English, BA, Dip.in.Edu |
| 25. | Mr.K.Murale | SLTS 3-1 | B.C.A |
| 26. | Mr.K.Tharmarasa | SLTS 2- 11 | BA, Dip.in.Edu |
| 27. | Mr.S.Sutharsan | SLTS 3-1 | BA, Dip.in.Edu |
| 28. | Mr.S.Jebanesan | SLTS 2- 11 | Sp.Trained R.C, B.Ed |
| 29. | Mr.R.Suthan | SLTS 2- 11 | Primary Trained, B.Ed |
| 30. | Mr.S.Saththiyasagebaba | SLTS 2- 11 | BA, Dip.in.Edu |
| 31. | Mr.I.Theivendran | SLTS 2- 11 | Sp.Trained Agriculture |
| 32. | Mr.T.Mathiparan | SLTS 3-1 | Dip.in.Teaching Social Studies, BA, Dip.in.Edu |
| 33. | Mr.T.Sivakumar | SLTS 2- 1 | Sp.Trained P.Ed |
| 34. | Mr.S.Selvaranjan | SLTS 2- 11 | Sp.Trained Maths, BA |
| 35. | Mrs.S.Sivasarananathan | SLTS 2- 1 | Sp.Trained Science |
| 36. | Mr.T.Thulasikaran | SLTS 2- 11 | BFA (Art), Dip.in.Edu, Dip.in.Counselling, Dip.in.Human Rights |
| 37. | Mr.P.Srikanthanesan | SLTS 2- 11 | BA, Dip.in.Edu, M.Phil.Q |
| 38. | Mrs.K.Sivananthan | SLTS 2- 11 | Dip.in.Dance, Dip.in.Edu |
| 39. | Mrs.K.Ketheeswaran | SLTS 2- 11 | Primary Trained, BA, Dip.in.Edu |

# வரலாற்று இயல்

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

ஒழுக்கமும் கல்வியும் உயிரெனப்படும்

நாவற்குழி

# பாடசாலை இலச்சினைத் தத்துவம்

## இருவட்டங்கள்

1. நாவற்குழிச் சமுதாயம்
2. நாவற்குழிச் சமுதாயத்திற்கான பிரஜைகளை உருவாக்கும் உள்ளங்கமான பாடசாலை

## மகுட வாசகம்

சமுதாயத்தின் உயிர்கள் இரண்டு

1. ஒழுக்கம்
2. கல்வி

## நெற்கதிர்கள்

1. சமூக பொருண்மிய சுட்டி
2. முற்றிய நெற்கதிர்போல் பணிவு
3. பிறர்க்காக உதவும் பண்பு

## விரித்த புத்தகம்

1. தொடர் கற்றல்

## குத்துவிளக்கு

1. எம் கலாசார அடையாளம்
2. ஞான ஒளி
3. அறியாமை அகற்றல்
4. பிறருக்கு வழிகாட்டியாக அமைதல்
5. உயர உயர கூர்மையான அறிவை பெறவேண்டும் என்பதை சுட்டும்

## வீணை

1. வாசிப்பவர் கையிற்கேற்ப நாதம் ஏற்படுவது போல கற்றற்களமாக உள்ள பாடசாலை
2. மென்மையானவரும் சமூகத்துடன் இணைத்து வாழலாம் என்பதைச் சுட்டும்

## மிருதங்கம்

1. பக்கவாத்தியம் போல சமுகத்திற்குப் பக்கபலமாக அமைதல்
2. வன்மையானவர்களும் சேர்ந்து வாழவேண்டும் என்பதைக் குறிக்கும்

## நிறங்கள்

1. நீலம் - பரந்த மனப்பான்மை
2. வெள்ளை - தூய்மை. ஒற்றுமை.இணைந்து வாழல்
3. மஞ்சல் - மங்கலகரம். ஞானம்

# நாவற்குழி மகா வித்தியாலய வரலாறு ஒரு பார்வை

தொகுப்பு:
தி.மதிபரன்
ஆசிரியர்,யா/நாவற்குழி ம.வி

யாழ் மாவட்டத்தின் தென்மராட்சி வலயத்தின் 1C தரப் பாடசாலையாக யா/நாவற்குழி மகாவித்தியாலயம் தற் பொழுது திகழ்ந்து வருகின்றது. வளர்ந்து வரும் தென்மராட்சி முன்னணிப் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். 19ம் நூற்றாண்டின் பிற்காலப் பகுதி தொடக்கம் இற்றைவரையான கல்விப் புல வரலாற்றைக் கொண்ட சிறப்புக் குரிய பாடசாலையாகத் திகழ்கின்றது.

ஆயினும் இப்பாடசாலை வரலாறு தொடர்பான எழுத்து மூலாதாரங்கள் பூரணமாகக் கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில் எமது பாடசாலையின் வெளியீடான "இளந்தளிர்" சஞ்சிகையில் ஆசிரியர் திரு.க.சந்திரசேகரம் அவர்களால் தொகுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையினை அடியொற்றியும், பாடசாலை சம்பவத் திரட்டுப் புத்தகத் தகவல்களிலிருந்தும், ஊர்ப்பெரியவர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரிடம் பெற்ற நேர்காணல் தகவல்களின் ஊடாகவும் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இதுவரை பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் துரதிஷ்டவசமாகப் பாடசாலை ஸ்தாபகர் பற்றியோ, பாடசாலை தொடக்க காலம் பற்றியோ அறியமுடியவில்லை. ஆனால் மேற்குறிக்கப்பட்ட "இளந்தளிர்" கூற்றின் அடிப்படையிலும், பழைய மாணவன் திரு.செல்லப்பா தம்பிராசா அவர்களின் கூற்றுப்படியும், அதிபர் அ.செல்லத்துரை அவர்களின் தேடுதலின் அடிப்படையிலும் பாடசாலையின் தொடக்க ஆண்டாக 1868ம் ஆண்டு தீர்மானிக்கப்படுகின்றது.

இலங்கை வரலாற்றில் அக்காலம் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட காலம் ஆதலால் அவர்கள் தமது நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காகவும், தமது சமயத்தைப் பரப்புவதற்காகவும் இலங்கையில் பல கல்விக் கூடங்களை அமைத்தார்கள். அந்த வகையில் கிறிஸ்தவ திருச்சபையினால் நாவற்குழியில் 1868ம் ஆண்டு ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இங்கு கீழ்ப்பிரிவு தொடக்கம் 5ம் வகுப்புவரை இருந்தமை உறுதிப்படுத்தப்படுகின்றது. 22 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் கிளையாக இருந்து வந்துள்ளது. ஆரம்ப காலத்தில் இப்பாடசாலை நாவற்குழி சி.எம்.எஸ் என்ற பெயரைக் கொண்டிருந்துள்ளது. இதன் ஆரம்ப தலைமை ஆசிரியராக திரு. தம்பு அவர்களும், ஆசிரியர்களாக திரு.சட்டநாதன், திரு.சரவணமுத்து, திருமதி.நேசம் ஆகியோரும் கடமையாற்றினர்.

இப்பாடசாலைக்குப் போட்டியாக 1944ல் இந்துப்பாடசாலை ஒன்று "ஸ்ரீ கணேசகுக பாடசாலை" என்ற பெயரில்

ஆரம்பிக்கப்பட்டது. இதிலிருந்து இப் பாடசாலை கிறிஸ்தவ திருச்சபை யினால் ஆரம்பிக்கப் பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

1868 தொடக்கம் 1925 வரையான காலப்பகுதியில் பாடசாலையின் வளர்ச்சி பற்றியும், செயற்பாடு பற்றியும் அறியும் முயற்சி எமக்குத் தோல்வியைத் தந்தது. இதனைத் தொடர்ந்து 1925 காலப்பகுதியில் புதிய தலைமை ஆசிரியர் எஸ்.எம்.சீவரத்தினம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவரது காலத்தில் ஆசிரியர்களாக திரு.பி.சீவரத்தினம், திரு.கே. சங்கரப் பிள்ளை, திரு.கீ.இராசையா, திரு.பரம சாமி, செல்வி.ரி.அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினர்.

1934ம் ஆண்டு இப்பாடசாலை உதவி நன்கொடை பெறும் அந்தஸ்து பெற்றது. இது இப்பாடசாலையின் உன்னத வளர்ச்சி ஆகும்.

1939ம் ஆண்டு இப்பாடசாலையின் புதிய தலைமை ஆசிரியராக திரு.டி.பி. சீவரத்தினம் அவர்கள் கடமையேற்றார். இவரின் முயற்சியினால் இப்பாட சாலை 6ம் வகுப்புவரை உயர்த்தப் பட்டது. 1944ம் ஆண்டு இப்பாட சாலைக்குப் போட்டியாக ஒரு இந்துப் பாடசாலை "ஸ்ரீ கணேசசுக" என்ற பெயரில் இந்துச்சபையினால் ஆரம்பிக்கப் பட்டபோதும் அதிபர்.டி.பி. சீவரத்தினம் அவர்களால் இந்துப்பாடசாலை மூடப்பட்டது. 1946ம் ஆண்டு இப் பாடசாலை அரசினால் கையேற்கப் பட்டு நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாகப் பெயர் மாற்றப்பட்டது. இவரது காலத்தில் 40'x20' நீள அகலமான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும் நம்பப் படுகின்றது. 1950ம் ஆண்டு செபம் சொல்வது நிறுத்தப்பட்டு தேவாரம் சொல்வது ஆரம்பிக்கப்பட்டது.

1951ம் ஆண்டு திரு.அ.செல்லத்துரை அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையேற்றார். இவர் பதவி வகித்த காலத்தில் இப்பாடசாலையில் வகுப்புக்கள் வருடாவருடம் கூடி SSC வரை தரம் உயர்த்தப்பட்டது. 1958ம் ஆண்டு தேசிய திட்டப்படி பல பாடசாலைகள் மகாவித்தியாலயம் என்று தரமுயர்த்தப் பட்டன.அப்போது நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப் பட்டது. இவரது காலத்தில் 100" மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் வகுப்புக்கள் க.பொ.த சாதாரண தரத்துக்கு உயர்த்தப் பட்டன. முதன் முறையாகக் க.பொ.த சாதாரண தரத்துக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக இணைப்பாடவிதான செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு விளையாட்டு இடத்திற்கான காணித் தேவை உணரப்பட்டு திரு.வி.என். சீவரத்தினம் என்பவரால் அதிபர், ஊர்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலைக்கு வடக்கே இருந்த காணி சுவீகரிக்கப்பட்டது. இங்கு தலைமையாசிரியர் திரு.அ.செல்லத்துரை அவர்கள் பாடசாலைக்கு ஆற்றிய சேவையினைக் குறிப்பிட்டேயாக வேண்டும். அவர் தனது தாயாருடன் பாடசாலையில் தங்கியிருந்து பாடசாலைக்கு முழு நேர சேவையினையும் வழங்கினார்.

தொடர்ந்து இப்பாடசாலையின் அதிபராக கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்பித்த திரு.எச்.டபிள்யூ.

நெந்தானியல் எனும் கலைப்பட்டதாரி தற்காலிக அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் 400 மாணவர்கள் கல்வி கற்றமையும், அரங்கின் பின்புறமுள்ள 60" மண்டபம் அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்வுகளாகும்.

1965ம் ஆண்டில் திரு.ஆர்.கந்தையா அவர்களும், 1972ம் ஆண்டில் திரு.எஸ்.எம்.ஈ.யோசப் அவர்களும், 1974ம் ஆண்டில் திரு.தி.தியாகராசா அவர்களும் அதிபர்களாகக் கடமையாற்றினர். அதிபர் திரு.தி.தியாகராசா அவர்களால் வ.ந.நவரத்தினம் பாராளுமன்ற உறுப்பினர்அவர்களின் நிதியுதவியினால் 80" நீளமான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது.

1977ம் ஆண்டு திரு.ஏ.சின்னத்துரை அவர்கள் இப்பாடசாலையின் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றார். இவர் பாடசாலைச் சமூகத்துடன் நல்லுறவைப் பேணிப் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்று இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். பொதுமக்களின் உதவியுடன் மின்சார வசதி செய்யப்பட்டது. 70" நீளமான அலுவலகமும், மரவேலைக் கூடமும் அமைக்கப்பட்டது. விஞ்ஞான ஆய்வுகூடம் ஆரம்பிக்கப்பட்டதோடு திரு.அம்பலவாணர் ஞாபகார்த்த நுழைவாயில் முகப்பும் அமைக்கப்பட்டது. அத்துடன் மாணவர்கள் தொகை 600 ஆக உயர்ந்ததுடன் வகுப்புக்களும் உயர்ந்தது.

1982ம் ஆண்டு திருமதி.ஆர். சூசைரத்தினம் பதில் அதிபராக சில காலம் கடமையாற்றினார். 1983ம் ஆண்டு திரு.எம்.ஏ.நாகராஜா அவர்கள் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் மகா வித்தியாலயத்தின் முன்றலில் 50" நீளமான மாடிக் கட்டடத்தின் கீழ்த்தளம் கட்டப்பட்டது. 6ம் திகதி 12ம் மாதம் 1985ம் ஆண்டு மேல்மாடிக் கட்டடம் கட்டுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. கீழ்த்தளக் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டது.

1986ம் ஆண்டு 4ம் மாதம் 6ம் திகதி கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.த.முத்துக்குமாரசாமி அவர்கள் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இவரது காலத்தில் 1989ம் ஆண்டு 2ம் மாதம் 8ம் திகதி மேல்மாடிக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன் அதனைவிடத் தனியார் ஸ்தாபன உதவியுடன் 25" நீளமான வகுப்பறையும், சைக்கிள் நிறுத்துவதற்கான கொட்டகையும், ஒலிபெருக்கி வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டன. பாடசாலையின் அபிவிருத்தி முழுமையான பங்களிப்பைப் பெற்ற பெருமை அவரையே சாரும். இவரது காலத்தில் கனகசபை செல்லப்பா திறந்த வெளி அரங்கு கட்டப்பட்டது. அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடனும், ஆசிரியர் பொதுமக்களின் உதவியுடனும் இம் மகா வித்தியாலயத்திற்கு சுற்றுமதில் கட்டுவிக்கப்பட்டதும் இவரது காலத்திலேயே ஆகும்.

01.01.1991ல் திரு.நா.சத்தியநாதன் அவர்களும், 1992ல் மயில்வாகனம் அவர்களும், 1993ல் திரு.பி.முத்துலிங்கம் அவர்களும், 1998ல் திருமதி.வ.மேகலிங்கம் அவர்களும், மீண்டும் 1999ல் திரு.பி.முத்துலிங்கம் அவர்களும் அதிபர் பதவிகளை அலங்கரித்தனர். இக்காலத்தில் திருமதி.வ.மேகலிங்கம் அவர்களால் மேற்குப் பகுதியில்

100" மதில் கட்டப்பட்டது தவிர இக்காலத்தில் நாட்டில் நிலவிய அசா தாரண சூழ்நிலை காரணமாகப் பாட சாலையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படவில்லை.

கடந்த 2000ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி யுத்த சூழ்நிலை காரணமாகப் பாடசாலை இடம்பெயர்ந்திருந்தது. அதேநேரம் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது அப்பாடசாலையின் அதிபராகவிருந்த ஆ.செ.நடராஜா அவர்களின் உதவியுடன் அதிபர் திரு.பி. முத்துலிங்கம் அவர்கள் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தைத் தனித்துவமாக இயக்கியமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

2003ம் ஆண்டு திருமதி.வ.மேக லிங்கம் அவர்கள் இப்பாடசாலையில் மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டதில் இருந்து.....

- 2004ல் சிறுவர் பூங்கா மகிழன் நடராசா அவர்களினால் 4 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு 04.06.2005ல் திறந்து வைக்கப் பட்டது.
- 2005ல் GTZ நிறுவனத்தின் நிதி யுதவியுடன் மலசலகூடம் அமைக் கப்பட்டது.
- 2007ல் மேற்குப்பக்க மதில் கட்டு வதற்கான அத்திபாரம் கட்டப் பட்டது.
- 2008ல் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் நிதியுத வியுடன் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டது.
- 06.10.2008ல் புதிதாகக் கணனி அலகு ஒன்று திருமதி.பத்மினி சிதம் பரநாதன், திரு.சுரேஸ் பிரேமச் சந்திரன் ஆகியோரின் நிதியுதவி யுடன் நிர்மாணிக்கப்பட்டது.
- 06.05.2009ல் திரு.மு.ஸ்ரீகாந்தன் அவர்களின் உதவியினால் நுழை வாயிலுக்கான அடிக்கல் நாட்டப் பட்டு 14.09.2009ல் திறப்புவிழா நடைபெற்றது.
- 05.11.2009ல் மனைச்சிற்பம் இறு வட்டு வெளியிடப்பட்டது.
- 11.11.2009ல் குழாய்க்கிணறு நிர்மாணிக்கப்பட்டது.
- 30.03.2011ல் C.D.P நிறுவனத்தி னால் 08 கணனிகள் வழங்கப் பட்டன.
- 20.07.2011ல் விஞ்ஞான ஆய்வு கூடம் இந்திகாகுணவர்த்தன அவர் களால் திறந்து வைக்கப்பட்டது.
- 2011ல் பின்புற மதில் அமைக்கப் பட்டது.
- 2011ல் உலக உணவுத்திட்டத்தில் சமையலறை அமைக்கப்பட்டது.
- 2012ல் World Vision உதவியுடன் சுகாதார அறை புனரமைக்கப் பட்டது.
- 17.05.2013ல் சேவாலங்கா நிறுவன த்தின் நிதியுதவியுடன் கற்றல்வள நிலையம் அமைக்கப்பட்டுப் பாரா ளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களால் நடன அறை திறந்து வைக்கப்பட்டது.
- 2014ல் துவிச்சக்கரவண்டித் தரிப் பிடம் சித்திவிநாயகர் சமூக அபிவிருத்திச் சபையின் நிதியுதவி யுடன் அமைக்கப்பட்டது.
- 2014ல் காலைப் பிரார்த்தனைக்

கான வழிபடும் இடம் திரு.தி. சர்வேஸ்வரன் ஆசிரியரி அவர் களின் நிதியுதவியினால் அமைக்கப் பட்டது.

- 2014ம் ஆண்டு க.பொ.த உயர்தரத் துக்கான வணிகத்துறை முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு அப்பிரி விலேயே மாணவன் ஒருவன் 3 பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றுப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டமை பாட சாலைக் கல்விப்புல வளர்ச்சியின் ஓர் முக்கிய மைற் கல்லாகும். இது மட்டுமல்லாது பல வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்டங் களிலும் எமது பாடசாலை பாட, இணைப்பாடவிதான செயற் பாடுகளில் முன்னணியில் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.
- இவ்வாறு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர் களின் அயராத அர்ப்பணிப்புடன் பாடசாலையானது 1AB தரத்தை நோக்கி விரைவாக வளர்ந்து வருகின்றது.



பாடசாலை அபிவிருத்திக் குழு



மாணவர் முதல்வர்கள் பொறுப்பாசிரியர்களுடன்...

# ஆக்க ஆய்வியல்



தரம்–01A

தரம்–01B





தரம்–02A

தரம்–02B





தரம்–03A



தரம்-03B

தரம்-04A





தரம்-04B

தரம்-05A





தரம்-05B

# சமுதாய மாற்றங்களில் பாடசாலைகளின் வகிபங்கு

பேராசிரியர். மா. சின்னத்தம்பி
ஓய்வுநிலைப் பேராசிரியர். யாழ். பல்கலைக்கழகம்

## அறிமுகம்

சமுதாயம் தனிநபர்களினால் உருவாக்கப்பட்ட ஒரு பொருளாதார, அரசியல், பண்பாட்டு அமைப்புமுறை. ஆனாலும் தனிநபர்களின் தொகுப்பு என்று மாத்திரம் அதனை நோக்க முடிவதில்லை. அது உயிர்ப்புடன் தொடர்ந்து ஒன்றிணைந்த முறையில் வளர்கின்றது. மாற்றங்களுக்கு உட்படுகின்றது. தொடர்ந்து மாற்றங்களுக்குட்படுவதனூடாக தடைசெய்ய முடியாத மாதிரியில் வளர்வது தான் சமூகம்.

இந்த சமூக மாற்றச் செயன்முறையில் பின்னால் இருக்கும் பலமான அமைப்புக்களாக பாடசாலைகளே இயங்கி வருகின்றன. சமூக மாற்றங்களை உருவாக்கும் வலிமை கொண்ட பல காரணிகளுடன் பாடசாலைகள் கொண்டுள்ள தொடர்புகள் அதிக முக்கியத்துவம் கொண்டனவாயுள்ளன. சமூக வாழ்க்கையுடன் பாடசாலை ஒன்றிணைவது தொடர்பான பல பிரச்சினைகள் கல்வி உலகில் கலந்துரையாடலுக்கான உட்பொருளாக இருந்து வருகின்றன.

இக்கட்டுரையானது சமூக மாற்றங்களுக்கும் பாடசாலையின் இயங்கியல் பண்புகளுக்குமான தொடர்புகளிலும் அது சார்ந்த பிரச்சினைகளும் கவனம் செலுத்துகிறது.

## சமூக மாற்றம் பற்றிய எண்ணக்கரு

சமுதாய மக்களது பண்பாட்டுக் கோலங்களில் ஏற்படும் மாற்றங்களையே சமூக மாற்றம் என்றும் அப்பண்பாடு பொருள் சார்ந்த பண்பாடு *(Material culture)* என்றும் பொருள் சாராத பண்பாடு (Non material culture) என்றும் இருவகைப்படுவதாகவும் ஒக்பேன் *(Ogburn)* விளக்க முற்படுகிறார்.

இந்த மாற்றங்கள் குறுகிய காலத்தில் சடுதியாக நிகழ்வதுடன் மக்களது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களினதும் மாறுதல்களை கொண்டு வருகின்றன. சமூகம் தன்னை பொருத்தமான வகையில் இவற்றுக்கேற்ப சீராக்கம் செய்தல் வேண்டும். அவ்வாறு சீராக்கம் செய்யத்தவறுமாயின் சமூகத்தின் எண்ணங்கள், நம்பிக்கைகள், விழுமியம் சார்ந்த ஒழுங்குமுறைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுவிடும். இது சமுதாய பின்னடைவை ஏற்படுத்திவிடும் என்பது ஒக்பேனின் வாதமாகும். இந்த மாற்றங்கள் மெதுவாக காலம் தாழ்ந்து நிகழ்கின்ற சமூகங்களே பின்தங்கிய சமூகங்களே விடுகின்றன என்பதே அவரது விளக்கமாகும்.

சில சமூக சிந்தனையாளர்கள் மாற்றங்கள் படிப்படியாக, ஒத்த மாதிரியில், முன்னேற்றகரமான முறையில் தான் நிகழமுடியும் என்றனர். ஹேபேட்ஸ்பென்கர் (Herbert Spencer)

இத்தகைய கருத்தை முன்வைக்கின்றார். இது பற்றி இவர் மேலும் விளக்கையில் குறைவான திருப்தியளிக்கும் சீராக்கங்களிலிருந்து மெதுவான செயல்முறையில் அதிக திருப்திதரும் சீராக்க நிலைக்கு சமூகம் தன்னை நகர்த்தும் என்கின்றனர்.

கார்ல்மாக்ஸ் *(Karl marx)* போன்ற சிந்தனையாளர்கள் சமூகமாற்றச் செயல்முறைகளுக்குப்பின்னால் தெளிவான இலட்சியங்கள் உள்ளன என்றும் அவை தீர்க்கமானதும் மதிநுட்பம் கொண்டதுமான திட்பமான எண்ணங்கள் கொண்டவர்களினால் வழிப்படுத்தப்படுகின்றன என்றும் விளக்குகின்றனர்.

மனிதர்களும் சூழலில் நிகழும் மாற்றங்களுடன் தம்மைப் பொருத்திக் கொள்வதற்கு ஏற்றதாக தம்மில் மாற்றங்களை செய்து கொள்கின்றனர். சமூகமும், தனிமனிதனும் இணைந்த வகையில் மாற்றத்துக்குட்படுகின்றனர்.

மனிதர்கள் தோற்றுவிக்கின்ற வாழ்க்கை நிலைமைகளிலும், அவர்களது உளப்பாங்குகளிலும், அவர்களது உடலியல் சார்ந்த, வாழ்வியல் சூழல் சார்ந்த நிலைமைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்களே சமூக செயன்முறையிலான மாற்றங்களாகி விடுகின்றன என்பது மக்லீவரின் *(Maclever)* விளக்கமாகும்.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலவுகின்ற சமூக ஏற்பாடுகளுக்கு அமைவான சமூக உறவுகளின் தன்மை அல்லது மாதிரியைத்தான் சமூகமாற்றமாக கருதவேண்டும் என்று டெல்பேர்ட் சி. மில்லர் *(Delbet C. Miller)* விளக்குகின்றார்.

பல்வேறு சிந்தனையாளர்களும் தெளிவு படுத்துகின்ற வகையில் நிகழ்கின்ற சமூகமாற்றமானது பல்வேறு வடிவங்களின் மாதிரியிலும், பல்வேறு விளைவுகளாகவும் வெளிப்படுத்துவதுண்டு. மாற்றங்கள் மிக விரைவாக வும் நிகழ்வதாலேயே சமூகத்தை இயக்கப் பண்பு மிக்க நிறுவனமாகவே கருத வேண்டியுள்ளது.

இத்தகைய சமூக மாற்றங்கள் பின்வரும் தன்மைகளுடன் நிகழ்கின்றன.

1) அரசியல் மாற்றங்கள் - அரசியல் அதிகாரங்களிலும், அரசின் நிர்வாக முறைமைகளிலும் ஏற்படும் மாற்றங்கள்.
2) பொருளாதார மாற்றங்கள் - உற்பத்திக்காரணிகளின் உடைமை, பயன்பாடு, பகிர்தல் உற்பத்திப் பாங்கம் என்பவற்றில் நிகழும் மாற்றங்கள்.
3) ஒழுக்கநிலை மங்களிலான மாற்றங்கள் - ஒழுக்கம் மற்றும் அற நிலைசார் எண்ணங்கள் சமய கோட்பாடுகள் போன்றவற்றில் நிகழும் மாற்றங்ள்
4) சமய மாற்றங்கள் - பல்வேறு சமயநிறுவனங்களிலும் நிகழும் மாற்றங்களிலும், சமய நடைமுறைகளில் நிகழும் மாற்றங்களும்
5) விஞ்ஞான மாற்றங்கள் - புதிய கண்டுபிடிப்புக்கள், அவை சமூக வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்கள், சமூக வாழ்வு பற்றிய புதிய சிந்தனைகளின் பரவல் என்பன.

இத்தகைய பன்முகப்பட்ட மாற்றங்களும் பௌதிக, உயிரியல், தொழிநுட்ப, பண்பாட்டு காரணிகளினால் தீர்மானிக்கப்படுகின்றன.

இத்தகைய பல்வேறு காரணி

கள் செயற்பட்டுவந்தாலும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் மிகவும் வலுவான காரணி கல்வி முறைமையும் அதன் செயற்பாட்டு ஒழுங்குமாகும்.

**வடபுலத்திலான சமூக மற்றும் கல்வி மாறுதல்கள்**

கடந்த பத்தாண்டுகளில் குறிப்பாக 2009 இல் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுற்றபின் வடக்குமாகாணத்தில் குறிப்பிடத்தக்க சமூகமாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

இப்பிரதேச உட்கட்டமைப்பு தொடர்பாக பாரிய மாற்றங்கள் ஏற்படு கின்றன. பெருந்தெருக்களின் உருவாக்கம் தென்னிலங்கை மக்கள் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளாக அதிக எண்ணிக்கையில் வருவதைத் தூண்டியுள்ளது.

அவர்களது நடையுடை, பாவனை, குழு உணர்வுமாதிரிகை, நுகர்வுப் பழக்கம், உறவுகளிலான தாராளபண்பு போன்றன இப்பிரதேச இளையவர்கள் மீது மறைமுகமான சமூகவாழ்வுபற்றிய புதிய எண்ணங்களை உருவாக்கியுள்ளது.

பாடசாலை மாணவர்களும், விளையாட்டு அணிகளும் அணியணியாக இங்கு வருதலும் கல்விப்பொருட் காட்சிகள், கல்விச்செயலமர்வுகள் நிகழ்வதும் இப்பிரதேச மாணவர்களிடம் புதிய அவதானங்களையும், உணர்வுகளையும், புதிய மாதிரி நடத்தைக்கோலங்களையும் உருவாக்கு கின்றன.

அ) தென்னிலங்கையில் இருந்து வந்து தொழில்செய்யும் தொழிநுட்ப வினைஞர்கள், தொழிலாளர்கள் வடபுலத்து திறன்கள் ஊழியர்களின் செயன்முறை எண்ணங்களிலும், உளப்பாங்கிலும் பல மாறுதல்களை ஏற்படுத்துகின்றன.

தொழிலாளர் உளவியல் (Labour psychology) தொழிலாளர் வேலை முறைப்பாங்கு, தொழிலாளர் பண்பாடு தொடர்பான அதிக மாற்றங்கள் நிகழ்கின்றன.

வறிய குடும்பத்து மாணவர்களும், பெற்றோரால் நன்கு பராமரிக்கப்படாத குடும்ப மாணவர்களும் பகுதிநேர உழைப்பாளர்களாக மாறுதற்குரிய சமூக ஊக்கம் இப்போது அதிகரித்து வருகிறது. அதிகரித்துவரும் கட்டுமானப் பணிகளில் கிடைக்கும் குறுங் கால தொழில்வாய்ப்பும் அபரிமிதமான நுகர்வு வாய்ப்புக்களும், பணவருமான அகலிப்புக்களும் கட்டிளமைப்பருவத்து பள்ளி மாணவர்கள் தொழில் உலகு நோக்கி நகர ஊக்கமளிக்கின்றது. படிப்புபற்றிய முன்னுரிமையை அவர்கள் மட்டத்தில் பின்தள்ளி வருகிறது.

ஆ) வெளிநாடவர்களின் குடுப்பங்கள் கூட்டம் கூட்டமாக வருதலும் அவர்களது நுகர்வுப்பழக்கம், செலவு மாதிரிகை, உடை அலங்காரம், அழகு சாதனங் களின் அபரிமிதமான பயன்பாடு, போன்றன பள்ளி மாணவர்களது மனோநிலையில் மாற்றங்களை உருவாக்கி வருகின்றது. பள்ளிப்படிப்பு என்பதை விடவும் வெளிநாடுகளுக்கு போவதற்கான அகநிலைத் தூண்டல்களை அவை வேகப்படுத்தியுள்ளன. "கற்பிதமான வசந்தவாழ்வு" அவர்களது மனதை அலைக்கழிக்கின்றது. இதனால் படிப்பு மீதான உண்மை நாட்டம் வெகுவாக குறைகின்றது. பாடசாலைகளில் வரவு ஒழுங்கீனம், இடைவிலகல், பொருத்தக்கேடான நுகர்வுகள் என்பன

ஊக்குவிக்கப்படுகின்றன. இவற்றால் பள்ளிப்பிள்ளைகளின் உணர்வுகளும், மனவெழுச்சிகளும், நடத்தையும், வாழ்க்கைப்பணியும் அதிக பாதிப்புக் குள்ளாகி வருகின்றது. இவை வெளிப் பகட்டு விளைவுகளை அதிகரிக்கச் செய்து கல்வியின் முக்கியத்துவத்தை பின்தள்ளி வருகின்றது.

போதிய கல்வி பெறாது வெளிநாடு சென்று திரும்பி வந்து ஊரில் ஆடம்பர திருவிழாக்களை நடாத்துபவர்களை யும், பலருக்கு பணத்தை அள்ளி வழங்கு பவர்களையும், பார்த்து அக்கரைகளில் தங்கமும் வைரமும் கொட்டிக் கிடப் பது போன்ற மாயை உணர்வுகளுக்குள் மாணவர்கள் அமிழ்ந்து போய்விட்ட னர். இது கற்றல் நாட்டத்தையும், கல்லூரிகள் மீதான மதிப்புணர்வையும் மிகவும் பாதித்துவிட்டது.

பல சமயங்களில் ஆசிரியர்கள் கூட தாம் புலம் பெயராதிருந்தமைக்காக மனம் வருந்தி விரக்தி நிலைக்கு உட்படு கின்றனர். இது கற்பித்தலிலான உண்மை ஈடுபாட்டை வெகுவாக இல்லாமற் செய்து வருகிறது.

இ) மேல்மாகாணத்தில் நிலை பெற்றிருந்த மேட்டுக்குடியினருக்கான முன்பள்ளிகளும், பன்மொழித்தேர்ச்சி வழங்கும் கல்வி நிறுவனங்களும், கணினிக்கல்வி நிறுவனங்களும் வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களின் வளா கங்களும், கற்பித்தல் மையங்களும் மாணவரது கற்றல்சார்ந்த கவனத்தை பல மாதிரிகளிலும் வேகமாக சிதைந்து வருகின்றன. கடினமாக முயன்று, நீண்ட நேரம் கற்று அரச நிதியில் உயர் கல்வி பெறுவதிலிருந்து வந்த நாட்ட மும் நம்பிக்கையும் உயர்தர மாணவரி டம் பெரிதும் தேய்ந்து போய்விட்டது.

"முயற்சியினால் உயர்கல்வி பெறல்" என்பதற்கு பதிலாக "பணச்செலவில் உயர்கல்வி பெறல்" என்ற வகையிலான கற்றல் உணர்வுசார் அசைவியக்கம் இப்பிரதேசத்தில் வலுப்பெற்று விட்டது. சித்திபெறாமை பற்றிய தீவிர உள வருத்தம் வெகுவாக இல்லாமற் போகின்றது.

ஈ) அதிவேகமாக நிகழ்ந்து வரும் நகர் மயமாக்கமும், நவீன மயமாக்க மும் உழைப்பாற்றல் ஏதுமற்ற கட்டிள மைப்பருவ மாணவர்களில் அபரிமித மான உயர்வுநிலை, நடத்தை நிலை சார்ந்த தாக்கவிளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இவை பாடசாலை செல்லு தல், தொடர்கல்வி பெறுதல், அதி ஊக்கத்துடன் பரீட்சைக்கு தயார் செய்தல் என்பவற்றில் மிகவும் வருந்தத் தக்க வகையிலான எதிர்நிலைத் தாக்கங் களை தொடர்ந்து உருவாக்கி வரு கின்றன.

13 ஆண்டுகால பாடசாலைக் கல்வி யில் அதிக ஊக்கத்துடன் செயற்படும் மாணவர்கள் இயல்பான புத்திசாலி மாணவர்களை விடவும் பரீட்சை அடைவுகளில் உன்னதம் காட்டக் கூடிய பரீட்சைமுறைகளும் நியமங் களும் உள்ளன. இதன்காரணமாக இடைநிலைப் புத்திசாலித்தனமும் கடின முயற்சியுமுடைய மாணவர் பலர் முன்பு மிகப் பெரிய உயர்கல்வி நன்மை களைப் பெற்றுவந்துள்ளனர்.

இந்த கற்றல் பற்றிய அணுகு முறையை மிகவும் மோசமாக பாதிக்கக் கூடிய மனோநிலைகளும், நடத்தை சார் எதிர்வினைகளும் உயர்தர மாண வரிடம் தற்போது அதிகரித்து வரு கின்றது. அத்தகைய வாழ்வியல் பண் பாடு (Teachers - Culture) வலுவுடன் பாதித்து வருகிறது.

மோட்டார் சைக்கிள், கைத் தொலைபேசி, ஒரு பாடத்தை பலரிடம் பலதடவை படிப்பதால் ஏற்படும் ரியூசன் கட்டணச் செலவு போன்றன மாணவப் பருவத்தை அதிக செலவு டையதாக மாற்றுவதோடு "கடினமாக கற்றல்" என்பதை அவர்களது முன்னு ரிமை விருப்பப் பட்டியலில் பின் நோக்கி நகர்த்தும்படி வற்புறுத்து கிறது.

இது தனிப்பட்ட மாணவன், அவனது குடும்பம், சமுதாயம் தொடர்பாக கல்விசார் விரயங்களை (Educational wattage) அதிகரிக்கச் செய்து வருவது புதிய சமுதாய கல்விச் செயன்முறைப் போக்காக உள்ளது.

இத்தகைய எதிர்த்திசையில் அதி கூடிய வலுவுடன் வேகமாக தொழிற் படும் பலகாரணிகளை பாடசாலை கள் எதிர் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

புதிய சூழல் மாற்றங்களைக் கருத்திற்கொள்ளாது தயாரிக்கப்பட்ட சுற்றுநிருபங்கள், பரிமாணங்கள், நியம ங்கள், தரங்கள், குறிகாட்டிகள் போன்ற அளவுகோல்களினடிப்படையில் பாட சாலைகளும், அதிபர்களும், ஆசிரியர் களும் கண்டிக்கப்படுவது பற்றிய மறுசிந்தனை தேவைப்படுகின்றது.

புதிய சூழலின் பிரதிபலிப்புக்கள் பாடசாலைகளில் இயல்பாக தென்படு கின்றன என்பதோடு பாடசாலைப் பண்பாட்டின் மூலக்கூறுகளையும் அவை காயப்படுத்தி வருகின்றன.

இவை பாடசாலைகளுக்கான புதிய சவால்களாகவும், பிரச்சினைகளாகவும், எழுவினாக்களாகவும் தோற்றமளிக் கின்றன.

**பாடசாலைகள் செய்ய வேண்டிய தென்ன?**

சமூக மாற்றத்தை புதிய திசைகளில் நெறிப்படுத்தும் எத்தனங்களில் பாட சாலைகள் ஒருங்கிணைந்து செயற்படத் திட்டமிடல் வேண்டும்.

புதிய சமுதாயப் பண்பாட்டு ஒழுங்குமுறையை கட்டுறுவாக்கம் (Constrution of new social order) செய் வதற்கான இலக்குகளை நிர்ணயம் செய்தல் அவசியம்.

மாணவர்களினதும், ஆசிரியர் களினதும் உளப்பாங்கு மாறுதல்களை அவதானிப்பதும் மதிப்பீடு செய்வதும் அவசியம். சிலர் இதனை நேரடியான கருத்தேற்றம் (Indoctrination) செய் வதன் மூலம் சாதிக்கமுடியும் என நம்புகின்றனர். எல்லாமட்டத்தில் ஒருமித்தகருத்தும் உணர்வும், செயற் பாடும் இது தொடர்பாக உருவாக்கப் பட்டாலும் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என ஜோன் டூயி (John dewey) தெளிவுபடுத்தியுள்ளார்.

எல்லா பொறுப்புதாரர்களும் இணங்குதலும் எல்லா நிலைகளில் பங்கு பற்றுதலும் தொடர்ந்து புதிய திசையில் செயற்படுதலும் அவசிய மாகின்றது.

பாடசாலைச் சமூகம், பாடசாலைத் தலைமை, மேலாண்மை அமைப்புக் கள், ஆசிரியர்கள், மாணவர், சிற்றூ ழியர், பெற்றோர் சார்ந்த கருத்தியல் உடன்பாட்டை உருவாக்கவேண்டியது மிக அவசியம்.

பாடசாலைகள் தாமாகவே கட்ட மைப்புடனும் அதிக பொறுப்புடனு மிருந்தால் சமூக மாற்றத்துக்கான மூலக் கூறுகளை நேரானமுறையில் தாமாக வே உருவாக்க (Production of social

change) முடியும். அதாவது சமூக மாற்றத்தின் நோக்கினையும் போக்கினையும் சிறந்த பாடசாலைக் கலாசாரங்களினால் உருவாக்க முடியும் சமுதாய நிகழ்வுகளுடன் முரண்படுவதற்கு பதிலாக அவற்றுக்குரிய எல்லைகளையும், நியதிகளையும் பாடசாலைகள் உருவாக்க முடியும் இவ்வாறு பாடசாலைகள் முன்பும் பல நாடுகளில் இயங்கி வந்துள்ளன. இத்தகைய இலக்குகளும் செயலாற்றங்களும் வலுவடையும் போது பாடசாலைகள் எதிர்கால சமுதாய ஒழுங்கினைத் தாமாக தீர்மானிக்கமுடியும்.

பாடசாலைகள் அதிகூடிய பொறுப்புக்களையும் (Responsibiuties) இடர் நேர்வு (Risks) களையும் மதிநுட்ப துணிவையும் (Courages Intelligence) ஒன்றிணைக்ககூடிய ஆற்றலைக் கொண்டிருந்தால் இது சாத்தியமாகும்.

காலத்தை உணர்ந்து அதன்படியான விழுமியங்களையும், மெய்மைகளையும், பிரதிபலிப்புக்களையும் பாடசாலைகள் வெளிப்படுத்த தம்மைத் தயாராக்க வேண்டும். பரீட்சை இலக்குகளுடன் இணைந்தோ, சுயமாகவோ இவற்றை பாடசாலைகள் மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலையில் ஒழுக்கவியல் மற்றும் ஒழுங்கியல்சார் நியதிகளை வலியுறுத்தும் பாடசாலை முகாமைத்துவம் நீண்ட காலத்தில் சமூக மாறுதல்களில் தனது பெறுமதி மிக்கதும் நேர்முறையானதுமான உள்ளீடுகளை நிச்சயமாக வழங்க முடியும்.

சமூகத்தின் மாற்றத்தின் முகவர்களான குடும்பங்கள், கோவில்கள், சனசமூக நிலையங்கள், தன்னார்வ நிலையங்கள், குடியியல் சமூகங்கள் என்பவற்றின் மீது வலுவான செல்வாக்கை பாடசாலைகள் செலுத்த முடியுமானால் புதிய சமுதாய பண்பாட்டு விருத்திக்குரிய சமுதாய உணர்வையும், சமுதாய பலத்தையும் உருவாக்க முடியும் என நம்ப முடியும்.

## முடிவுரை

யுத்தம் நடைபெற்று முடிந்த பின்பும் ஜப்பான்போன்ற நாடுகளிலும் இளம் தலைமுறையினரிடம் அவதான மாற்றங்கள் தென்பட்டன. சிரேஷ்ட குடிமக்கள் ஏற்றுக்கொள்ளாத நடத்தைக்கோலங்களுக்குள் இளைஞர்கள் சென்றிருந்தனர். இதனால் பண்பாட்டு அதிர்வுகளும் ஏற்பட்டிருந்தன.

எமது வட பிரதேசத்தில் மாணவர், தொழிலாளர், தொழில்முனைவோர், பெற்றோர், முதியவர்கள் போன்ற சமூக வலையமைப்பில் உள்ள எல்லாவகைப் பொறுப்புதாரர்களும் பாதிக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது.

புதிய தொழில்வாய்ப்பு பாடசாலை இடைவிலகுவோரையும் அதிகரிக்கச் செய்துள்ளது.

வெளிநாட்டவரின் வெளிப்பகட்டுச் செயல்கள் இளைஞர்களிடம் கல்வி மீது இதுவரை நிலவி வந்த நம்பிக்கையைத் தளர்த்தி விட்டது.

கல்விக்கு பல இலட்சங்களைச் செலவிடும் குடும்ப பண்பாடும் வளர்ந்து வருகின்றது.

குடும்பங்கள் உடைந்து பல உறுப்பினரும் பல நாடுகளில் தனித்தனி குடும்ப மாதிரிகளை உருவாக்கிக் கொண்டு உள்ளனர்.

இலங்கையில் தரப்படுத்தலினால் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டவர்களின் பிள்ளைகள் வெளிநாடு

களில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களில் அதிக பெருமை மிகு பட்டங்களையும் பெறுகின்றனர்.

தமிழர்களின் கல்வி, பொருளாதாரம், பண்பாடு, அரசியல் என்பன உலக மயப்பட்டு வருகின்றன.

இந்த புதிய நேர்முறை மற்றும் எதிர் முறை மாற்றங்களை முகம் கொடுக்கும் பாடசாலைகள் தமது செயற்படு பாங்கினை மாற்ற வேண்டும்.

பாடசாலைகள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை உள்வாங்கி அவை செயற்படலாம்.

பெற்றோர் ஒத்துழைப்பு, இளைஞர்களின் பங்குபற்றல், ஆசிரியர்களிலான தொழில்முறை மாற்றங்கள் என்பவற்றினால் சமூக மாறுதல்களுடன் இசைந்து செல்லும் வகையில் பாடசாலைகள் நிர்வகிக்கப்பட வேண்டும். "குறைபாடுகளுடன் முன்னேறுதல்" அல்லது "தவறுகளைப் படிப்படியாக அகற்றுதல்" என்ற அணுகுமுறைகளுடன் சமூக மாற்றத்தின் மூலக்கூறுகளை வடிவமைப்பதில் எதிர்காலத்தில் பாடசாலைகள் மிகப் பெரிய பொறுப்புடன் இயங்க வேண்டும் இதைப் புரிந்து கொள்ள எல்லோரும் இலக்குநோக்கி நகர்வோமாக.

## Reference


1. Dewey John (1957) Education and social change, Harward Educational Raview.

2. Floud, team and A.H. Halsey (1958) Education and social stracture; Theories and methods. curreut socialogy

3. Gross Ronald (Ed) (1963) The teacher and the tanght, A Delta Book.

4. Rai. B.C (1998) Education and Social Mobility Theory of Education, Prakasam Kendra

5. Rai B.C -(1988) Means of Agen lics of Social control, Education and socety, Prakasam kendra.

# பாடசாலைகளில் மாற்றங்களை முகாமித்தல்
# (Managing Changes in Schools)

பேராசிரியர். தை. தனராஜ்

"எம்மால் ஒரே ஆற்றில் இருமுறை கால் வைக்க முடியாது"

ஹெரகிலிற்றஸ் (கி.மு 540-480)

## அறிமுகம்

"மாற்றம்" என்னும் சொல்லைத் தவிர மற்ற எல்லாமே மாறிக் கொண்டிருக்கின்றன. மாற்றங்கள் மனித வாழ்க்கையின் சகல பரிமாணங்களையும் ஆக்கிரமித்துள்ளன. மாற்றம் பற்றிய பிரக்ஞை பண்டைக்காலத்திலேயே மனிதனிடம் காணப்பட்டது என்பதை சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கிரேக்க அறிஞரான ஹெரகிலிற்றஸின் மேற்படி கூற்றிலிருந்து புரிந்துகொள்ள முடியும். மனிதன் தனது தோற்றத்திலிருந்து தனது உடற்கூற்றிலும் தனது சூழலிலும் மாற்றங்களை அனுபவித்து வருகின்ற போதிலும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலின் (ICT) அசுர வளர்ச்சியினால் தற்காலத்தில் அபரிமிதமான மாற்றங்களுக்கு முகம் கொடுத்துவருகின்றான். மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல், கட்டுமானம், போக்குவரத்து, தொடர்பாடல் முதலான பௌதீக அம்சங்களிலும் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள, ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் மனிதனுடைய தோற்றத்திலிருந்து அவன் அனுபவித்துள்ள மாற்றங்களை விட அதிகமானவை என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆக மாற்றங்களை எவராலும் நிறுத்திவைக்கமுடியாது. மாற்றங்கள் என்பது மானிடவாழ்வின் தவிர்க்க முடியாத விதியாகும். எனவே தனி மனிதர்களுள், நிறுவனங்களும் மாற்றங்களை உள்வாங்கி அவற்றின் இயல்புகளுக்கு ஏற்ற வண்ணம் துலங்குவதன் மூலமே தப்பிப்பிழைக்கவும் முன்னேறவும் முடியும். பாடசாலை என்னும் நிறுவனமும் இதற்கு விதிவிலக்கல்ல. "மாற்றங்களுக்கு சீரிய முறையில் துலங்கும் உயிரிகளே உலகில் தப்பிப் பிழைக்கின்றன. அதீத பலமோ, நுண்ணறிவோ கொண்டவை அல்ல" என பரிமாணத்தின் தந்தையான சார்ள்ஸ் டார்வின் குறிப்பிட்டுள்ளார். எனவே எமது பாடசாலைகளும் உலகிலும், தேசத்திலும், சூழலிலும் ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களை உள்வாங்கி தம்மை மாற்றிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளன.

மாற்றங்கள் என்னும் கருத்து நிலையின் பல்வேறு அம்சங்களையும் சுருக்கமாக விளக்கி மாற்றங்களை பாடசாலைகளில் எவ்வாறு வெற்றிகரமாக முகாமிக்கலாமென இக்கட்டுரை கூற முற்படுகிறது.

### மாற்றங்கள் என்றால் என்ன?

எமது பௌதீக, உயிரியல் சூழலியலிலும் சமூக சூழலிலும் எந்நேரமும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இயற்கை

நிகழ்வுகளும் மாற்றங்களை ஏற்படுத்து கின்றன. இம் மாற்றங்கள் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருக்கின்ற காரணத்தால் மாற்றம் பற்றிய ஒரு பொதுவான வரைவிலக்கணத்தைத் தேடுவது கடினமாகும். மாற்றம் என்பது "வித்தியாசத்தை ஏற்றல் அல்லது ஏற்படுத்தல்" என எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம். "மாற்றம் என்பது வேறுபாட்டை உருவாக்குதல் அல்லது தானே வேறுபடுதல் வேறு பாடான வடிவத்தை வழங்குதல் அல் லது தானே ஏற்றல்" என ஹரிகோபால் (2007) என்பவர் மாற்றத்தை வரையறை செய்கிறார்.

நிறுவன மாற்றம் (Organizational Change) என்பது அந்நிறுவனத்தின் ஊழியர், கட்டமைப்பு அல்லது அதன் தொழிநுட்பவியலில் ஏற்படுகின்ற அல்லது ஏற்படுத்தப்படுகின்ற வேறு பாடாகும். ஊழியரில் மாற்றம் என்பது அவர்களது மனப்பாங்கு, எதிர் பார்ப்புக்கள், நடத்தையில் ஏற்படுகின்ற வேறுபாடுகளாகும். அமைப்பு மாற்றம் அதன் கட்டமைப்பு, கட்டுப்பாட்டு முறைகளிலும் தொழிநுட்பவியல் மாற்றம் என்பது உபகரணங்கள் மற்றும் பணிகள் செயன்முறைகளில் ஏற்படு கின்ற வேறுபாடுகளாகும். கடந்த சில தசாப்தங்களில் இலங்கையில் வங்கிகள், வர்த்தக நிலையங்கள் முதலிய தனியார் நிறுவனங்களிலும் இராணுவம் போன்ற அரச நிறுவனங்களிலும் பாரிய மாற்றங் கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு சமமாக எமது பாடசாலைகளும் மாற்றங்களு க்கு சார்பாக துலங்கியுள்ளனவா? பாடசாலையின் கட்டமைப்பு, கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள், மாணவர் கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதி காரிகளின் மனப்பாங்குகள், நடத்தை, எதிர்பார்புகளில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?

மாற்றங்கள் பிரதானமாக இரு வழிகளில் ஏற்படுகின்றன. முதலாவது தொடர்ச்சியாகவும் உள்ளார்ந்த ரீதி யிலும் ஏற்படுகின்ற மாற்றங்களாகும். இவை நுணுக்கமானவை. ஒரு முறைமை (System) யிலுள்ள கூறில் ஏற்படுகின்ற மாற்றம் படிப்படியாக அதன் சகல கூறுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தி இறுதியில் முழு முறை மையும் மாற்றத்துக்கு உள்ளாகிறது. இவ்வாறு ஏற்படும் நுணுக்கமான மாற்றங்கள் அந்த முறைமையின் சம நிலையில் தாக்கத்தை ஏற்படுத்து வதில்லை. உதாரணமாக மனித உடலை யும், எமது பிரபஞ்சத்தையும் இத் தகைய மாற்றங்களுக்கு உதாரணமாகக் கூறலாம். தொடர்ச்சியில்லாத வகை யில் வெளிவாரியாகவும் மாற்றங்களை ஏற்படுத்தமுடியும். நிலநடுக்கம், புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள், மற் றும் நிறுவனத்தலைவர்கள் ஏற்படுத் தும் அதிரடி மாற்றங்கள் முறைமையின் சமநிலையைப் பாதுகாக்கலாம்.

மாற்றங்கள் அடிப்படையில் இரு துருவத்தன்மை (bipolarity) கொண்ட வையாகும். தொடர்ச்சி-தொடர்ச்சி யின்மை, உறுதியானவை- உறுதி யற்றவை, எதிர்கூறக்கூடியவை-கூறமுடி யாதவை, உள்ளார்ந்த வெளிவாரியான என்றவாறு மாற்றங்கள் இருதுருவத் தன்மை கொண்ட ஒரு தொடர்பாக்கத் தில் அமைகின்றன.

**மாற்றங்கள் ஏன் பொதுவாக விரும்பப் படுவதில்லை?**

மாற்றங்கள் மனித வாழ்க்கையின் நியதி அவற்றை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது என்பது உண்மையாக இருந்தபோதிலும் பாடசாலை உட்பட எந்தவொரு நிறுவனத்திலும் ஒரு மாற்றத்தை அறிமுகப்படுத்தும்போது அம்மாற்றத்துக்கு எதிரான கருத்துக் களும் செயற்பாடுகளும் முன்வைக்கப் படுவது இயல்பாகும். "மாற்றங்கள் முன்னேற்றத்தை கொண்டுவருகின்றன. ஆனால் உலகம் மாற்றத்தை வெறுக் கிறது" என Charles kettering என்னும் தொழிலதிபர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

பாடசாலையில் ஏதாவது ஒரு மாற்றம் அறிமுகப்படுத்தப்படும்போது பின்வரும் கருத்துக்களைக் கேட்கலாம்.

"இதெல்லாம் சரிப்பட்டு வராது....."

"இது ஒரு நேர விரயம்...."

"இங்கு என்ன நடக்கிறது என்று சொல்லப்புரியவில்லை...."

"இதனால் எனக்கு என்ன பயன்..."

"இதெல்லாம் அமெரிக்காவுக்குப் பொருந்தும்..."

இவ்வாறு தொடங்கும் எதிர்ப் புணர்வுகள் பின்னர் அடிக்கடி லீவு எடுத்தல், அனாமதேயக் கடிதங்கள் எழுதுதல், பாடசாலை சொத்துக் களுக்கு சேதம் விளைவித்தல் போன்ற பல எதிர்மறை செயற்பாடுகளுக்கு வழி வகுக்கலாம். எனவே மாற்றங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமானால் சம்பந்தப்பட்ட பணி யாளர்கள் ஏன் அவற்றை எதிர்க்கிறார் கள் என்பதையும் விளங்கிக் கொள்வது முக்கியமானது மாற்றத்துக்கான எதிர்ப் புகளை

(அ) மனவெழுச்சிசார் எதிர்ப்புகள் (Emotional resistunce)

(ஆ) அறிவுசார் எதிர்ப்புகள் (Rational resistunce)

(இ) சமூக எதிர்ப்புகள் (Social resistunce)

என சில ஆய்வாளர்கள் வகுதிப் படுத்துகின்றன. ஹரிகோபால் (2007) மாற்றத்துக்கான எதிர்ப்புகளை பின்வரு மாறு வகைப்படுத்துகிறார்.

**[அ] கலாசார எதிர்ப்புகள்:**

மாற்றம் பற்றிய பணியாளரிடையே காணப்படுகின்ற வேறுபட்ட புலக் காட்சிகள், நீண்டகாலமாகப் பின் பற்றப்படும் ஒழுங்குவிதிகள், மரபுகள், நடைமுறைகள், பணியாளரிடையே காணப்படும் கவன ஈனம், நிறுவனத்தில் காணப்படுகின்ற முறைசார் மற்றும் முறையில் குழுக்கள் போன்றவை காரணமாக மாற்றத்துக்கான எதிர்ப்பு கள் முனைப்பு பெறுகின்றன.

**[ஆ] சமூக, அரசியல் எதிர்ப்புகள்:**

பணியாளரிடையே காணப்படும் நலன்கள் மோதல்கள் (Conflit of interest), வளங்களைப் பெற்றுக்கொள் வதற்கான போட்டி, நிறுவனத்தில் காணப்படும் வலுச்சமநிலைக்கு ஏற்படும் அச்சுறுத்தல் ஆகியவை மாற்றங்களைஎதிர்க்கத்தூண்டுகின்றன.

**[இ] துணை முறைமைகளின் எதிர்ப்புகள்:**

மந்த நிலையை அடைந்த நிறுவனத் தின் கொள்கைகள், விழுமியங்கள், நடைமுறைகள், புதிய தொழிநுட்ப வியல்கள், அறியாதவை பற்றிய அச்சம் (Fear of the unknown) ஆகியவையும் மாற்றத்துக்கான எதிர்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. மாற்றங்களுக்கு நிறுவனங்களில் (பாடசாலைமட்ட)


ஏற்படும் எதிர்ப்புக்களுக்கான காரணிகள் பற்றி பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து வெளிவந்த மாற்ற எதிர்ப்பு காரணிகள் பின்வருமாறு பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

- மாற்றங்கள் எவையாயினும் அவற்றை எதிர்க்க வேண்டும் என்னும் மனப்பான்மைகள்
- மாற்றத்தின் விளைவுகளை அறியாததன் காரணமாக ஏற்படும் அச்ச உணர்வு
- நிறுவனத்தில் காணப்படும் நம்பிக்கையீனம்
- தோல்வி ஏற்படும் என்னும் பயம்
- தனது தொழில் நிலைமை/ அந்தஸ்துக்கு ஏதும் குந்தகம் ஏற்படும் என்னும் எதிர்பார்ப்பு
- தான் சார்ந்திருக்கும் குழுவினரிடமிருந்து வரக்கூடிய அழுத்தங்கள்
- தனிநபரில் காணக்கூடிய ஆளுமை மோதல்கள் (Personality conflit)
- வெகுமதிகள் / பாராட்டுக்கள் அற்ற நிலை
- பொருத்தமற்ற நேரத்தில் மாற்றத்தினை அறிமுகச் செய்தல்.

மேற்படி காரணிகள் ஒன்றினாலோ அல்லது பலவற்றின் சேர்க்கையினாலோ நிறுவனங்களில் மாற்றங்களுக்கு எதிர்ப்புகள் தலையெடுக்கலாம். இந்த எதிர்ப்புகள் தனிநபர் எதிர்ப்பாக ஆரம்பித்து குழு எதிர்ப்பாக மாற்றமடையலாம்.

**மாற்றங்களை ஏற்படுத்துதல்**

மாற்றங்களை எற்படுத்துவதில் எத்தகைய அணுகுமுறைகளை ஏற்படுத்த வேண்டுமென்னும் ஆய்வுகள் நீண்டகாலமாகவே நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றில் மிகப் பழைய ஆய்வுகள் கேர்ற்லீவின் (Kurr Lewin,*1951)* என்பாரினால் முன்வைக்கப்பட்ட முப்படி மாதிரிகை (Three step Model) ஆகும். நிறுவன மாற்றம் மூன்று படிகளை மேற்கொண்டு இருக்க வேண்டுமென லீவின் கூறுகிறார். அவரது மாதிரிகை பின்வரும் உருவம் காட்டுகிறது.




**உருவம் 1: லீவினின் முப்படிமாற்ற மாதிரிகை மூலம்:** **Robins & Judge, 2008**

தளர்த்துதல் என்பது ஏற்கனவே பணியாளர் மத்தியில் ஊறிக்கிடக்கும் நம்பிக்கைகள், மனப்பாங்குகள், நடத்தைகள், நிறுவனக்கட்டமைப்புகள் போன்றவை நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பொருத்தமற்றவை என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்தலாகும். அதாவது தற்போதைய நிறுவன நிலைமைகள் பொருத்தமற்றவை என்னும் உளவியற் சூழல் முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தை மாற்றவேண்டுமெனில் அவ்வாறு மாற்றுவது மிகவும் அவசியமானது என்னும் மனப்பாங்கு சகல உரித்தாளர்கள் மத்தியிலும் ஏற்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறான நிறுவனம் ஏற்பட்ட பின்னரே குறிப்பிட்ட மாற்றம் அறிமுகஞ் செய்யப்பட வேண்டும். இந் நிலையில் அம்மாற்றத்தின் விளைவுகள் பற்றிய பின்னூட்டல் பெற்றுக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். மாற்றம் தொடர்பாக பயிற்சிகள், உதவிகள் தேவைப்படுகின்றனவா என்பது இந்நேரத்தில கண்டறியப்பட வேண்டும்.

மாற்றம் தொடர்பான உடன்பாடான துலங்கல்கள் தென்படுமாயின் புதிதாக அறிமுகஞ் செய்யப்பட்ட எண்ணக்கருக்கள், நடத்தைகள், நடைமுறைகள் என்பவற்றை மீள உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதையே மிகவும் இறுக்குதல் என்பது குறிக்கிறது.

*1996* இல் ஹார்வர்ட் பல்கலைக்கழக பேராசிரியரான ஜோன் கொற்றர் (John Kotter) தனதுஎட்டுப்படி மாற்ற முகாமைத்துவ திட்டத்தை முன்வைத்தார்.

இது பின்வரும் எட்டு படிகளைக் கொண்டிருக்கிறது.

1. மாற்றம் தேவைப்படுவதற்கான உறுதியான காரணங்களை முன் வைத்து அதனை அமுல் செய்ய வேண்டுமென்னும் ஆர்வத்தை உருவாக்குதல்.
2. மாற்றத்தை முன்னெடுத்துச் செல்ல அதிகாரமும் வலுவாண்மையும் கொண்ட ஒரு குழுவினை அமைத்தல்.
3. மாற்றத்துக்கான ஒரு புதிய தரிசன நோக்கினை (Vision) உருவாக்குவதோடு அதனை அடைவதற்கான மூல உபாயங்களையும் (Stategy) முன்வைத்தல்.
4. அப்புதிய தரிசன நோக்கினை முழு நிறுவனத்துக்கும் அறிமுகஞ் செய்தலும் பரவலாக்குதலும்.
5. தரிசன நோக்கில் செயற்படல், தடைகளை நீக்குதல், இடராபத்தை (risk)ஏற்றல், ஆக்கத்துறனுடன் பிரச்சினை தீர்த்தல் ஆகியற்றை மேற்கொள்ளக்கூடியதாக பணியாளரை வலுவூட்டல் (Empowering)
6. சிறுசிறு வெற்றிகளை அடையக்கூடிய விதத்தில் திட்டமிடல், அவ்வெற்றிகளைக் கொண்டாடுதல், அவ்வெற்றிகளின் மூலம் இலக்குகளை நோக்கி நிறுவனத்தை உந்தித்தள்ளுதல்.
7. மேம்பாடுகளை நிலைப்படுத்தல் மாற்றங்களை மதிப்பீடு செய்தல், தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
8. புதிய நடத்தைகளுக்கும் நிறுவனத்தின் வெற்றிக்கும் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்தி மாற்றங்களை மீளவும் உறுதிப்படுத்தல்.

லீவினுக்கும் கொற்றருக்கும் 47 வருடங்கள் இடைவெளி இருந்த போதும் கொற்றரின் எட்டுப்படிகளை லீவினின் மூன்று படிகளுக்குள் உள்ளடக்கலாம் போலத் தோன்றுகிறது.

மேற்படி இரு மாதிரிகளைத் தவிர ஆய்வாளர்கள் மேலும் பல மாதிரிகளை முன்வைத்துள்ளனர். அவை பற்றி இச் சிறு கட்டுரையில் விளக்க முடியாது.

**மாற்றங்களை முகாமித்தல்**

முகாமித்தல் என்பது ஒருவிடயத்தை திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி, நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தலாகும். கட்டுப்படுத்தல் என்பது இலக்குகள் அடையப்படுகின்றமை குறித்து

கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலு மாகும். மதிப்பீடானது தொடர்ச்சி யாகவும் இறுதியிலும் மேற்கொள்ளப் பட வேண்டும். இச் செயன்முறை மாற்றங்களை நிறுவனத்தில் அமுல் படுத்துவதற்கும் பொருத்தமானதாகும். மாற்ற முகாமைத்துவம் என்பது உண்மையில் நிறுவனத்தில் ஏற்படுத்த வேண்டிய மாறுநிலைகைளை உறுதிப் படுத்துவதை நோக்காகக் கொண்டு அதற்காக கட்டமைக்கப்பட்ட காலத் தை ஒன்றிணைப்பதாகும்.

மாற்றச் செயன்முறையில் பின்வரும் படிமுறைகள் முக்கியமானவை.

**1. நிறுவனச் சூழலை மதிப்பீடு செய்தல்.**

குறிப்பிட்ட மாற்றத்தை அறிமுகஞ் செய்வதற்கு முன்னர் அந்நிறுவனத்தின் அகச்சூழலில் உள்ள பலம், பலவீனங் களையும் புறச்சூழலில் உள்ள வாய்ப்புக் களையும் அச்சுறுத்தல்களையும் மதிப் பீடு செய்தல் வேண்டும். SWOT பகுப் பாய்வு (Strength /weakness/Opportunity/ Threat) எனக் கூறப்படுகிறது. மேற்படி மதிப்பீட்டினை மேற்கொள்ளும்போது நிறுவனத்தின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளவும் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான மாற்றகளை இனங்காண்பதற்கும் முடியுமாக விருக்கும்.

**2. மாற்றத்துக்கான செயற்றிட்டத்தை உருவாக்குதல்.**

மாற்றத்தை நடைமுறைப்படுத்து வதற்கு ஒரு செயற்றிட்டம் அவசிய மாகும். மாற்றத்தை அறிமுகஞ் செய் வதற்கான வளங்கள் யாவை, அவற்றை எங்கிருந்து பெறலாம், மாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப் பானவர்கள் யார், ஏதேனும் பிரச்சினை கள் தோன்றும் போது அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் முதலிய பல்வேறு அம்சங்களை இக்கட்டத்தில் திட்ட மிட்டுக் கொள்ள முடியும்.

**3.மாற்றங்களை நடைமுறைப்படுத்தல்**

திட்டமிடப்பட்ட மாற்றங்களை அமுல்நடத்த முனையும் போது பல எதிர்பாராத பிரச்சினைகள் தோன்ற லாம். நிறுவன உறுப்பினர்கள் சிலர் வெளிப்படையான எதிர்ப்புகளை வெளிப்படுத்தலாம். சிலர் மறைமுக மாக மாற்றங்களுக்கு எதிராக செயற் படலாம். ஆரம்பத்தில் தோல்விகளும் ஏற்படலாம். இங்கு நிறுவனத் தலை வரின் தலைமைத்துவ பாங்கு மிகவும் முக்கியமானது. பொறுமை, உறுதி, இலக்கினை அடையும் திடசங்கற்பம், வழிகாட்டுதல், ஊக்கப்படுத்தல் ஆகிய வை ஒரு தலைவருக்கு இன்றியமையாத வைகளாகும். சிறந்த தலைவர்கள் நிறு வனத்தின் தரிசன நோக்கத்தை (Vision) உருவாக்குவதோடு நின்று விடாது அத னை நிறுவன உறுப்பினர்கள் அனை வரையும் ஏற்கச் செய்கின்றனர். அது மட்டுமல்லாது அத் தரிசன நோக்கத்தி னை அடையக்கூடிய வகையில் அனை வரையும் ஊக்கப்படுத்து கின்றனர்.

**மாற்றங்களை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்**

அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங் களின் முன்னேற்றத்தை தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும். கண்காணித் தல் என்பது தீர்மானிக்கப்பட்ட செயற் பாடுகள் திட்டமிட்டபடி நடைபெறு கின்றனவா என்பதை உறுதி செய்வ தாகும். மதிப்பீடு என்பது திட்ட மிடப்

பட்ட செயற்பாடுகள் சரியான முறையில் நடைபெறுகின்றனவா என்பதை உறுதி செய்தலாகும். மதிப்பீடு என்பது தொடர்ச்சியாகவும் இறுதியிலும் மேற்கொள்ளப்படல்வேண்டும். மாற்றச் செயன்முறையை கண்காணித்து மதிப்பீடு செய்யும்போது அச்செயன் முறையில் சிறுசிறு மாற்றங்களைக் கொண்டு வர வேண்டிய தேவையும் எழக்கூடும்.

**மாற்றங்களை உறுதிப்படுத்தலும் புதிய மாற்றங்களைத் திட்டமிடலும்**

மாற்றச் செயன்முறையில்அடையப்பட்ட சிறுசிறு வெற்றிகள் கொண்டாடப்படவேண்டும். நிறைவு செய்யப்பட்ட மாற்றங்கள் உறுதிப்படுத்தப் படல் வேண்டும். மாற்றங்களை உறுதிப்படுத்தாவிடின் திரும்பவும் பழைய நிலைமை தோன்றிவிடலாம். லீவின் தனது முப்பரிமாற்ற மாதிரி கையில் குறிப்பிட்டதைப்போல் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவை முடிந்த முடிபல்ல. நிறுவனத்தின் மாற்ற செயன் முறையில் ஒரு குறிப்பிட்ட மாற்றம் உறுதிப்படுத்தப் பட்டதும் அடுத்த மாற்றத்துக்கான திட்டமிடல் ஆரம்ப மாகிறது.

**எதிர்ப்புகளை சமாளித்தல்**

நிறுவனங்களில் மாற்றங்களை அறிமுகஞ்செய்யும்போது எதிர்ப்புகளும் தடைகளும் ஏற்படுவது இயல்பாகும். ஆனால் அவை பொருத்தமான முறைமைகளில் முகாமை செய்யப்பட வேண்டும். முதலில் மாற்றங்களின் அவசியம், அவற்றினால் நிறுவனத்துக்கும் பணியாளருக்கும் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்து நிறுவன உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவூட்டப்படல்வேண்டும். அதுமாத்திரமன்றி மாற்றச் செயன்முறையின் ஒவ்வொரு கட்டம் பற்றிய செய்திகளும் விபரங்களும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். மாற்றச் செயன்முறையில் மாற்றத்தின் பயனாளிகள் பங்கு பெறுவதும் முக்கியமானது. பங்கேற்பு தீர்மானம் (Participative Decision making) மேற்கொள்ளல் என்பது குறித்த தீர்மானத்தினால் பாதிக்கப்படப் போகும் அனைத்து உறுப்பினர்களும் அத்தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்ற செயன்முறையில் பங்கெடுப்பதாகும்.

நிறுவன உறுப்பினர்களுக்கு மாற்றங்கள் பற்றி அறிவூட்டுதல், அவை தொடர்பான தொடர்பாடல்களை மேற்கொள்ளுதல், மாற்றச் செயன் முறையில் அவர்களைப் பங்கேற்கச் செய்தல் மூலம் மாற்றத்துக்கான ஆதரவையும் அர்ப்பணிப்பையும் அனைத்து தரப்பினரிடமிருந்தும் பெற முடியும். எந்த நிறுவனத்திலும் மாற்றச் செயன்முறைக்கு சிலர் உடன்பாடான மனப்பாங்கு கொண்டவர்களாக இருப்பர். நிறுவனத் தலைவர் அவர்களை முதலில் இனங்கண்டு அவர்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் ஏனைய உறுப்பினர்களது ஆதரவையும் காலப்போக்கில் பெற்றுக் கொள்ள முடியும். தனது அதிகாரத்தையும் வலுவாண்மையையும் பயன்படுத்தியும் கூட நிறுவனத்தலைவர் மாற்றங்களை நடைமுறைப்படுத்த இயலும். ஆனால் இது ஓர் எதிர்மறையான மாற்ற முகாமைத்துவ செயற்பாடாகும்.

## முடிவுரை

இக்கட்டுரையானது மாற்றம் பற்றிய வரைவிலக்கணம் அதன் இயல்புகள் மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகள், மாற்றங்களை நிறுவனங்களில் அறிமுகஞ் செய்யும் போது ஏற்படும் எதிர்ப்புகள், அவற்றை சமாளித்தல், வெற்றிகரமான மாற்ற முகாமைத்துவம் முதலான அம்சங்களை சுருக்கமாக முன்வைத்துள்ளது. நிறுவனங்களில் மாற்றங்களை வெற்றிகரமாக முகாமை செய்வதில் காத்திரமான பங்கு தலைமைத்துவம் சார்ந்ததாகும். தனது நிறுவனத்தின் மேம்பாட்டுக்கு என்னென்ன மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்பதைக் கண்டறிந்து அவற்றை அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவது ஒரு நிறுவனத் தலைவரின் பணியாகும். "மாற்றங்கள் வெகுவேகமாக நடைபெறுகின்ற ஒரு கால கட்டத்திலேயே நலம் வாழ்கிறோம். உண்மையில் நிகழ்காலத்தை விளங்கிக் கொள்ள முற்படுகையில் அது ஏற்கனவே மறையத்தொடங்கி இருக்கும்" என ஓர் அறிஞர் குறிப்பிட்டுள்ளார். எனவே மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாத நிறு வனங்கள் எதிர்காலத் துக்குப் பொருத்த மானவையாக கால இருக்கமாட்டா. இதில் பாடசாலைகள் விதிவிலக்கல்ல. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசியல், பொருளாதார, சமூக மற்றும் தொழிநுட்பவியல் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக்கூடிய மாணவர்களை உருவாக்க வேண்டுமெனில் பாடசாலைகள் மாற்றத்தை உள்வாங்கும் நிறுவனங்களாக மாற வேண்டும். அதற்கு முதற்படி பாடசாலைத்தலைவர்களும் ஆசிரியர்களும் மாற்ற முகாமையாளர்களாக தம்மை உருமாற்றிக் கொள்வதாகும்.

## உசாத்துணை


1. Harigopal, (2007), Managemeng of Organizatinal Change, New Delhi: Response Books.

2. Kotter, J. (2002) Leading Change, Harward: Harward Business School. Ramanarayan, S. (1998) Managing Organizatinal Change, New Delhi: Response Books.

3. தனராஜ் .தை (2011) மாற்றமுகாமைத்துவம், கொழும்பு: குமரன் புத்தக நிலையம்.

# தற்காகல ஜனநாயகம் ஒரு யதார்த்தநோக்கு

கலாநிதி. ச. பாஸ்கரன்,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
அரசறிவியற்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

இன்றைய உலகின் மகத்தான விழுமியங்களாக கருதப்படுபவைகளில் மிக முக்கியமான ஒன்று ஜனநாயகம். இது நல்லாட்சிக்கான அடிப்படைகளில் ஒன்றாகவும் சிறந்த ஆட்சிமுறைகளில் ஒன்றாகவும் குறிப்பிடப்படுகின்றது. இன்று உலகை ஆக்கிரமித்திருக்கின்ற ஒரு சிறந்தத்துவமாகவும் ஜனநாயம் இருக்கின்றது. பொதுவாக உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் அனைத்தும் ஜனநாயக நாடுகளாகவே இருக்கின்றன. ஒரு நாட்டை அளவிடும் அளவுகோலாக கூட இது இருக்கின்றது. ஒரு நாட்டிற்கான சர்வதேச அங்கிகாதரம் என்பது கூட அந்த நாட்டில் ஜனநாயம் எந்தளவில் இருக்கின்றது என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கின்ற முக்கியமான ஒரு தத்துவமாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உண்மையில் இந்த ஜனநாயம் உன்மையானதா? இது உலகப் பொதுவான தத்துவமாக கொள்ளப்படக் கூடியதா? எல்லா நாடுகளுக்கும் பொதுவானதா? பொருத்தமானதா? நிறையவே இருக்கின்றன. இதை ஆராய்வதே இந்தக்கட்டுரையின் நோக்கம்.

### ஜனநாயகத்தின் பொருத்தப்பாடு

ஜனநாயகம் என்ற தத்தவத்தின் மிக முக்கியமன அடிப்படை மக்கள். மக்களை மையமாக வைத்துக் மக்களாட்சி என்ற அடிப்படையிலே தான் ஜனநாயகதத்துவமே கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது. பெரும்பான்மையான மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதே ஜனநாயகத்தின் சிறம்பசம். உண்மையில் இவை நல்லவிடயங்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால் எல்லாநாடுகளுக்கும் இந்த ஜனநாயகம் பொருத்தமானதா? என்பது முக்கியமாக மூன்றாம் உலக நாடுகளுக்கு இது பொருத்தமானதா என்பது ஜனநாயம் எந்த சிந்தனை மேற்குலகில் இருந்து தோற்றம் பெற்று முழு உலக்குக்கும் பரவிய ஒன்று. இன்று இந்த ஜனநாயக முறை மேற்கத்தேய நாடுகளில் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக் கிறது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் இது சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக் கிறதா என்பது கேள்விக்குரியது.

ஜனநாயகம் என்ற தத்துவம் கருத்தளவில் பயனுடையதாக இருந்தாலும் செயற்பாட்டளவில் பயனுடையதாக இருக்கும்போதே அது சிறப்பானதாக செயற்படமுடியும். அந்தவகையில் நோக்குகின்றபோது இந்த ஜனநாயக தத்துவம் கருத்தளவிலும் செயற்பாட்டளவிலும் மேற்குலக நாடுகளுக்கு பொருத்தமானதாக இருக்கின்றபோதும் மூன்றாம் உலக நாடுகளுக்கு பொருத்தமானதாக அமையவில்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. பெரும்பான்மை மக்கள விருப்பம்

அல்லது தெரிவு என்பதே ஜனநாயகத்தின் அடிப்படை ஆனால் இந்த பெரும்பான்மை மதக்கள் என்பது அளவினடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இது குறைபாடுடையது. உண்மையில் பெரும்பான்மை மக்கள் என்பது அளவினடிப்படையிலும் தரத்தினடிப்படையிலும் தீர்மானிக்கப்பட வேண்டும். அப்போதே அது சிறப்பானதாக அமையமுடியும். உதாரணமாக தரமற்ற ஆயிரம் மக்களின் தெரிவைவிட தரமுள்ள நூறு பேரின் தெரிவு சிறப்பானதாகவும் பயனுடையதாகவும் இருக்கமுடியும். ஆனால் துரதிஸ்டவசமாக இங்கு தரமுள்ள நூறு பேரின் தெரிவைவிட தரமற்ற ஆயிரம் பேரின் தெரிவே ஜனநாயகமாக கொள்ளப்படுகின்றது. இது பொருத்தமாற்றது. உண்மையில் இதுவே ஜனநாயக தத்துவம் எதிர்கொள்ளுகின்ற மிக முக்கியமான பிரச்சினை.

### மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயம்

குறிப்பாக மேற்குலகை எடுத்துக் கொள்கின்றபோது இந்தப் பிரச்சினை மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஏனெனில் அங்கு பொதுவாகவே கல்வியறிவின் மேம்பாடும் அபிவிருத்தியடைந்த தன்மையும் மக்களின் தரத்தை அதிகரித்திருக்கிறது. எனவே மேற்குலகில் பெரும்பான்மை மக்களது விருப்பம் அல்லது தெரிவு என்கின்ற போது அது அளவினடிப்படையினதாக மட்டுமன்றி தரத்தினடிப்படையினதாகவும் இருக்கின்றது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் நிலைமை அவ்வாறில்லை. இந்த நாடுகள் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளாக இருக்கின்றமை மற்றும் இந்த நாடுகளில் கல்வியறிவு பெற்றவர்களது எண்ணிக்கை ஒப்பபீட்டளவில் குறைவாக உள்ளமை போன்ற காரணங்களால் இங்கு பெரும்பான்மை மக்களது விருப்பம் அல்லது தெரிவு என்பது பெருமளவுக்கு அளவினடிப்படையிலாக மட்டுமே காணப்படுகின்றது. இதை சிறந்த ஜனநாயகம் மூலம் இந்த நாடுகளில் ஆட்சியாளர் தெரிவு இடம் பெறுகின்ற போது தவிர்க்க முடியாதவாறு அந்த ஆட்சி முறையும் தரமற்ற ஆட்சிமுறையாகவே அமைய வாய்ப்புண்டு.

குறிப்பாக தேர்தல் முறையும் தேர்தல் முறை மூலம் ஆட்சியாளர்களை தெரிவுசெய்யும் முறையும் ஜனநாயத்தின் மிக முக்கியமான இரு அம்சங்கள். தேர்தல் முறை மூலமாக எவ்வாறு ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பதைப் பொறுத்தே ஒரு நாட்டினுடைய ஆட்சிமுறை தீர்மானிக்கப்படுகின்றது. இங்கும் பெரும்பான்மை வாக்குகள் என்ற அடிப்படையிலேயே ஆட்சியாளர்கள் தெரிவு இடம்பெறுகின்றது. எனவே அரசியல் கட்சிகளும் அரசியல் கட்சி வேட்பாளர்களும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்காக அனைத்து முயற்சிகளையும் செய்கின்றார்கள். இந்த முயற்சிகள் முறையானதாகவும் இருக்கலாம் முறையற்றதாகவும் இருக்கலாம் அனேகமாக சில சமயங்களில் வாக்காளர்கள் விலைக்கு வாங்கப்படுகின்றார்கள். உணர்வு ரீதியான விடயங்களால் அவர்கள் தூண்டப்படுகின்றார்கள். அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. எனவே இவ்வாறு முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற

பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற ஆட்சியாளர்கள் சிறந்த ஆட்சியை வழங்குவர் என்று எதிர்பார்க்க முடியாது. பெருமளவுக்கு இத்தகைய சம்பவங்கள் மூன்றாம் உலக நாடுகளிலேயே இடம்பெறுகின்றன. வாக்காளர்களின் தரம் இதில் பிரதான மான பங்கு வகிக்கின்றது. இதனாலே தான் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை அனைவருக்கும் வாக்கு ரிமை வழங்கப் படவேண்டுமா? அனை வருக்கும் வாக்குரிமை வழங்கப்படா விட்டால் அதை ஜனநாயகமின்மை என்று கொள்ளலாமா? என்பது போன்ற விவாதங்கள் அண்மையில் முக்கியம் பெற்றிருக்கின்றன. இதற்கு சீனாவை ஒரு சிறந்த உதாரணமாக குறிப்பிட லாம்.

சீனாவில் அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை வழங்ப்படவில்லை. அங்கு அனைத்து சமூக அமைப்பிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக் கே வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட பிரதி நிதிகளே ஆட்சியாளர்களை தெரிவு செய்வர். ஆயினும் மேற்குலக நாடுகள் சீனாவின் இந்த செயற்பாட்டை ஜனநாயத்திற்கு விரோதமானதாக குறிப்பிடுகின்றன. ஆனால் சீனா தமது நாடு ஒரு அபி விருத்தி அடைந்து வருகின்ற மூன்றாம் உலக நாடு என்றும் அங்கு வாழ்கின்ற அனைத்து மக்களும் தரமானவர்கள் இல்லை என்றும் குறிப்பிட்டு, தெரிவு செய்யப்பட்ட தரமான பிரதிநிதிகள் மூலம் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடு ப்பதாக கூறுகின்றது. உண்மையில் அடைந்துள்ள பொருளாதார அபி விருத்தியைப் பார்க்கின்ற போது இதில் நியாயம் உள்ளதுபோன்றே தோன்று கின்றது. எனவே ஜனநாயம் என்பது பெரும்பானமை மக்களின் விருப்பம் என்று குறிப்பிட்டாலும் அது தனியே எண்ணிக்கை ரீதியான பெரும்பான்மை யானதாக அன்றி தர அடிப்படையில் பெரும்பான்மையாகவும் இருக்க வேண் டும் என்பதே இங்கு முக்கியமானது. ஆகவேதான் மூன்றாம் உலக நாடுகளுக் கான ஜனநாயகம் என்பது மேற்குலக நாடுகளுக்கான ஜனநாயகத்தோடு ஒன்றாக வைத்து நோக்கப்படாமல் தனியாகப் பார்க்கப்பட வேண்டும் என்ற கருத்து அண்மைக்காலமாக வலுத்துவருகின்றது.

## ஜனநாயகமும் சிறுபான்மையினரின் கருத்துக்களும்

ஜனநாயகம் தொடர்பான குறிப் பிடப்படுகின்ற மற்றொரு முக்கியமான பிரச்சினை பெரும்பான்மை என்ற வட்டத்துள் சிறுபான்மையினரது கருத் துக்கள் கவனத்தில் எடுக்கப்படாமை ஆகும். இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று உண்மையில் பெரும் பான்மை என்ற பெயரில் சிறுபான்மை யினரின் கருத்துருக்கள் மறுக்கப்படு வது இரண்டாவது பலர் போட்டியிடு கின்ற போது ஒருவருக்கு கிடைக் கப்பெறுகின்ற ஆகக்கூடிய பெரும் பான்மை என்பது சிலசமயங்களில் தோல்வியடைந்து மற்றவர்களின் மொத்த எண்ணிக்கையோடு ஒப்பிடு கின்றபோது சிறுபான்மையாக இருக் கின்றமைமாயகும். இங்கு பெரும்பான் மை என்ற பெயரில் பெரும்பான்மை யோரின் கருத்துக்களும் மறுக்கப் படுகின்றது. ஆகவே தான் அண்மைக் காலத்தில் ஜனநாயகம் பற்றி மறு வாசிப் பின் அவசியம் பெரிதும் வலியுறுத்தப் படுகின்றது.

## முடிவுரை

ஜனநாயகம் என்ற கருதியல் நன்மை யானது. ஆயினும் நடைமுறை ரீதியாக யதார்த்தமாகநோக்குகின்றபோது சில சமயங்களில் தற்காலதிற்கு பொருத்த மில்லாது இருக்கின்றது. குறிப்பாக மேற்குலகிற்கு பொருத்தமாக இருக் கின்ற போதும் பொருத்தமில்லாது இருக் கின்றது. அத்தோடு ஜனநாயக கருத்தியலிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே ஜனநா யகம் உலகிற்கு பொதுவான தத்துவம் என என்ற பேசுவதை விடுத்து கால மாற்றத்துக்கு கேற்ப அதிலுள்ள குறை பாடுகளை நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். தேவையேற்படின் மூன்றாம் உலக நாடுகளுக்கு பொருத்தமான புதிய ஜனநாயக தத்துவம் பற்றி சிந்திக்க வேண்டியதும் அவசியமாகதாகும்.

### உசாத்துணை நூல்கள்


1) Forbrig, Joerg. 2005. "Democratic Practice in Europe" Council of Europe Publishing, P. 134.

2) Charrad, Mounira. 2001. challenges in Democracy", Bekeley, CA: University of Calufornia.

3) Singleton, Lianne. 2004. "Discovering Democracy" Ithaca, NY: Cornell.

# வெற்றிகரமான ஆசிரியத்துவப் பணியில் கற்றற் கொள்கைகள் பற்றிய ஆசிரியரது விழிப்புணர்வின் வகிபங்கு

திரு.சி.உதயகுமார்
தலைவர், பொருளியல்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

"வெற்றிகரமான ஆசிரியத்துவப் பணியில் கற்றல் கொள்கைகள் பற்றிய ஆசிரயரது விழிப்புணர்வின் வகிபங்கு" என்ற வகையில், ஆசிரியத்துவப்பணி பற்றியும், கற்றல் மற்றும் கற்றல் கொள்கைகள் பற்றியும் நோக்குவதுடன் பல்வேறு கற்றல் கொள்கைகளினதும் பிரதான கருத்துகள் ஆசிரியத்துவப் பணியில் ஆசியரது விழிப்புணர்வு தொடர்பாக எந்தளவிற்கு செல்வாக்குடையன என்பதை விமர்சன ரீதியாக நோக்குவதாகவும் இக் கட்டுரை அமைகின்றது.

**ஆசிரியத்துவப்பணி**

ஆசிரியர் வெற்றிகரமானதாக தம் பணியைச் செவ்வனே மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைவது அவரது கல்வி உளவியல் அறிவாகும். கற்போன் தொடர்பான அவனது ஆயத்தநிலை,கற்றலில் ஈடுபடும் விதம், கற்றலூடாக அவன் பெறும் தகைமைகள், கற்றலில் எதிர்ப்படும் தடங்கல்கள், இடர்கள், வெற்றி கொள்ளும் வழிமுறைகள் போன்ற விடயங்கள் பற்றிய பூரண அறிவை ஆசிரியர் பெற்றிருந்தாலே தம் பணியை வெற்றிகரமாகச் செய்ய முடியும். ஆசிரியரானவர் பாடப் பொருளை மட்டும் அறிந்திருந்தாலே போதாது. தன் மாணவனையும் அறிந்திருக்க வேண்டும். இந்த வகையில் ஒவ்வொரு பிள்ளையினதும் விருத்திப் படிநிலைகளுக்கேற்ப கற்றல் நிலைமைகளைக் கையாளும் திறனை ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும்.

மாணவனிடம் காணப்படும் மாற்றங்கள் ஊடாகவே அவனிடத்தில் ஏற்படும் கற்றல் பற்றி நாம் அறிய முடிகின்றது. எனினும் மானிடம் ஏற்படக்கூடிய நடத்தை இயல்புகள் யாவற்றையும் நமது புலனனுபவங்கள் ஊடாக அறிய முடியாது. இவ்வாறு நேரடியாக அறிய முடியாத நடத்தைகளை உளவியலாளர்களின் கருத்துக்கள், விளக்கங்களை அறிவதன் மூலமே ஆசிரியர் உணர்ந்து மாணவருக்கு உதவமுடியும். இந்த வகையில் வெற்றிகரமான ஆசிரியத்துவப் பணியில் கற்றல் கொள்கைகள் பற்றிய விளக்கங்களும் விழிப்புணர்வும் ஆசிரியருக்கு தெரிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும்.

**கற்றலும் கற்றற் கொள்கைகளும்**

ஓர் உயிரியின் நடத்தையில் ஏற்படும் நிரந்தரமான மாற்றமே கற்றலாகும். இந்த மாற்றம் திறன்கள், தகவல்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றைப் பெறுதல், கருத்துகளைப் பிரயோகித்தல், மனப்பான்மைகளை மாற்றுதல் முதலிய வகைகளில் ஏற்படலாம். பாடலை மனனஞ் செய்யும் போதும், திறன்களைப் பெறும் போதும் பிரச்சினைகளைத் தீர்க்கும் போது கற்றல் இடம்பெறுகின்றது.

கற்றலை விளக்குகின்ற பல கொள் கைகள் உளவியலாளர்களால் முன் வைக்கப்பட்டுள்ளன. கற்றல் தொடர் பாக பல்வேறு வரை விலக்கணங்கள் கூறப்படினும் வரைவிலக்கணங்கள் தொடர்பாக கற்றற் கொள்கையாளர் களிடையே முரண்பாடுகள் இல்லை. ஆனால் அதற்கு விளக்கமளிப்பதில் இக்கொள்கையினர்களிடையே வேறு பாடுகள் காணப்படுகின்றன. இந்த வகையில் இக்கொள்கையினரை இரு தொகுதியினராக நோக்கலாம். தூண் டல் - துலங்கல் கொள்கையினர் ஒரு தொகுதியினாகவும் களஅறிகைக் கொள்கையினர் மறுதொகுதியினராக வும் காணப்படுகின்றனர்.

ஓர் உயிரியின் நடத்தையில் காணப் படும் சிறுசிறு துலங்கல்கள் ஒன்று சேர்ந்து அல்லது இணைந்து அந் நடத்தை உருவாகிறது என்பது தூண் டல் - துலங்கல் கொள்கையினரது கருத்தாகும். இவர்களின் கருத்துப்படி சில பழக்கங்களை ஓர் உயிரி பெற்றுக் கொள்ளுதலே கற்றல் ஆகும். அத் துடன் ஓர் உயிரி ஒரு பிரச்சினையை எதிர்நோக்கும்போது முயலல் தவறல் முறையில் தீர்வு காண்பதாகவும் இவர் கள் கூறுகின்றனர்.

கள அறிகைக் கொள்கையினரது கருத்துப்படி ஓர் உயிரியின் நடத்தை யானது ஞாபகம், எதிர்பார்ப்பு போன்ற உளத் தொழிற்பாடுகளாலேயே உருவா வதாகக் குறிப்பிட்டுள்ளனர். இவர் களின் கருத்தப்படி, அறிகை அமைப்புக் கள் உருவாதல் அல்லது உண்மைத் தகவல்கள் சார் அறிவைப் பெறுதலே கற்றலாகும். அத்துடன் உயிரியானது ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர் வினை அகக்காட்சி முறையில் காண்ப தாகவும் கூறுகின்றனர்.

**தூண்டல் – துலங்கல் கொள்கை யாளர்களின் பிரதான கருத்துக்களும் அக்கருத்துக்கள் ஆசிரியர்களின் விழிப்புணர்வில் வகிக்கும் பங்கும்**

தூண்டல் - துலங்கல் கொள்கை யினராக தோண்டைக், பவ்லவ், ஹல், வாட்சன், குத்ரி, ஸ்கின்னர் போன் றோருடைய கருத்துக்கள் இங்கு நோக் கப்படுவதுடன் அக்கருத்துக்கள் ஆசிரி யரது விழிப்புணர்வில் எத்தகைய பங்கு வகிக்கின்றது என்பது பற்றியும் நோக் கப்படுகின்றது.

**தோண்டைக்கினது இணைப்புவாதக் கொள்கை**

இவர் அமெரிக்க உளவியலாளர் களுள் ஒருவராவார். இவர் 1874 - 1949 காலப்பகுதியில் வாழந்தவர். இவர் தனது பரிசோதனைகளில் நாய், குரங்கு, மீன் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டார். ஆய்வு களின் இறுதியில் கற்றல் பற்றிய தனது விளக்கத்தினையும் கற்றல் சார்பான முக்கியமான சில கருத்துக்களையும் முன்வைத்தார். தோண்டைக் அவதா னித்த கற்றலானது முயன்று தவறிக் கற்றல் ஆகும். இதனை தெரிவு செய்த லும் இணைத்தலும் முறையிலான கற்றல் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஞ என்னும் தூண்டி R என்னும் ஒரு துலங்கலுடன் சேர்ந்து S - R இணைப்பு ஆக்கப்படுகின்றது எனவும், கற்றல் என்பது பல்வேறு S -R இணைப்புக் களை ஏற்படுத்தி ஒழுங்கமைப்பாக்கும் ஒரு செயன்முறை யே என்றும் கற்றலின் பின் குறித்த ஒரு தூண்டியை வழங் கும்போது அதனுடன் இணைக்கப் பட்ட துலங்கல் வெளியாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேண்டைக் தனது ஆய்வின் முடிவில் கற்லுடன் தொடர்புடைய சில கருத்துக் களை முன்வைத்துள்ளார். அவற்றை நோக்குவோமானால் ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்யும் நடவடிக் கை சார்பான பயிற்சி விதியையும், கற்றலில் ஈடுபடுவதற்கான தயார் நிலை குறித்த ஆயத்த விதியையும் மற்றும் குறித்த ஒரு கற்றல் நிலைமைக்கு ஓர் உயிரி காட்டும் பல்வேறு துலங்கல் களுள் உயிரிக்கு திருப்தி வழங்கும் இணைப்பானது வலுப்பெறும். இந்த வலிமையானது வெகுமதி, அங்கீகாரம், திருப்தி போன்றவற்றால் ஏற்படுமெ னவும் குறிப்பிட்டு விளைவு விதியையும் முன்வைத்துள்ளார். இவற்றுடன் மனப் பான்மை விதி, பலதரப்பட்ட துலங்கல் விதி, ஒப்புமைவிதி, இணைப்பு மாற்றவிதி, பகுதிநிலைச் செயல்விதி என்பன பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

இவரது கருத்துக்கள் தொடர்பான ஆசிரியரது விழிப்புணர்வு பற்றி நோக்கினால், தோண்டைக்கின் பயிற்சி விதி வகுப்பறைக் கற்றலிலும் ஏனைய கற்றலிலும் பயிற்சி அளிப்பதன் முக்கி யத்துவத்தை வலியுறுத்துகின்றது. பயிற்சியானது மீண்டும் மீண்டும் ஒரே செயற்பாட்டில் ஈடுபடுவதால் கற்றலை அதிகரிக்கச் செய்கின்றது. உதாரண மாக, உடலியற் திறன்களின் விருத்தி, சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், வாய்ப்பாடுகளை ஞாபகப்படுத்தல் போன்ற கற்றற் பணிகளில் நெட்டுரு முறைக் கற்றலின் பயனை ஆசிரியர் உணர்ந்து செயற்பட வேண்டும். இந்த வகையில் கற்றல் மூலம் சிறந்த பலனை மாணவர் பெறுவதற்கு பாடத்தை திரும்பத்திரும்ப மீட்டல் செய்தல் சிறந்த பலனைத் தரும்.

ஆயத்த விதியும் வகுப்பறையில் ஆசிரியரால் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும். ஏனெனில் கற் கின்ற மாணவனின் உடல்நிலை, உளநிலை கற்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். அந்நிலையில் தான் கற்றல் வலுவுடையதாக இருக்கும். குறித்த ஒரு இலக்கினை அடைவதற்கான தேவை யை உணர்தல், இலக்கு தொடர்பான செயற்பாடுகளில் முன்னனுபவம் என்பன கற்கும் மாணவனிடம் இருப் பதை உறுதிப்படுத்துதல், பயிற்சியை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் பற் றிக் கவனம் செலுத்துதல் என்பவற்றில் பாட ஆசிரியர் அக்கறை காட்ட வேண்டியதன் அவசியம் என்பன இவ் விதியில் வலியுறுத்தப்படுகின்றன. இங்கு வகுப்பறையில் மாணவனிடம் கற்றல் தொடர்பான ஆயத்தநிலை இருக்கவேண்டும் என்பதில் ஆசிரியர் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்.

விளைவு விதியின் பயன்பாடு பற்றி நோக்குமிடத்து கற்றல் நடவடிக் கை களில் மாணவரிடம் ஏற்படும் பொருத்த மான தூண்டல் - துலங்கல் பிணைப் புக்கள், வெகுமதிகள் மூலமாகவே வலியுறுத்தப்படுகின்றன. அதாவது கற்றல் நடைபெறுவதற்கு மீளவலி யுறுத்தலின் அவசியத்தை ஆசிரியர் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே வகுப்பறையில் மாணவனுக்கு உளத் திருப்தியை ஏற்படுத்தக்கூடிய நடவடிக் கைகள் ஆசிரியரால் ஒழுங்குபடுத்தப் படுவது அவசியமானது. அதாவது மாணவரின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான பரிசில்கள், பாராட் டுகள் போன்ற வெகுமதிகள் உரிய வேளைகளில் வழங்குவதில் ஆசிரிய ருக்கு விழிப்புணர்வு அவசியமானது.

முயன்று - தவறுதல் என்பதில் ஒருமுறையைக் கையாளும் போது முயற்சி வெற்றியளிக்காது விட்டால் தவறுகளை திருத்திப் புதுமுறையினால் பிரச்சினையைத் தீர்க்க முய்ற்சி எடுக் கப்படும். இவ்வாறு குறித்த இலக்கினை இஅடையும் வரை கற்கும் மாணவன் புதிய புதிய முறைகள் மூலம் முயலு வதால் கற்றல் நடைபெறும் என்பதில் ஆசிரியர் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறாக தோண்டைக் ஆசிரியர் களைப் பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த காரணத்தால் வகுப் பறைக் கற்றல் - கற்பித்தல் நிலைமை தொடர்பாக பயனுடைய கருத்துக் களை முன்வைத்திருந்தமை ஆசிரியரது கற்பித்தல் நடவடிக்கை தொடர்பாக பயனுடைய கருத்துக்களை முன்வைத் திருந்தமையானது ஆசிரியர் தம் பணி யை விழிப்புணர்வுடன் செய்வதற்கு உதவியாக இருந்தது. எனினும் கற்றல் சந்தர்ப்பம், கற்றலின் போது நிகழும் உளமாற்ற செயன்முறை முதலியவற் றின் மீது தோண்டைக் கவனம் செலுத்த வில்லை என்பதாக விமர்சனமும் முன் வைக்கப்படுகின்றது.

**பவ்லவ் உடைய நிபந்தனைப்பாட்டுக் கொள்கை**

இவர் ரஷ்யநாட்டைச் சேர்ந்தவர் இவரது சமிபாடு தொடர்பான ஆய்வு களே "நிபந்தனைப்படுத்தல்" எனும் செயற்பாடு பற்றிய கருத்துக்களை முன் வைக்க உதவின. இவரது கொள்கை "பழைய நிபந்தனைப்பாட்டுக் கொள் கை" எனவும் குறிப்பிடப்படு கின்றது. இவர் தனது ஆய்விலே உள்ளம் என்ற பொருளை விளக்க முயன்றமை தனித்து வமான தாகக் கூறப்படுகின்றது. உடற் றொழிலியலாளரான இவரை ஒரு உள வியலாளராகக் காண வைத்தவை இவரது கருத்துக்களே ஆகும். இந்த வகையில் கற்றலின் உடற்றொழிலியல் இயக்கத்தை விளக் குவதிலும் கவனம் செலுத்தியுள்ளார். கற்றல் என்பது பழக்கம் உருவாக்கல் என இக்கொள் கை விளக்குகின்றது.

இவர் முன்வைத்த பல்வேறு கருத்துக் களில் சில கருத்துக்கள் கல்விசார் பயனு டையன.அவற்றை சுருக்கமாக இங்கு பார்க்கலாம். மீள வலியுறுத்தல் என்பது பற்றி, மீளவலிறுத்தலானது பல தட வைகள் திரும்பத்திரும்ப ஏற்படும் போதே துலங்கல் நிபந்தனைப்படு கின்றது. எனவே குறிப்பிட்ட ஒரு நடத்தை ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் தூண்டியானது மீளவலியுறுத்தியாக தொழிற்படு மெனக் குறிப்பிட்டுள்ளார். தூண்டி பொதுமையாக்கமென்பது குறித்த ஒரு றநிபந்தனைப்பட்ட தூண்டியை அண்மித்த இன்னொரு தூண்டிக்கும் உயிரியானது நிபந்தனைப்பட்ட துலங் கலை வெளிப்படுத்தலாம். தூண்டி வேறுபிரித்தறிதல் என்பது தூண்டி களின் வேறுபாடுகளுக்கேற்ப வேறு பட்ட வகையில் நிபந்தனைப்பட்ட துலங்கலை வெளிப்படுத்தும் செயற் பாடாகும். நிபந்தனைப்பட்ட துலங் கல் என்பது பற்றி மீள வலியுறுத்தல் ஏதும் இன்றி நிபந்தனைப்படுத்தப் பட்ட தூண்டியானது தொடர்ந்து தனித்து வழங்கப்படுமாயின் நிபந்த னைப்பட்ட துலங்கலானது படிப்படி யாகக் குறைந்து சென்று இறுதியில் தோன்றாநிலை ஏற்படும். இது அழிதல்

என்றும் குறிப்பிட்டிருந்தார். அழிந்த துலங்கலின் திடீர் மீட்சி பற்றிக் குறிப்பிடும்போது அழிதல் ஏற்பட்டு ஒரு சிறிய கால இடை வெளியின் பின்னர் நிபந்தனைப்பட்ட தூண்டி வழங்கப் படும்போது நிபந்தனைப்பட்ட துலங்கல் மீண்டும் ஏற்படலாகும். உயர்நிலை நிபந்தனைப்பாடு என்பதை, நிபந்தனைப்பட்டுவிட்ட ஒரு தூண்டி இன்னொரு நடுநிலைத் தூண்டியை நிபந்தனைப் பட்ட தூண்டியாக மாற்றும் செயற்பாடு எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவரது கருத்துக்கள் ஆசிரியரது விழிப்புணர்வு தொடர்பாக எத்தகைய விளக்கங்களை தருகின்றன என சுருக்கமாக நோக்குவோம். மீளவலியுறுத்தலானது வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் இன்றும் முக்கியம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. அதாவது மீளவலியுறுத்தலின் அவசியமும், அது ஒரு கால இடையுள் வழங்கப்படுவது அவசியம் என்பதையும் உணர்ந்து ஆசிரியர்கள் வகுப்பறையில் செயற்பட வேண்டும். மாணவர்களது செயல்களுக்கு பாராட்டு, அங்கீகாரம், புகழ்தல், பரிசில்கள் என்பன உடனுக்குடன் வழங்குதலானது கற்றலை மேம்படுத்துமென்பதில் ஆசிரியர் விழிப்புடன் செயற்பட வேண்டும். குறிப்பாக ஆரம்பக் கற்றல்களில் மொழிக்கற்றல், உடலியக்கத்திறன் கற்றல் போன்றவை நிபந்தனைப் படுத்தல் மூலமாகவே ஏற்படுகின்றன என்பதை ஆசிரியர் உணர்ந்து செயற்படுதல் அவசிய மானது.

தூண்டி பொதுமையாக்கலில் சரியான துலங்கலை தெளிவாக வேறுபடுத்திக் கற்பிப்பது ஆசிரியரது பொறுப்பான செயலாகும். கற்றலிலே பல தவறுகள் குழப்பங்கள் ஏற்பட சரியான துலங்கல் பெறாமை முக்கிய காரணமாகும். உதாரணமாக அந்நியச் செலாவணி என்பதை சில மாணவர்கள் அந்நியச் செலவாணி என எழுதுவதனைச் சுட்டிக்காட்டலாம்.

தூண்டி பிரித்தறிதலைப் பொறுத்தவரை வகுப்பறையில் மாணவரது கற்றல் செயற்பாட்டில் தேவையானவற்றைப் பிரித்தறியும் திறன் அவசியமானது. இதனை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியர் தனது செயற்பாட்டில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

நெட்டுருமுறையிலான கற்றலின் போது இடையிடையே மீளவலியுறுத்த வேண்டியதன் அவசியத்தை "அழிதல்" என்னும் எண்ணக்கரு புலப்படுத்துகின்றது. அதாவது வகுப்பறைக் கற்றலிலே மீளவலியுறுத்தல் இடம்பெறாத போது அழிதல் இடம்பெற சந்தர்ப்பம் ஏற்படும். சில சமயங்களில் கற்றல் செயற்பாட்டின்போது மாணவரிடம் எதிர்பார்த்த துலங்கல் ஏற்படாத போதும் ஏதோ ஒரு வகையில் சிறிதளவாயினும் ஏற்படும் கற்றலானது சிறிது காலத்தின் பின்பு கற்கும் விடயம் தொடர்பாக திடீர் மீட்சி நிலையை ஏற்படுத்தலாம் என்பதை "திடீர்மீட்சி" பற்றிய விளக்கம் எமக்கு விளக்குகின்றது.

இவ்வாறாக பல்லவ் கருத்துக்கள் பல கற்றல் நடவடிக்கைக்கு வித்திட்டிருப்பினும் வகுப்பறைக் கற்றலை நோக்கமாகக் கொண்டு இவரது கொள்கை உருவாக்கப்படவில்லை என விமர்சிக்கப்படுகின்றது.

ஹல் என்பவரது தேவை தணித்தல் கொள்கை

இவர் 1884 - 1952 காலப்பகுதியில் வாழ்ந்தவர். இவர் Yale பல்கலைக் கழகத்தில் உளவியலாளராக இருந்த வர். இவரது கொள்கையில் பவ்லவ் வினது நிபந்தனைப்பாட்டினதும், தோண்டைக்கின் விளைவு விதியினதும் செல்வாக்கு காணப்படுகின்றது. இதன் காரணமாக ஊக்கல், மீளவலியுறுத்தல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து ள்ளார். தேவை தணித்தல் பற்றிய பல பரிசோதனைகளை ஹல் மேற்கொண்டு மீளவலியுறுத்தல் பற்றிய ஒரு கோட் பாட்டை வெளியிட்டார். குறித்த தூண்டி - துலங்கல் இணைப்பு ஏற்படும் போது ஏதேனும் தேவை தணிக்கப்படு மானால் அந்த தூண்டி - துலங்கல் இணைப்பு வலுவடைவதுடன் அது மீள வலியுறுத்தப்படும். மேலும் இத் தேவை தணித்தல் சொற்ப நேரத்துக் குள்ளே நிகழ்ந்தாலே இணைப்பு வலு வடையும் எனவும் குறிப்பிட்டார்.

"உந்தல்" என்பது ஒரு செயலில் ஈடுபடுவதற்கான உளச்சக்தியை உயிரி யில் ஏற்படுத்துவது ஆகும். எனவே உந்தல் இன்றி துலங்கல் எதுவும் உயிரியில் ஏற்பட முடியாதென ஹல் குறிப்பிடுகின்றார். உந்தல் தூண்டி களின் தொழிற்பாடே குறித்த தேவை சார்பாக உயிரியின் நடத்தைகளை கட்டுப்படுத்துவதாகவும் குறிப்பிட்டு ள்ளார். முதன் மீளவலியுறுத்தல் என்ப து ஓர் உயிரியில் காணப்படும் துலங்க லானது அவ்வுயிரியின் தேவையைத் தணிப்பதில் பங்கேற்குமாயின் அங்கு முதன் மீளவலியுறுத்தல் இடம் பெற்று ள்ளதாகக் கருதலாம். துணை மீளவலியு றுத்தல் பற்றி குறித்த ஒரு நடத்தைக் கான மீளவலியுறுத்தல் காலந்தாழ்த்தி ஏற்படுமாயின் அங்கு துணை மீளவலி றுத்தல் ஏற்பட்டுள்ளதாக கருதப்படும். இவ்துணை மீளவலியுறுத்தலானது தேவைத் தணிப்பினை உடனடியாக ஏற்படுத்தாது எனக்கூறப்பட்டுள்ளது. எதிர்த்தாக்கத்தடை பற்றிக் குறிப்பிடு கையில் குறித்த ஒரு துலங்கல் ஓர் உயிரியில் தோன்றும் வேளையிலலே அத்துலங்கலுக்கான ஓர் எதிர்ப்பும் ஏற்படுவதாக குறிப்பிடுகின்றார்.

இவரது கருத்துக்கள் ஆசிரியரது வழிப்புணர்வில் செலுத்தும் தாக்கம் பற்றி நோக்கின் ஆசிரியரானவர் மாண வரிடம் நற்பழக்கங்களை உருவாக்கு வதில் விழிப்புணர்வுடன் செயற்படுவ தோடு பல்வேறு கற்றல்களின் போதும் மீளவலியுறுத்தலை வழங்குவதும் பயனுடையதாகும். பிள்ளைகளிடம் கணிப்புத்தேவை அதிகளவில உள்ளது. அவர்கள் தமது பாடவேலைகளை செய்து முடித்தவுடன் ஆசிரியர் தம்மை "நீ கெட்டிக்காரன்" என்றோ "மிக நன் றாக இருக்கிறது" என்றோ கூறுவதை எதிர் பார்க்கின்றனர். இக்கணிப்புத் தேவை உடனடியாகத் தணிக்கப்பட வேண்டும். காலதாமதமாக ஆசிரியர் வழங்கும் கணிப்பால் பிள்ளைகள் ஊக்கத்தை இழக்கக்கூடும். வாய்மொழி விடைகள் உடனடியாக மீளவ்லியுறுத் தப்படுவதும் மாணவரின் பயிற்சிக் கொப்பிகளை ஆசிரியர் வகுப்பறை யிலே பார்வையிடுவதும், பரீட்சைப் புள்ளிகளை தாமதமின்றி வெளியிடு வதும் இதனடிப்படையிலேயே நிகழ் கின்றன.

வகுப்பறையில் ஆசிரியரால் வழங்கப்படும் பாடத்தினை விளங்கிக் கொள்ளுதல் பிள்ளையின் பிரதான

நோக்கமாகும். பாடத்தை விளங்கிக் கொள்ளல் சார்பாக பிள்ளையிடம் ஓர் உந்தல் ஏற்படுகிறது. பாடம் விளங்கியதும் இவ் உந்தல் தணிக்கப்படும். எனவே உந்தல் ஆசிரியர் அக்கறையுடன் செயற்படவேண்டும். இவ்வாறாக வகுப்பில் வழங்கப்படும் ஒரு பிரசினத்துக்கான சரியான தீர்வை ஒரு பிள்ளை கண்டவுடன் ஆசிரியரிடமிருந்து அதற்கான கணிப்பு கிடைப்பதும் முதன் மீளவலியுறுத்தலாக அமையும்.

குறித்த பாடவிடயம் ஒன்றினை ஒரு பிள்ளை குறித்த ஓர் இருக்கையில் அமர்ந்து படிப்பதாகக் கொள்வோம். இவ்வாறு பல கற்றல் சம்பவங்களை குறித்த இருக்கையில் இருந்து கற்ற பின்னர் குறித்த இருக்கை அப்பிள்ளைக்கு துணை மீளவலியுறுத்தல் ஆகிவிடுகிறது. மாணவர்களின் கற்றலானது விலங்குகளிடத்தில் ஏற்படுவது போன்று உடனடியாக முதன் மீள்வலியுறுத்தியுடன் முடிந்து விடுவதில்லை. அவர்களின் பெரும்பாலான துணை மீளவலியுறுத்திகளை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் பணியை விழிப்புணர்வுடன் செய்ய வேண்டும்.

**வாட்சனது கோட்பாடு**

நடத்தைக் கோட்பாட்டினது முன்னோடியாக கருதப்படுகின்ற வாட்சன் *1878 - 1958* காலப்பகுதியில் வாழ்ந்தவர். ஒரு தூண்டல் - துலங்கல் பிணைப்பானது எந்தளவுக்கு அண்மைக் காலத்தில் இடம்பெறுகிறதோ, எவ்வளவுக்கு திரும்பத்திரும்ப இடம்பெறுகின்றதோ அந்தளவுக்கு அதன் தொடர்புகள் நிலைப்படுத்தப்படுகின்றன என்ப து இவரின் கருத்தாகும். இவர் விலங்குகளையும் சிறுபிள்ளைகளையும் ஆய்வுக்குப் பயன்படுத்தித் தனது கருத்துகளை முன் வைத்தார்.

இவர் முன்வைத்த பிரதான கருத்துக்களை நோக்கின் மீடிறன் விதி பற்றிக் குறிப்பிடும் போது தூண்டி - துலங்கல் தொடர்பு களின் மீடிறன் அதிகரிக்கும் போது, பிற்காலத்தில் அதே சந்தர்ப்பங்கள் வரும்போது குறித்த துலங்கலை வெளிப்படுத்தும் சாத்தியக் கூறு அதிகமாக இருக்கும்.

ஆசிரியர் விழிப்புணர்வு சார் பாக இவரது கருத்துக்களைப் பார்த்தால் வாட்சனின் கொள்கை யைப் பயன்படுத்தி பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது நிபந்தனைப்படுத்துவதன் மூலம் கற்றலை ஏற்படுத்துவதுடன் மட்டுமன்றி நிபந்தனைப்படுத்துவதால் பிழையான கற்றலைப் படிப்படியாக தீர்க்கவும் முடியும் என்ற அம்சத்தினை ஆசிரியர்கள் விளங்கிக் கொண்டு செயற்படுவது பயன்தரக்கூடியது. ஒரு பாட விடயத்தை அல்லது ஒரு பிரச்சினையை கற்கும் முயற்சியிலே ஒரு பிள்ளை பல நடத்தைகளை வெளிக்காட்டுவான். இவற்றுள் வெற்றியளிக்கும் துலங்கல்கள் மீண் டும் ஏற்படும் வாய்ப்பு குறைந்து விடும். இதனைக் கவனத்தில் கொண்டு ஆசிரியர் செயற்பட வேண்டிய அவசிய மாகும்.

வாட்சனின் கருத்துக்கள் பல்வவ்வினது நிபந்தனைப் பாட் டுக் கருத்துகளின் செல்வாக்குக்கு உட்பட்டே காணப்படுகின்றது.

**குத்ரியினது அடுத்தமைவுக்கொள்கை**

இவர் 1886 - 1956 காலப்பகுதியில் வாழ்ந்தவர். ஒரு தொகுதி தூண்டிகளைத் தொடர்ந்து ஓர் அசைவு இடம் பெற்றிருக்குமாயின், அதே தூண்டி மீண்டும் தோன்றும்போது அவற்றினைத் தொடர்ந்து முன்னைய அசைவு மீண்டும் இடம்பெறுமென்பது இவரது பிரதான கோட்பாடாகும்.

இவரது கருத்துக்களை பயன்படுத்தவது தொடர்பான ஆசிரியர் விழிப்புணர்வை நோக்கின் குத்ரியின் அடுத்தமைவுக் கொள்கையானது சில கல்விசார் பயன்பாடுகளைக் கொண்டுள்ள வகையில் அத்தகைய பயன்பாடுகள் பற்றிச் சுருக்கமாக நோக்கலாம். ஒரு பிள்ளை குறித்த ஒரு நிலைமையில் எதனைச் செய்கின்றானோ அதனையே கற்கின்றான். எனவே குறித்த ஒரு கற்றல் நிலைமையில் ஆசிரியர் எதிர்பார்க்கும் துலங்கல் எதுவோ அது நிகழ்வதை உறுதிப்படுத்துவதில் ஆசிரியர் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

ஒரு தூண்டியும் துலங்கலும் இணைந்து வரும் முதல் தடவையிலேயே கற்றல் நிகழ்வதாக குத்ரி குறிப்பிடுவதால் ஆரம்பச் செயலிலே அடிக்கடி பயிற்சி வழங்கி மீட்டல் செய்வதன் அவசியத்தில் ஆசிரியர் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். இல்லாவிடின் வேறு தூண்டல் - துலங்கல் இணைப்புகள் ஆரம்பத் தூண்டல் - துலங்கல் இணைப்பினை பின் தள்ளிவிடும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

இதனால் மாணவர்கள் முதலாவது நிலையில் ஏற்பட்ட துலங்கலை மறந்து போகும் நிலை ஏற்பட்டு பிழையான கற்றல் ஏற்படலாம். இவ்வாறு ஏற்படும் பிழையான கற்றலை மறக்கச் செய்வதற்கு கற்றல் நிலைமையில் பொருத்தமான செயல்களில் மாணவரை ஈடுபடுத்தி பிழையான கற்றலை மறக்கச் செய்து விடலாம்.

குத்ரியினுடைய கொள்கையில் தூண்டல் துலங்கல் பிணைப்புக்கு உந்தல்கள், மீளச்செயற்படல், வெகுமதிகள் என்பவற்றின் அவசியம் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் ஊக்கல், மீளவலியுறுத்தல் பற்றியும் குறிப்பிடப்படாத காரணத்தால் கற்றலுக்கு ஊக்கலோ மீளவலியுறுத்தலோ அவசியமில்லை என இவர் கொள்கை குறிப்பிடுவதாகக் கொள்ளப்படுகின்றது.

**ஸ்கின்னர் தொழிலி நிபந்தனைப் பாட்டுக் கொள்கை**

1950ம் ஆண்டுக்கு பின்னர் உலகெங்கும் விரைந்து பரவியது இவரது தொழிலிசார் நிபந்தனைப்பாட்டுக் கொள்கையாகும். இவர் ஹாவாட் பல்கலைக்கழகத்தில் உளவியல் பேராசிரியராக இருந்த காலத்தில் எலி, புறா போன்ற விலங்குகளிலும் பல்வேறு வயதுப் பருவ மானிடரிடையேயும் ஆய்வுகளை மேற்கொண்டார். இவருடைய ஒரு பரிசோதனையில் பயன்படுத்தப்பட்ட ஸ்கின்னர் பெட்டி என்பது தனித்துவம் பெற்ற தொன்றாகக் கருதப்படுகின்றது. ஸ்கின்னர் முன்வைத்த பிரதான கருத்துக்களான மீளவலியுறுத்தல், அழிதல், பின்னூட்டல், தூண்டி வேறுபிரித்தறிதல், துலங்கற் சங்கிலி, நடத்தை உருவாக்கம், தண்டனை, மீளவலியுறுத்தல் அளவுத்திட்டங்கள், மாறா அளவுத்திட்டம், நிரலித்த போதனை போன்ற குறிப்பிட்டுக் காட்டக்கூடியவையாகும்.

இவரது கருத்துக்களை வகுப்பறைச் செயற்பாட்டில் ஆசிரியர் எவ்வாறு பயன்படுத்தலாமென நோக்கின் ஸ்கின்னர் மனிதனிடம் ஏற்படும் கற்றலை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு முன்வைத்த கருத்துக்கள் முழுமையாக வகுப்பறையில் பயன்படுத்தக் கூடியனவாக உள்ளன. நேர் மீளவலியுறுத்தல், எதிர் மீளவலியுறுத்தல் என்பவற்றை ஆசிரியர் அதிக விழிப்புணர்வுடன் செயற்படுத்த வேண்டும். கணிப்பு, புகழ்ச்சி, அதிகளவு புள்ளிகள் கொடுத்தல், பரிசுவழங்கல் போன்றன மாணவர் சரியான முறையில் கற்பதற்கு வழிவகுக்கும். இவ்வாறு செய்வதால் மாணவர்கள் அவற்றை மேலும் மேலும் செய்வதற்குப் பழகுவர். ஆசிரியரின் ஏச்சு,ஏளனம், அடி ஆகிய தண்டனைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதால் வெற்றிக்கு வழி ஏற்படும். கற்பதற்கு மாணவருக்கு ஊக்கலாக அமையும் பாடசாலையில் ஆசிரியர் பிரம்புடன் செல்லும் நிலை தவிர்க்க வேண்டும்.

கற்றல் பணியில் ஈடுபட்டுள்ள பிள்ளைக்கு குறித்த கற்றல் பணியில் முன்னேற்றம் தொடர்பாக விரைவாகத் தெரியப்படுத்த வேண்டும். உடனடியான பின்னூட்டலே சிறந்தது. மாணவர் விடும் தவறுகள், தவறான விளக்கங்கள் என்பவற்றை உடனுக்குடன் திருத்திக் கொள்வதில் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

குறித்த ஒரு கற்றலானது நீண்ட காலத்திற்கு மீளவலியுறுத்தப்படாத போது அது மறைந்து விடலாம். எனவே கற்றவற்றை மீட்டல், வெறு நிலைமைகளில் பிரயோகித்தல் வினாக்களுக்கு விடையளித்தல் போன்ற செயற்பாடுகளில் ஆசிரியயர் வழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். படிமுறை அண்ணளவாக்கம், நடத்தை உருவாக்கம் போன்ற கருத்துக்களை ஆசரியர் கற்பித்தலின்போது சிறறந்த முறையில் பயன்படுத்த முடியும். கூடுதலாக ஆரம்ப வகுப்புகளில் பிள்ளை எழுத, வாசிக்க கற்பிக்கும் போது குறித்த விடயத்தை சிறு பகுதிகளாக வகுத்து கற்பித்தல் சிறந்தது. இவ்வாறு செய்வதால் ஒவ்வொரு பகுதியிலும் பிள்ளை வெற்றியடைந்து இறுதியில் முழவதையும் கற்று இலக்கினை அடைய வழி ஏற்படும்.

பாடசாலை செயற்பாடுகளில் ஆசிரியர் ஒரே நேரத்தில் எல்லா மாணவர்களையும் கவனிக்க வேண்டிய தேவை உள்ளதுடன் வேறு பல காரணங்களாலும் மாணவரது ஒவ்வொரு செயலுக்கும் மீளவலியுறுத்தல் வழங்க இயலாது. இந்நிலையில் இடைவிட்ட மீளவலியுறுத்தலைப் பின்பற்ற முடியும். இந்த வகையில் மாணவரின் இயல்புகளுக்கும், கற்கும் பாடத்திற்கும் பொருத்தமான மீளவலியுறுத்தல் ஒழுங்கை உருவாக்குவதில் ஆசிரியர் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

கற்பித்தலில் ஓர் ஆசிரியர் தூண்டி பிரித்தறிதலையும் தூண்டி பொதுமையாக்கலையும் நிதானமாக விழிப்புணர்வுடன் கையாள வேண்டும். கற்பிக்கும் விடயத்தில் ஒத்தனவற்றை பொதுமையாக்கி வேறுபட்டவற்றை பிரித்துக் காட்டிக் கற்பிக்க வேண்டும். இந்த முறையில் பல பாடங்களிலும் கற்பிக்க சந்தர்ப்பமுண்டு. தொழிலிசார் நிபந்தனைப்பாட்டுக் கொள்கைகளையும் மீளவலியுறுத்தல் பற்றிய கருத்துக்களையும் பயன்படுத்தி விரும்பும்

நடத்தைகளை பிள்ளைகளிடம் உரு வாக்க முடியுமென கூறப்படினும் இது எந்தளவுக்கு சாத்தியமானது என்பது கூறமுடியாதுள்ளது.

இந்த வகையில் இதுவரை நோக்கப் பட்ட கற்றற் கொள்கைகள் எவையும் கற்றலில் அறிகை தொழிற்பாடுகளின் பங்குபற்றி அக்கறை காட்டாது தூண்டி துலங்கல் என்பவற்றுக்கிடையிலான தொடர்பாகவே கற்றலை உருவகப் படுத்தியுள்ள வகையில் விமர்சிக்கப்படு கின்றது. மனிதரின் ஆரம்பநிலைக் கற்றலை மாத்திரமே தூண்டி துலங்கல் இணைப்பு மூலம் விளக்கினரே தவிர கணிதம், சமூக வாழ்வு, அழகியற்கலை போன்ற சிக்கலான சிந்தனை முறை களை விளக்க முற்படவில்லை. எனவே ஆசிரியர் தனியே தூண்டி துலங்கல் பொறிமுறையினை மாத்திரம் பயன் படுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாட் டில் வெற்றிகாண முடியாது இதனால் கள - அறிக்கை தொழிற்பாடுகளும் அவசியமானவை என்ற வகையில் அவை பற்றியும் நோக்குவோம்.

**கள அறிகை கொள்கையாளர்களின் பிரதான கருத்துக்களும் அக் கருத்து க்கள் ஆசிரியர்களின் விழிப்புணர் வில் வகிக்கும் பங்கும்**

இத்துறைசார்ந்த பல உளவிய லாளர்கள் இருப்பினும் இங்கு ரோல்மன், கேட்லூவின் கெஸ்டாலற் உளவியலாளர்கள், கக்னே என்போரது கொள்கைகளும் கருத்துகளுமே எடுத்துக் காட்டப்படுவதுடன் அவர் களது கருத்துக்கள் ஆசிரியரது விழிப் புணர்வில் எத்தகைய பங்கு வகிக் கின்றது என்பது பற்றியும் நோக் கப்படுகிறது.

**ரோல்மன் உடைய குறிகற்றல் கொள்கை**

*1886 - 1959* காலப்பகுதியில் வாழ்ந்த ரோல்மன் "குறிகற்றல் கொள்கையை" முன்வைத்தார். கற்றல் என்பதை புறத்தூண்டிகளுடன் ஏற்படும் அனுபவங்கள் காரணமாக ஒருவனது அறிவில் ஏற்படும் மாற்றம் என ரோல்மன் குறிப்பிட்டார். அறிகை சார் கருத்துக்களை விளக்கும் பொரு ட்டு ரோல்மன் மேற்கொண்ட சகல பரிசோதனைகளிலும் எலிகளையே பயன்படுத்தியுள்ளார்.

இவரது கருத்துக்கள ஆசிரியரது விழிப்புணர்வில் செலுத்தும் தாக்கத் தை நோக்கின், ரோல்மன் தனது பரிசோதனைகளுடாக இடம் கற்றல், மறைகற்றல் வெகுமதி எதிர்பார்க்கைக் கற்றல் எனும் மூன்று பிரதான எண்ணக்கருக்களை முன் வைத்துள் ளார். இடம் கற்றல் என்பது கற்கப் பட்ட வழிமுறை மட்டுமன்றி கற்கப் படும் பணியின் இலக்கும் கற்கப்படு கின்றது என்பதாகும். மறைகற்றல் என்பது கற்றல் நிகழும் வேளையில் கற்றல் நிகழ்ந்தமைக்கான ஆதாரங்கள் / தடயங்கள் எதுவும் காணப்படாத போதும் கற்றல் நிகழ்ந்து அது வெளி யே புலப்படாது மறைந்து இருத்த லாகும். வெகுமதி எதிர்பார்க்கைக் கற்றல் என்பது கற்போன் குறித்த ஒரு வெகுமதியை எதிர்பார்த்துக் கற்ப தாகும். எதிர்பர்த்த வெகுமதி தோன் றாத நிலையில் கற்போனினன் நடத்தை தடைப்படுவதாகவும் இருக்கலாம்.

ரோல்மனின் கருத்துக்கள் சிறந்த கல்விசார் பயன்பாட்டைக் கொண்ட தாக இருக்கின்ற வகையில் ஆசிரியரது பணிக்கு உதவுவனவாக உள்ளன. அந்த வகையில் கற்றல் ஓர் நோக்குடைய

செயல் என ரோல்மன் காண்கிறார். குறித்த இலக்கு பற்றி மாணவனுக்கு ஒரு தெளிவான நிலையை ஏற்படுத்தக் கூடியவாறு மாணவனின் முதிர்ச்சி, அனுபவம் என்பவற்றுக்குப் பொருத்த மாக கற்றல் இலக்குகளை தெரிவு செய்வதிலும் அவற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்வதிலும் ஆசிரியர் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

அறிகைப்படம் தொடர்பான விளக்கம் ஆசிரியர் பணிக்கு மிகவும் முக்கியமானது குறிகள்,வழிமுறைகள், தொடர்புகள், தொடர் ஒழுங்குகள் என்பவை கற்போனின் அனுபவங்களை அவனது மனதில் அறிகைப்படங்களாக மாற்றக்கூடியதாக ஆசிரியர் செயற் பாடு அமைதல் வேண்டும்.

முழுமை, புலக்காட்சி என்பவற் றுக்கு கற்பித்தலில் உரிய இடம் வழங் கப்படக் கூடியதாய் ஆசிரியர் தன் செயற்பாட்டை ஒழுங்குபடுத்த வேண்டும். ஏனெனில் எண்ணக்கரு உருவாக்கம், பிரச்சினை விடுவித்தல், நியாயம் காணல் போன்ற செயற்பாடு கள் புலக்காட்சி ஒழுங்கமைப்பிலேயே தங்கியுள்ளது.

இலக்கை அடைவதற்கான குறித்த சில நடத்தைகள் அல்லது திறன்களை மட்டும் உருவாக்காது பலதரப்பட்ட நடத்தைகள் அல்லது திறன்களை உருவாக்குவதில் ஆசிரியர் விழிப் புணர்வுடன் வேண்டும் இதனை "இடம் கற்றல்" என்ற கருத்து தெளிவுபடுத்து கிறது.

மறைகற்றல் என்பது பாடசாலை கற்றலில் பிரதான பங்கு வகிக்கின்றது. கற்கப்பட்ட எல்லாமே நடத்தையாக வெளிக்காட்டப்படுவதில்லை. கற்கப் பட்டதில் பெரும்பகுதி கற்போன் மன தில் மறைந்து கிடக்கின்றது. எனவே அவற்றை வெளிப்படுத்தச் செய்வதற்கு பொருத்தமான தூண்டிகளையும் கற்ற லுக்கான ஒழுங்குகளையும் மாணவனு க்கு ஏற்படுத்திக் கொடுப்பது ஆசிரி யரது பொறுப்பாகும். இந்த வகையில் ஆசிரியர் விழிப்புணர்வுடன் கற்பித் தலில் ஈடுபட வேண்டும்.

கற்போன் தனது பரிசோதனை களில் எலிகளை பயன்படுத்தியே தன் கருத்துக்களை விளக்கியுள்ளார். எலிக் குப் பதிலாக உயரின விலங்குகளைப் பயன்படுத்தி இருப்பின் இவரது கருத்து களுக்கான ஆதாரங்களை சுலபமாக பெற்றிருக்கலாம் என்று சிலர் அபிப் பிராயம் கூறுகின்றார்கள்.

### கேட்லூவினது கொள்கை

இவர் இதனை விளக்குவதற்கு "வாழ்க்கைவெளி" என்ற எண்ணக்கரு வைப் பயன்படுத்தியுள்ளார். இதில் அறிகையமைப்பு, வலுக்களும் விழுமி யங்களும், திறன்களைப் பெறுதல் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களாகக் கற்றல் நோக்கப்பட்டுள்ளது.

இவரது கருத்துக்கள் சார்பான ஆசிரியர் விழிப்புணர்வு பற்றி நோக் கின், உளவியற் சூழல் பற்றியும் குறிப் பாக வாழ்க்கை வெளிபற்றியும், அங் குள்ள கூறுகளின் வலுக்கள் விழுமி யங்கள் பற்றியும் ஆசிரியர்களுக்கு வேண்டிய அறிவை வழங்கி விழிப் புணர்வை ஏற்படுத்தக்கூடியனவாக லூவின கருத்துக்கள் அமைந்துள்ளன. பாடப்பொருள், கற்பித்தல் முறை, கற்பிக்கும் பௌதீகச் சூழல் என்பன மாணவனது உளநிலைக்குப் பொருத்த மாக அமைக்கப்பட வேண்டும் என

ஆசிரியருக்கு வலியுறுத்தவதாக இவரது கருத்துக்கள் அமைந்துள்ளன. கற்போனின் அவா மட்டத்தை அறிந்து ஆசிரியர் தொழிற்படலின் அவசியம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவனின் அவா மட்டமானது குடும்பச்சூழலின் இயல்புகளில் பெரும் பாலும் தங்கியிருக்கும். இதனைக் கருத்திற் கொண்டு பிள்ளையின் அவா மட்டத்தை அறிந்து செயற்படுவதில் ஆசிரியர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

**கெஸ்டால்ற் உளவியலாளர்களது அகக்காட்சிக் கொள்கை**

கெஸ்டால்ற் என்பது ஜேர்மனிய பதத்தின் கருத்தை ஒத்ததாக கோலம், வடிவம், அமைப்பு எனும் கருத்துக் களைப் பெறுகின்றன. வேர்திமர் கோலர், கொங்கா ஆகிய ஜேர்மனிய உளவியலாளர்களே கெஸ்டால்ற் உள வியல் உருவாகி வளர்ச்சியடைவதற்கு முதன்மையாக பங்களித்தவர்களாவர். கற்றல் பற்றிய அவர்களது கருத்துக்கள் கல்வி நடைமுறைகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவர்களது கொள்கை அகக்காட்சிக் கொள்கை எனவும் குறிப்பிடப்படுகின்றது. கோலர் மனிதக் குரங்குகளைப் பயன்படுத்தி செய்த சில பரிசோதனைகளில் தனிப் பெட்டிப் பிரச்சினை, அடுக்குப் பெட் டிப்பிரச்சினை, தனிக்கோல் பிரச்சினை, இரு கோல் பிரச்சினை என்பன குறிப்பி டத் தக்கன. இப்பரிசோதனை களில் பிரச்சினைக்கான தீர்வு சடுதியாக ஏற்படுதல் தவறான அல்லது பயனற்ற முயற்சிகள் எதுவுமற்ற நிலை என்பன முக்கிய அம்சங்களாகும்.

இவரது கருத்துக்ககள் எத்தகைய விழிப்புணர்வை ஆசிரியரிடம் ஏற்படுத் துகின்றது என நோக்கின் அகக்காட்சி ஏற்படுதலே கற்றலாகும் என்பதால் அகக்காட்சி சரியாகவும் விரைவாகவும் பிள்ளையிடம் ஏற்படுவதை உறுதிப் படுத்துவது ஆசிரியரின் பணியாகும். புலக்காட்சி பெறுதல் அகக்காட்சி ஏற் படுவதற்கு முன் நிபந்தனை என்பதால் புலக்காட்சி பற்றிய கருத்துக்களை பயன்படுத்துதல் தொடர்பாக ஆசிரியர் விழிப்புணர்வுடன் செயற்பட வேண் டும். உதாரணமாக ஆரம்ப வகுப்பு பிள்ளைகள் பருப்பொருளுக்கூடாக புலக்காட்சி பெறுவது கூடுதலாகக் காணப்படுவதால் உண்மைப்பொருட் கள், மாதிரி உருக்கள் போன்றவற்றை கற்பித்தலில் பயன்படுத்துதல் அவசிய மானது.

புலக்காட்சி பெறுதலும் அகக் காட்சி பெறுதலும் பிள்ளையின் கற்கும் திறனில் தங்கியுள்ளன. எனவே ஆசிரி யர் பிள்ளையின் முன்னனுபவங்களு டன் தொடர்படுத்தி பாடத்தைத் தொடங்குதல், தொடருதல் என்பவற் றில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

பாடப்பொருளின் அமைப்பிலும் ஒழுங்கிலும், ஆசிரியர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். எனவே ஆசிரியர் பாடத்தினை முன்கூட்டியே திட்டமிடு வது அவசியமாகும். அத்துடன் பாடத் தின் இலக்கினை மாணவர்கள் முன் கூட்டியே அறிந்து கொள்வதற்கும் ஆசிரியர் உதவ வேண்டும்.

ஏனெனில் இது மாணவரது ஊக்க லை அதிகரிக்கச் செய்யும் செயல் என்பதால் இதில் ஆசிரியர் அக்கறை யுடன் செயற்படவேண்டும்.

ஆசிரியர் பாடத்தை மாணவர்களுக்கு கற்பிக்கும் போது பாடம் பெரிதாகக் காணப்படின் அதனை அர்த்தமுள்ளதான கூறுகளாக்கி மாணவனுக்கு வழங்கவேண்டும். பிள்ளைகளின் முன்னைய புலக்காட்சி சுவடுகள் அவர்கள் மனதில் காணப்படும். அவற்றை வெளிக் கொணர்தல் அவசியம். இது கெஸ்டால்ற் உளவியலாளர்களது நினைவுச்சுவடுகள் பற்றிய கரத்தை எடுத்தக் காட்டுகின்றது. பிள்ளை பெறுகின்ற புதிய புலக்காட்சிகள் முன்னைய புலக்காட்சி அனுபவங்களுடன் இணைந்து திரளாக காணப்படும். எனவே பாடத்தை மீண்டும் படிக்கும் பயிற்சி முறையில் ஆசிரயர் கவனம் செலுத்துதல் வேண்டும்.

விளக்கத்துடனான கற்றல் ஏற்படுத்தலை இக்கொள்கை வலியுறுத்து கின்றது. எனவே மாணவனிடம் சரியான விளக்கம் ஏற்பட்டுள்ளதா என்பதை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மூலம் ஆசிரியர் அடிக்கடி உறுதிப் படுத்துவது அவசியமாகும்.

கற்றல் இடமாற்றக் கொள்கையின்படி பின்னால் பயன்படவுள்ள கற்றல் நிலைமைகளில் காணப்படும் ஒழுங்கமைப்பு, பொதுக்கோலங்கள், தொடர்புகள் என்பவற்றை ஒத்த கற்றல் நிகழ்வுகளை ஆசிரியர் வகுப்பில் வழங்குதல் வேண்டும். அகக்காட்சி பெறுவதற்கேற்ற பொருட்கள் பாட விடயங்களை இயன்றளவுக்கு மாணவர் தேடுதல் மூலம் கண்டுபிடிப்பார் எனின் இதனால் ஏற்படும் பயன் உயர்வாக இருக்கும். இதனை ஆசிரியர் கவனிக்க வேண்டும்.

**கக்னே உடைய கொள்கை**

கற்றல் தொழிற்பாட்டினை மிக ஆழமாகவும் விரிவாகவும் முன் வைத்தவர். இவர் அனுபவமே மிகச்சிறந்த ஆசிரியன் என்ற கருத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

கற்றல் இடம்பெற்றுள்ளமையை நாம் நேரடியாக அறிய முடியாது. குறித்த ஒரு கற்றல் நிலைமையில் ஒருவன் புகுவதற்கு முன்னர் அவனிடம் காணப்பட்ட வினையாற்றலுக்கும் கற்றல் செய்பாடுகளின் பின்னரான வினையாற்றலுக்குமிடையே உள்ள வித்தியாசத்திலிருந்தே அவனிடம் ஏற்படும் கற்றலை அவதானிக்க முடிகின்றது.

இவரது கருத்துக்களை நோக்கின் கக்னேயின் கருத்துக்களாக கற்றல் வெளிப்பாடுகள் கற்றல் நிகழ்வுகள் கற்றல் நிபந்தனைகள் என்பன மிகவும் காத்திரமான கருத்துக்கள் ஆகும்.

கற்றல் வெளிப்பாடுகள் என்பது அறிவாற்றல் திறன்கள், அறிகை உத்திகள், சொல்சார் தகவல்கள், இயக்கத்திறன்கள், மனப்பாங்குகள் என்ற ஐந்து வகையான ஆற்றலுடமைகள் மனிதனால் கற்கப்படுவதாக கக்னே குறிப்பிடுகின்றார்.

கற்றல் நிபந்தனைகள் என்பதை அகக்கற்றல் நிபந்தனைகள் புறக்கற்றல் நிபந்தனைகள் என வகைப்படுத்தி நோக்கினார். அகக் கற்றல் நிபந்தனை என்பது குறித்த கற்றல் நிகழ்வு தொடங்க முன்னதாக அவரிடம் ஏற்பட்டு விட்ட கற்றலாகும். புறக்கற்றல் நிபந்தனை என்பது கற்போனுக்கு புறத்தேயிருந்து கற்றலுக்கு வழிகோலும் காரணிகள் ஆகும்.

இவரது கருத்துக்கள் வகுப்பறையில் ஆசிரியரது விழிப்புணர்வு தொடர்பாக செலுத்தும் தாக்கத்தை நோக்கின் ஒவ்வொரு கற்றல் செயலும் பல படிகளைக் கொண்ட வகையில் ஒவ்வொரு படியிலும் காணப்படும் பல்வேறு அகத்தொழிற்பாடுகளுக்கும் ஒத்தாசை வழங்குவனாக புறஊக்கிகள் காணப்படுகின்றன. இதனால் பொருத்தமான ஊக்கிகள் வழங்கப்படாவிடின் கற்றல் தொழிற்பாடு ஸ்தம்பிதம் அடையக் கூடும். இதனை கருத்திற்கொண்டு வகுப்பறையில் ஆசிரியர் பல்வேறு ஊக்குவிப்பு செயல்களை நடை முறைப் படுத்தி கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

செயல் மூலமான கற்றலே எண்ணக் கரு உருவாகத்துணை புரிகின்றது. அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணக்கருக்களினால் உருவாகின்ற கோட்பாடுகளைக்கற்றலே, பாடசாலை கல்வியின் பெரும் பகுதியாகும். கற்றுக்கொண்ட கோட்பாட்டை விளங்கிக் கொள்ளுதல், அதனை ஒரு கூற்றினால் குறிப்பிடல் ஆகியவற்றை வளர்க்கக்கூடிய வகையிலே ஆசிரியர் வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

பிரச்சினை விடுவித்தலில் மாணவரின் வினைத்திறனை வளர்க்கக் கூடியதாக பிரச்சினை நிலைமைகளை ஒழுங்கமைத்து வழங்குவது அசிரியர் பணியாகும். இயக்கத்திறனை விருத்தி செய்வதிலும் ஆசிரியர் விழிப் புணர்வடன் செயற்படவேண்டும். எல்லாப்பருவப் பிள்ளைகளுக்கும் இது அவசியமெனினும் ஆரம்ப வகுப்புகளில் இது பெரிதும் விலியுறுத்தப்படுகின்றது. இதில் ஆசிரியர் அக்கறை காட்டுவது அவசியமானது.

ஒரு பிள்ளையின் மனப்பாங்கு கற்றலுடன் நெருங்கிய தொடர்புடையது. எனவே கற்க வேண்டிய பாட விடயம் சார்பாக ஒரு நேர் மனப் பாங்கை மாணவரிடம் உருவாக்க வேண்டியது ஆசிரியரது பிரதான கடமையையாகும்.

ஒரு சிறந்த போதனை திட்டமொன்றை அமைப்பது பற்றி கக்னே விளக்கியுள்ளார். எத்தகைய ஆற்றலுடைமைகளை மாணவன் கற்றல் வேண்டும் என்பதும் கற்போனுக்கு புறத்தேயுள்ள என்னென்ன ஊக்கல் நடைமுறைகள் கற்றல் தொடர்பான அகத்தொழிற்பாட்டுக்கு ஒத்தாசையாக அமையும் என்பதும் இத்திட்டத்தில் இடம்பெறவேண்டும். இதற்கேற்ப விழிப்புணர்வுடன் ஆசிரியர் போதனையில் திட்டமிடல் அவசியமானது.

இந்த வகையில் கக்னேயின் முயற்சிகள் யாவும் கல்விசார் நடவடிக்கைகளின் பொருட்டு மேற் கொள்ளப் பட்டதால் அவரது கருத்துகள் அனைத்துமே உயர் கல்விப்பயன்பாட்டைக் கொண்டுள்ளன எனலாம்.

## முடிவுரை

கல்வி தொடர்பாக காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களும் தமது பணியினை திறமை யாகச் செய்ய வேண்டிய தேவையும் உள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமானதாக மேற் கொள்வதற்கு தேவையான முக்கிய கருத்துக்களை பல்வேறு கற்றற் கொள்ளையினரும் முன்வைத்துள்ளனர்.

இக்கருத்துக்கள் ஆசிரியர் தன் பணியை வெற்றிகரமாகச் செய்வதற்கு வழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன. இந்த வகையில் குறித்த சில நிபந்தனைகளுக்கமைவாக விலங்குகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் மூலம் பெறப்பட்ட உளவியற் கருத்துகள் பல, வகுப்பறையில் ஆசிரியரால் பயன்படுத்தக்கூடியன என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

முக்கியமாக, நடத்தைக் குறிக்கோள்கள், பணி அல்லது திறன் பகுப்பாய்வு, நடத்தை த உருவாக்கம், செயல் திறன், துடிப்பான துலங்கல், ஒப்புவித்தலும் எழுதுதலும், குறித்துரைக்கப்பட்ட உதவிநூல்கள், பணிதொடர்பான நடத்தைகளை மீளவலியுறுத்தல், போதனைப் பதகளிப்பு இலக்குகளும் நாட்டங்களும், பணிகளின் புலக்காட்சி ஒழுங்கமைப்பு, விளக்கத்துக்காகக் கற்பித்தல், ஞாபகக்குறியீட்டு முறை போன்ற கருத்துக்கள் இங்கு குறிப்பிட்டுக் காட்டக்கூடியன.

எனினும் ஒவ்வொரு கொள்கையும் கற்றலைப் பற்றிய சில தன்மைகளை மாத்திரமே விளக்குகின்றனவே தவிர கற்றலுக்கு முழுமையான விளக்கமளிப்பவையாக இருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் இக்கொள்கை ஆசிரியர் தனது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை எந்நிலைகளில் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்பது பற்றி ஓரளவுக்கு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கற்பித்தல் செயற்பாட்டை விட கற்றல் செயலுக்கே ஒப்பீட்டளவில் அதிக முக்கியத்தவம் கொடுத்துள்ளனர். எனவே கற்றல் கற்பித்தல் ஆகிய இரு செயற்பாடுகளிலும் உளவியலாளர் கவனம் செலுத்துவது அவசியமானது.

எவ்வாறாயினும் வெற்றிகரமான ஆசிரியத்துவப் பணிக்கு ஓரளவுக்கேனும் பங்களித்த வகையில் கற்றல் கொள்கைகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியன. அத்துடன் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு தொடர்பாக ஆசிரியருக்கு குறிப்பிடத்தக்களவு விழிப்புணர்வையும் ஏற்படுத்திய வகையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. என்பதையும் மறுக்க முடியாது.

**உசாத்துணைநூல்கள்**


1. சின்னத்தம்பி.மா. (2004) ஆசிரிய முகாமைத்துவம் விஸ்டம் பப்ளிகேசன்ஸ், கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

2. சின்னத்தம்பி.க. 2003 அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும், Jeya International (PVT)LTD Colombo - 13

3. ஜெயராசா.ச 1994 கல்வி உளவியற் கருத்துக்கள், பூபாலசிங்கம் புத்தகசாலை, லங்கா ஏசியன் பிறின்ட், கொழும்பு

4. சந்தானம்.S. 1994 கல்வியும் சமூகமும், சாந்தா பள்ளிகேசன்ஸ், சென்னை

5. சந்தானம்.S 1993 கல்விக்கோட்பாடுகளும் தத்துவங்களும், சாந்தா பப்ளிகேசன்ஸ், சென்னை

6. சுப்புரெட்டியார் 1985 கல்வி உளவியற்கோட்பாடு அண்ணாநகர், சென்னை

7. அப்பளாச்சாரி.K.R. 1948 உளநூலும் கல்வி பயிற்றுதலும், ஒரியன்ட் லாங்மன்ஸ் லிமிடெட், கல்கத்தா

8. ஞானரத்தினம்.கே. 2006 ஆசிரியம் ஒரு பன்முகப்பார்வை, அகவிழி ரெக்னோ பிறின்ட், கொழும்பு - 06 விழி 02, பார்வை 20

9. சந்திரசேகரன்.சோ. 2004 நவீன கல்வி முறையலில் ஆசிரியரின் மாறிவரும் வகிபாகம், அகவிழி, ரெக்னோ பிரின்ட், கொழும்பு -06 விழி 01 பார்வை 01

10. Chauhan.S.S 1978 Advanced Educational Psychology, Vikas publishing House (Pvt) Ltd. New delhi.

# கணிதம் இன்றியமையாதது

திருமதி. அ.வேதநாயகம்
முன்னாள் கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

எனும் குறளினூடாக மனித வாழ்விற்கு எண் எவ்வளவு முக்கியானது என்பதை வள்ளுவர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். மனிதன் மனிதனாக மதிப்போடு சமூகத்தில் பிறரால் ஏமாற்றப்படாது வாழவேண்டுமாயின் கணித அறிவு முக்கியமானதாகும். கண்ணிற்கு நிகரான கணிதத்தை கசப்பானது என்று கூறி ஒதுக்குபவர்களும் இருக்கிறார்கள். அமுதத்திற்கு நிகரானது என்று சுவைத்து மகிழ்வோரும் இருக்கிறார்கள். உண்மையில் கணிதம் இலகுவானது அது மிகவும் சுவையானது.

## முதற்பாடசாலையில் கணிதம்

ஒரு மனிதனின் முதற்பாடசாலை வீடு ஆகும். பிறந்ததிலிருந்து மூன்று வயது வரை ஒரு குழந்தை வீட்டிலே பல்வேறு அனுபவங்களைப் பெறுகின்றது. தான் வாழும் சூழலில் கிடைக்கும் அனுபவங் களிற்கேற்ப பல கணித எண்ணக் கருக்களையும் உள்வாங்கிக் கொள்கிறது. அதனால் தான் குழந்தை வாழும் வீடுகளில் அவர்கள் கற்றலுக்கான அனுபவங்களைப் பெறும் வகையில் வீடு அமைந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. உண்மைப் பொருட்கள், உருவங்களுடன் விளையாடும்போதும், மண்விளையாட்டு, நீர் விளையாட்டு, நாளாந்த செயற்பாடுகளினூடாகவும் பல கணித எண்ணக் கருக்கள் சார்ந்த காட்சிகள் மனதிலே படமாகப் பதிந்து விடுகின்றது. காலஞ் செல்லச் செல்ல அக்குழந்தையின் மனதிலே ஒருவிதக் கருத்து உருவாகி பின் அடிப்படை எண்ணக் கருவை ஏற்படுகின்றது. எனவேதான் இப்பருவத்தில் பெற்றோர் கள் குழந்தை களுடன் இணைந்து கனிவோடும் பாசத்தோடும் நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்க தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## முன்பள்ளியில் கணிதம்

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்று நன்முன்னோர்கள் மிகவும் அழகாக கூறியுள்ளார்கள். மூன்றிலிருந்து ஐந்துவரை குழந்தை முன்பள்ளிகளில் பயில்கின்றது. மூன்றிலிருந்து நான்குவரையான பிள்ளைகள் ஆடல் பாடல் அபிநயத்தினூடாகவும் உண்மைப்உருப்படிபொருட்களுடன் விளையாடுவதன் மூலமாகவும் கற்றல் அனுபவங்களைப் பெற சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. நான்கிலிருந்து ஐந்து வரையான பிள்ளைகள் விளையாட்டுக்கள், செயற்பாடுகள் ஊடாகவும் அழகியல் ஊடாகவும் கற்றல் அனுபவங்களைப் பெற வழிப்படுத்தப்படுகின்றனர். பிள்ளைகளின் தரத்திற்கேற்ப கற்றலுக்கான சந்தர்ப்பங்

களை வழங்குவதற்கான ஆற்றலை முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றிருப்ப தோடு தேடல் உடையவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

முன்பள்ளியில் பிள்ளைகள் இணங் காணல், தெரிதல், வகைப்படுத்தல், வரிசைப்படுத்தல், ஒன்று ஒன்றுக்கான தொடர்பு, வடிவம், சமச்சீர், அயல் மாறின்மை, அளத்தல், பரப்பளவு, கன அளவு, காலம், முழுவதும் அரைவாசி யும், கோலங்கள், பணம், எண்கள் தொடர்பான எண்ணக்கருக்களைப் பொருத்தமான வகையில் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கப்படு கின்றன. நாளந்த செயற்பாடுகளு டாக தமது பிள்ளைகளிற்கு கற்றலுக் கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்குப் பெற் றோரும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். பரந்த அனுபவங்களைக் கொண்ட பொருத்தமான செயற் பாடுகள் நிறைந்து சிறார்களுக்கு வலுவூட்டும் இடமாக சிறந்த முன்பள்ளிகள் விளங்குகின்றன. இத்தகைய அரிய வாய்ப்பு எல்லாக்குழந்தைகளுக்கும் கிடைப்பதில்லை. குழந்தை ஐந்து வய திற்குள்ளேயே பூரண மனிதனுக்குரிய தன்மைகளைப் பெற்று விடுவதாகவும், ஐந்துவயதை அடையும்போது நன்மை யாகவோ தீமையாகவோ வளர்ச்சி பெற்றுவிடுவதாகவும் ஐந்து வயதிற்குள் இளைக்கப்படும் தீமைகள் மீள ஒரு போதும் திருத்தப்ப முடியாது என சிந்த னையாளர் சிக்மன்புறொயிட் குறிப்பிட் டுள்ளார். எனவே ஐந்து வயதிற்கு முன் சரியானமுறையில் கணித எண்ணக் கருக்களைப் பெறும் வகையில் குழந் தைகளிற்கு வழி காட்ட வேண்டியது கட்டாயமாகின்றது.

## ஆரம்ப வகுப்பில் கணிதம்

முறையான பாடசாலைக்கல்வியின் தொடக்கம் ஆரம்பக்கல்வியாகும். முன்பள்ளிகளிலும் வீடுகளிலும் குழந் தைகள் அனுபவவாயிலாகப் பெற்ற கணித எண்ணக்கருக்கள் ஆரம்ப வகுப்புக்களில் கணிதம் கற்கும்போது கணிதம் இலகுவானது, இனிமை யானது என அவர்களாக உணர முடி யும். ஆரம்பவகுப்பில் ஐந்து வருடங் களும் படிமுறை ஒழுங்கில் கணித பாடப்பரப்புகள் அழகாகத் திட்ட மிடப்பட்டுள்ளன. ஏதோ ஒரு காரணத் திற்காக ஒரு பிள்ளை ஒருவருடம் கணிதம் கற்பதை இழந்தால் ஆசிரியர் விசேடகவனம் எடுத்தாலொழிய பிள்ளையால் தொடர்ந்து ஆரோக்கி யமாக கணிதம் கற்க முடியாமல் போய்விடும். ஆரம்பவகுப்புக்களில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் எண் களின் இடப்பெறுமாணம், கூட்டலில் கொண்டுசெல்லல், கடன் எடுத்துக் கழித்தல், வகுத்தல், பின்னம், தசமம், அளவீடுகளில் அலகுமாற்றம் ஆகிய அலகுகளை விளக்கிக் கொள்வதில் பிள்ளைகள் சிரமப்படுவதாகக் குறிப் பிடுகின்றனர்.

தரம் 6 இல் கற்கும் மாணவர்களிடம் மதிப்பீடுசெய்து பார்க்கும்போது பெருமளவானவர்கள் மேற்படி விடயப் பரப்புக்களில் தெளிவு குறைந்தவர்களா கவே காணப்படுகின்றனர். கணிதம் கற்கும்போதே ஐயம் திரிபற மாண வர்கள் விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் அதற்கேற்ற முறையில் ஆசிரி யர் கற்பித்தல் உத்திகளை மாற்றிப் பயன்படுத்தவல்லவராகத் தம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும். பிள்ளை கஷ்டப்படும் விடயத்தைக்

கற்பிப்பதற்கு ஆசிரியர் கூடிய பாட வேளைகளை ஒதுக்கி திட்டமிட்டுக் கற்கபிக்கலாம். கற்பித்தல் உபகரணங் களை வடிவமைத்து செயல்முறை மூலம் கற்க வழிப்படுத்தலாம். விளை யாட்டுக்களைப் பொருத் தமாக வடிவ மைத்து விளையாடி தெளிவாக விளங்கி உதவலாம். நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி கற்பதற்கு வழிப்படுத்தலாம். விடயப்பரப்பிற்கு பொருத்தமான பாட விதான இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் மாண வர்களை ஈடுபடுத்தலாம். விடயத்தில் நிபுணத்துவம் உடைய வளவாளர்கள் வகுப்பறையில் பயன்படுத்தி எல்லோ ரும் தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கலாம். ஆரம்பவகுப் பில் கற்கும் அத்தனை மாணவர்களும் ஆரம்ப வகுப்பிற்கான கணித விடயப் பரப்பு அத்தனையிலும் தெளிவுபெற்று தரம் 6 இற்கு செல்லவேண்டும். அப் போது தான் கணிதம் இனிமையான தாக உணரமுடியும்.

**இடைநிலை வகுப்பில் கணிதம்**

இடைநிலைக்கல்வியில் தரம் 6 மிகவும் முக்கியமான வகுப்பாகும். தரம் 6 இற்கு இன்பம், கரிசனையும் மதி நுட்பமும், பாடநிபுணத்துவமும் உடைய ஆசிரியர்கள் பாடங்களிற்கு ஒதுக்கப்படல் வேண்டும். வெவ்வேறு சூழல்களிலிருந்தும் பல்வேறு சிறிய பாடசாலைகளிலிருந்தும் வரும் மாண வர்கள் தரம் 6 இலேஒன்றாக சேர்ந்து கற்கும் வாய்ப்பு கிடைக்கிறது. எனவே ஒவ்வொரு மாணவரையும் அறிந்து கணித பாடத்தில் ஒவ்வொருவரினதும் நிலை அறிந்து அதற்கேற்ப கற்பிப்பது அவசியமாகும். மிகவும் முக்கியமான வகுப்பான தரம் 6 இல் கற்கும் மாணவ ரைத் துர்அதிகஷ்டவசமாக பெற்ற ரோரும் கவனத்திலெடுப்பதில்லை. அதிபரும் அக்கறை செலுத்துவ தில்லை. பொருத்தமான ஆசிரியர்களை நியமிப்பதுமில்லை. ஆசிரியர்களிலும் பலர் கவனமெடுத்து செயற்படுவ தில்லை. வெளியிருந்து மேற்பார் வைக் காக வருபவர்களும் தரம் 6 இல் அக்கறை செலுத்துவதில்லை.

தரம் 6 கணிதபாடத்திட்டத்தில் ஆரம்ப வகுப்புக்களில் பிள்ளைகளுக்கு கஷ்டமானதென இனங்காணப்பட்ட பாட அலகுகள் வளர்ந்து செல்வதோடு அட்சர கணிதம், கேத்திரகணிதம் ஆகியவற்றில் அடிப்படை எண்ணக் கருக்கள் ஆரம்பிக்கின்றன. இந்த அடித் தளம் மிகவும் கவனமாக ஒவ்வொரு பிள்ளையிடமும் கட்டியெழுப்பப் படவேண்டும்.

கணித பாடத்தில் பல அடிப்படை எண்ணக்கருக்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து ஒரு புதிய விடயப் பரப்பு உருவாகிறது. எனவே ஒவ்வொரு அடிப்படை எண்ணக்கருக்களையும் தெளிவாக விளங்கிக்கொண்ட ஒரு பிள்ளையாலேயே கணிதத்தை சுவைத் துப்பார்க்க முடியும்.

தரம் 7,8 இலும் பல புதிய அடிப் படை எண்ணக்கருக்கள் அறிமுகஞ் செய்யப்படுகின்றன. பக்குவமாக கவன மெடுத்து கணிதம் கற்பிக்கப்பட வேண் டிய இந்த வகுப்புக்களில் முழுமையாக அக்கறையோடு கணிதம் கற்பிக்கப்படு வதில்லை. தரம் 9,10 இல் கற்பித்து தரம் 11 இல் மாணவர்களை துன்புறுத்திக் கற்பிப்பதால் எந்தப் பலனும் கிடைக் கப் போவதில்லை. கணித பாடத்தில் வெற்றி காணவேண்டுமாயின் ஒவ்

வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாட அலகும் பிள்ளைகள் விளங்கிக் கொள்ளும் வகையில் உரிய உத்திகளைப் பயன்படுத்தி கற்பிக்கப்படல் வேண்டும். "உரிய படிமுறைகள் ஊடாகக் கற்பிப்பதன் மூலம் எதையும் யாருக்கும் கற்பிக்கமுடியும்" என சிந்தனையாளர் புறூனர் குறிப்பட்டுள்ளார்.

**விடய முன் அறிவு**

ஒரு பாட விடயத்தை கற்பிக்க ஆரம்பிப்பதற்கு முன் அந்த விடயத்தில் பொதிந்துள்ள விடய முன் அறிவில் அத்தனை பிள்ளைகளும் தெளிவாக உள்ளார்கள் என்பதை ஆசிரியர் உறுதி செய்தல் வேண்டும். "நிறைவர்க்கமாகித் தீர்த்தல்" மிகவும் கஷ்டமானது என பல மாணவர்கள் கூறக் கேட்டுள்ளோம். விடய முன் அறிவு தெளிவாக இருந்தால் எதுவும் இலகுவானதே. ஒரு சமன்பாட்டின் இரு புறமும் ஒரு எண்ணால் வகுத்தல்,

சமன்பாட்டின் இருபுறமும் ஒரு எண்ணைக்கூட்டுதல் ,சமன் பாட்டின் இருபுறமும் நிறைவர்க்கமாக எழுதுதல், சமன்பாட்டின் இருபுறமும் வர்க்க மூலம் காணல்

எளிய சமன்பாடு ஒன்றைத் தீர்த்தல்

நிறை எண் செய்கை

தசம எண் செய்கை

தசம எண்ணில் மட்டம் தட்டல்

ஆகிய முன் அறிவில் மாணவர் தெளிவாக இருந்தால் நிறைவர்க்க மாகித் தீர்ப்பது மிகவும் இலகுவானது.

ஓர் ஆசிரியர் பல்கோணியின் புறக் கோணங்கள் பற்றி மிகவும் அழகாக கற்பித்தார். ஐந்து கணக்குகளை செய்யுமாறு பணித்தார். 22 மாணவர்கள் உள்ள வகுப்பில் எவருமே ஒரு கணக்குக் கூட செய்யவில்லை. ஆசிரியர் மன முடைந்தார். அங்கு சென்றிருந்த முதன்மை ஆசிரியர் பிள்ளைகளிடம் சென்று பிரச்சினையினை இனங்கண்டார். எந்தப் பிள்ளைக்கும் வாய்பாடுகள் தெரியவில்லை. கணக்குக்குத் தேவையான வகுத்தல்களை கரும்பலகையில் செய்தவுடன் சகலமாணவர்களும் பயிற்சிகளை சரியாகச் செய்துகாட்டினர். முன் அறிவில் தெளிவு இல்லாவிட்டால் ஆசிரியர் கற்பித்தல் உபகரணங்களைப் பயன் படுத்தி எவ்வளவு சிறப்பாக விடயத்தை கற்பித்தாலும் வெற்றிகாண முடியாது.

**தர உள்ளீடு**

கணிதம் கற்பிப்பதற்கு தர உள்ளீடு மிகவும் அவசியமானது. மாணவர்கள் தரத்திற்கேற்ப செயலட்டைகள், கற்பித்தல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், மதிப்பீட்டுக்கருவிகள் தயாரிப்பதற்கும் பாடவிதான இணைக் கலைத்திட்ட செயற்பாடுகளான கணித பாட கண்காட்சி, கணிதபாசறை, கணித சஞ்சிகை ஆக்கம், கணித நூலாக்கம், கணித புதிர்போட்டிகள், கணித வினாடி வினாபோட்டிகள், கணித பாடத்தில் கலைநிகழ்வுகள், கணித பாடம்சார்ந்த ஓவியங்கள் வரைதலும் காட்சிப்படுத்தலும்,களப்பயணம், கணித வள நிலையம் அமைத்தல் ஓர் ஆசிரியர் தான்பெற்ற பயிற்சியை பாடசாலையில் ஏனைய ஆசிரியர்களுக்கு வழங்குதல் என்பவற்றுக்கு தர உள்ளீடுகள் மிகவும் அவசியமாகும்.

கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டிய விடயப் பரப்புக்களில் தெளிவாக விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும். தனக்குப் பிரச்

சினையான பகுதிகளை இனங்காணும் மனப்பாங்கு உடையவராக இருத்தல் வேண்டும்.பாடவல்லுனர்களை அணுகியோ அன்றி தேடலினூடாகவோ தனது பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள வேண்டும். இயல்பாகவே கணிபாட ஆசிரியர்களின் தர வட்டங்களில் பங்கேற்று தனது வல்லமைகளைப் பகிர்ந்து கொள் வதுடன் தனது பலவீனங்களையும் பலமாக்கிக்க கொள்ளவேண்டும். பல்வேறு கற்பித்தல் நுட்பங்களினூடாக கற்பித்தும் எல்லாப் பிள்ளைகளும் தெளிவாக விளக்கம் பெறவில்லை எனின் தனது சகபாடி ஆசிரியரையோ பாட வல்லுநர் ஒருவரையோ வகுப்பறையில் அவ் விடயத்தை கற்பிக்க அனுமதிக்கும் மனப்பக்குவம் ஆசிரியருக்கு இருக்க வேண்டும்.

**வீட்டுவேலை**

கற்பித்த விடயங்களில் வீட்டு வேலை வழங்கவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். ஆனால் அந்த வீட்டு வேலை மாணவர்களிற்கு பெருஞ் சுமையாக அமையக்கூடாது. ஆயிரக் கணக்கான மாணவர்களிடம் கணித பாடத்தில் வீட்டுவேலை தொடர்பாக வினாவியபோது அவர்களில் பெரும் பாலானோர் பின்வருமாறு பதிலளித்தனர். வகுப்பறையில் ஆசிரியருடன் இருக்குபோது கூட ஒரு கணக்கைச் செய்து சரிவாங்கமுடியாத நாம் வீட்டிலே உதவி எதுவுமின்றி அத்தனை வீட்டுக்கணக்குகளையும் எப்படி எம்மால் செய்ய முடியும்? எங் களிற்கு கணக்கை செய்து ஆசிரியரிடம் சரிவாங்க மிகவும் ஆசை ஆனால் எங்களால் முடியவில்லை. என்று வேதனையோடு கூறினார்கள். எனவே வகுப்பறை யில் மாணவர்கள் விளங்கும் வகையில் கற்பித்து பயிற்சி கொடுத்து ஒவ்வொரு பயிற்சிக்கொப்பியிலும் சரி போடவில்லை என்றால் வீட்டுவேலை கொடுப்பதில் அர்த்தமில்லை என்பதை நாம் உணரவேண்டும்.

**மொழி ஆற்றல்**

கணக்குகளை வாசித்து கிரகித்து விளங்கிக் கொள்ளமுடியாமையால் கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் பலரைக் காண்கின்றோம். கணிதபாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்க வேண்டுமாயின் அவர்கள் மொழிஅறிவு உடையவர்களாக இருக்கவேண்டியது அவசிய மாகும்.

**அதிபரின் பொறுப்பு**

அதிபர் பாட ஆசிரியர்களிடத்தில் அன்பும் ஆதரவும் உடையவராக இருக்கவேண்டும். ஆசிரியர்களை ஊக்குவித்து உச்சமாக. பணியாற்ற வழிசெய்பவராக இருக்கவேண்டும். பரீட்சையில் நூறுவீத பெறுபேறு பெற்ற பாட ஆசிரியர்களைப் பாராட்ட விரும்பாத அதிபர்களையும் காண் கின்றோம். சாதனை படைத்த ஆசிரியர் களைப் பாராட்ட விரும்பாத அதிபர் களைக்காண்கின்றோம். ஆசிரியர் களிடமுள்ள ஆற்றல்களை இனற்கண்டு பாராட்டி மாணவர்கள் அவ் ஆற்றலால் பயன்பெறும் வகையில் பணியை விரிவு படுத்தும் விவேகம் அதிபர்களிடம் இருக்கவேண்டும். கணித பாடவிதான இணைக்கலைத்திட்ட செயற்பாடு களைத் திட்டமிட்டு பாட வேளைக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் செய்வதற்க ஊக்குவித்தல் வேண்டும். கணிதபாட

தரவட்டங்களை ஏற்பாடு செய்து தம்மை ஆசிரியர்கள் மேம்படுத்தி உற்சாகமாகப்பணிபுரிய ஆதரவாயிருத்தல் வேண்டும். கணிதபாட கணிப்பீடுகள், கொப்பிகள், பரீட்சை விடைத்தாள்கள் என்பவற்றை ஆராய்ந்து மாணவர் நலிவாக உள்ள கணிதபாட விடயப் பரப்புகளை இனங்கண்டு ஆசிரியர், மாணவர் களிற்கான உயர் மட்டக் கல்விச் செயற்பாடுகளைப் பொருத்தமான வளவாளர்களினூடாக ஒழுங்குசெய்து கொடுப்பதுடன் வெற்றியை மதிப்பிடும் வல்லமை உடையவராகவும் அதிபர் விளங்கவேண்டும். "அன்பினால் உலகை ஆளலாம்" என்பார்கள். ஆசிரியர்கள் மாணவர்களிடத்தில் அன்பாக இருப்பதுபோல அதிபர்களும் ஆசிரியர்களிடத்து அன்புடையவராக இருந்தால் உச்சமான விளைவினை மாவணர்கள் பெறமுடியும் என்பதில் சந்தேகமில்லை.

கணிதபாட அபிவிருத்தியில் மேற்பார்வையாளரின் பங்கு மிகவும் முக்கியமானது. அது அர்த்தமுள்ளதாக அமைய வேண்டியது அவசியமாகும்.



தரம்–06A

தரம்–06B





தரம்–07A

தரம்–07B





தரம்–08A



தரம்–08B

தரம்–09A





தரம்–09B

தரம்–10A





தரம்–10B

# ஆசிரியர் ஆக்கவியல்

# வாழ்வியலில் வணக்கம்

திரு. கி. தருமராசா
ஆசிரியர் (தமிழ்)
(B.A Diploma in Education)

"வாழ்வியலில் வணக்கம்" எனும் இக்கட்டுரையானது வாழ்வியலிற்கும், வணக்கம் கூறிக்கொள்ளுதலிற்கும் இடையிலான இடைவினைத் தொடர்புகளையும், பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு முறைகளில் பயன்படுத்தப்படுகின்ற வணக்கம் எனும் சொல்லினது பொருள் சிறப்பினையும் அதன் இன்றைய போக்குகளையும் ஆராய்வதாக அமைகின்றது. வாழ்வியல் என்பது மக்களுடைய அன்றாட வாழ்க்கைமுறைமைகளுடனும் வாழ்க்கை நிகழ்வுகளுடனும் தொடர்புடையது. ஒரு மனிதனுடைய வாழ்க்கைப்பருவங்கள், அவனுடைய செயற்பாடுகள், உறவுகள், பொருளாதாரம், தொழில்கள், உடல் உள நலன்கள், கல்விச்செயற்பாடுகள், உணவு உடை உறையுள் பயன்பாடுகள், இன்பதுன்பங்கள், குடிப்பெயர்வுகள், போக்குவரத்து என அன்றாடம் இடம் பெறுகின்ற பல்வேறு செயற்பாடுகளையும் வாழ்வியல் எனலாம். மக்களது இன, மத, மொழி, பண்பாடு, கலை, கலாசாரம் என்பவற்றிற்கு ஏற்ப இவை மாறுபட்டுக் காணப்படும். இன்றைய அறிவியரல் தொழிநுட்ப வளர்ச்சியால் உலகம் ஒரு குறுகிய கிராமம் ஆகிவிட்டது. உலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஒரு கிராமத்தவர் ஆகிவிட்டனர் எனும் கூற்று பரவலாகக்காணப்படுகின்றது. எனினும் தமிழ் இன மக்கள் இன, மத, மொழி, பண்பாடுகளால் மாறுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர். தம் வாழ்வியலிலே வேறுபட்ட இன, மத, மொழிப் பண்பாட்டுக் கலப்பினை ஏற்று இன, மத, மொழி, பண்பாட்டில் சிதைவினை எதிர் கொண்ட வாழ்வியலினை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். "வணக்கம் என்பது வணங்குதல், இணங்குதல், மொழிதல், போற்றுதல், வாழ்த்துதல், வரவேற்றல், வளைத்தல், அன்புசெலுத்துதல், நன்றியுரைத்தல் எனப் பல பொருள் கொண்டு விளங்கும் உயர்ந்த சிந்தனையைக் கொண்ட ஒரு சொல்லாகக் காணப்படுகின்றது. மன உணர்வுகளோடு ஒன்றிணைந்து பல்வகைச்சூழல்களை உணர்த்துவதற்குரிய சிறப்பு மிக்க சொல்லாக விளங்குகின்றது. இறைவனைத் தொழுவதற்குரிய ஒரு குறியீடாக காணப்படுகின்றது. இறைவனைத் தொழுதலை வணங்குதல் என்று குறிப்பிடுகின்றோம். இவ் "வணக்கம்" எனும் சொல்லானது பல இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. எடுத்துக்காட்டாக "கோள் இல் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" (குறள் -09) - (திருக்குறள்)

"தலையே நீ வணங்காய்......"

(தேவாரம்)

"...... மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம் - (பெரியபுராணம்)

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உலக மக்களின் வாழ்வியல் செயற்பாடுகளில் ஒருவரிற்கு ஒருவர் தம் இன, மத, மொழிப் பண்பாட்டிற்கு ஏற்ப வணக்கம் கூறிக் கொள்வது மரபாகக் காணப்படுகின்றது. ஒருவரை ஒருவர் சந்திக்கின்றபோதும், சபைகளில் பேசுகின்றபோதும், விடைபெற்றுச் செல்கின்ற போதும், உரையாடுகின்ற போதும், என பல இடங்களில் வணக்கம் சொல்வதைக்காணலாம். சிங்கள மக்கள் "ஆயுபோவன்" எனவும் ஹிந்தி இன மக்கள் நமஸ்தே" அல்லது "பிரனாம்" எனவும் முஸ்லிம்கள் "அஸ்ஸலாமு அலைக்கும்" எனவும் ஆங்கிலத்தில் காலம் குறித்து "குட்மார்னிங்" "குட்ஆஃப்டர்நூன்" "குட் ஈவினிங்" எனவும் வணக்கம் கூறிக் கொள்கின்றனர். "வணக்கம்" என்று கூறிக்கொள்வது தமிழர்களுடைய மரபாகும். தமிழர்களின் போற்றுதற்குரிய ஒரு சொல்லாக இது விளங்குகின்றது. தனது அன்பினையும் புலப்படுத்துளவதாகக் அமைகின்றது.

தம்பதியினர்கள் தங்களிற்குள்ளே கூறிக்கொள்கின்ற வணக்கங்கள் அன்பு, பாராட்டு, நன்றி போன்றவற்றை வெளிப்படுத்துவதாக அமையும் நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது கூறிக் கொள்கின்ற வணக்கங்கள் அன்பு உணர்வினை வெளிப்படுத்துவதாய் காணப்படுகின்றது எனலாம்.

மன்னன் மக்களிடத்தும், மக்கள் மன்னனிடத்தும் கூறிக்கொள்கின்ற வணக்கங்களும் வேறுபட்ட கருத்துக்களையே உணர்த்துகின்றன. மன்னன் கூறும் வணக்கமானது "என்னுடைய ஆட்சியில் நற்பேறு பெற்று வாழ்வீராக" எனும் வாழ்த்தின் குறியீடாகவும் மக்கள் கூறும் வணக்கம் "உங்கள் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் நல்வாழ்வு பெற்றுள்ளமைக்காக நம் நன்றியினைக் கூறுகின்றோம்" எனும் குறியீடாகவும் அமைந்துவிடுகின்றது.

அவையில் உரையாற்றும் ஒருவர் கூறுகின்ற வணக்கமும் அதற்கு அவையில் உள்ளவர்கள் கூறுகின்ற வணக்கமும் வெளிப்படுத்தும் கருத்துக்களாக அவைக்குக் கூறப்படும் வணக்கம் அவையை அன்போடு வரவேற்பதாகவும் அவைகண்டு அகமகிழ்வதையும், பதிலாக அவையினர் கூறுகின்ற வணக்கம் உரையாற்றுபவர் மீது உள்ள மரியாதையையும் அவருடைய கருத்துக்களை மனப்பூர்வமாக கேட்பதற்கு தயாராக இருக்கின்ற நிலையினையும் புலப்படுத்துகின்றது எனலாம்.

பகைவரும் நமக்கு வணக்கம் செலுத்துவர். அவர்கள் செலுத்தும் வணக்கமானது நன்மையளிக்கக் கூடி யது என நம்பிவிடக்கூடாது. அது மறைமுகமாகத் தீமையையே தரும். இதனை வள்ளுவரின் "சொல் வணக்கம் ஒன்னார்கள் கொள்ளற்க வில்வணக்கம்.

தீங்கு குறித்தமையான "(குறள் 827) எனும் குறட்பாவிலே கூறியிருக்கக் காண்கின்றோம்.

இவ்வாறு வணக்கம் எனும் சொல் பல்தரப்பட்ட பொருளை உணர்த்துகின்றது. இறைவன் முதற் கொண்டு எளிய மாந்தர் வரையிலான அனைவரும் வணக்கம் எனும் சொல்லிற்கு ஏற்புடையவர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறான உயர்வுமிக்க ஒரு குறியீட்டுச் சொல்லாக இது விளங்குகிறது.

இன்றைய நாளில் இச் சொல்லின் பயன்பாட்டில் பிற இனத்தவர் பண்பாடு கலந்துவிட்டது. காலையில் சந்திக்கும்போது "காலைவணக்கம்" நண்பகலில் சந்திக்கும்போது நண்பகல் வணக்கம் அல்லது மதியவணக்கம்" மாலையில் சந்திக்கும்போது "மாலை வணக்கம்" இரவில் சந்திக்கும்போது இரவுவணக்கம் சொல்லும் வணக்கம் தமிழில் காணப்படுகின்றது. அத்தோடு சபையில் உரையாற்றும் போது இவ்வாறு காலத்தை முன்வைத்து வணக்கம் சொல்லும் மரபு ஆங்கிலேயரின் "குட்மோர்னிங்", "குட்ஆஃப்டநூன்: "குட்ஈவ்னிங்","குட்நைட்" போன்ற முறைமையிலிருந்து பின்பற்றப்பட்டுள்ளது. காலத்தை முன்வைத்துச் சொல்லுவது தமிழ் மரபன்று ஆங்கிலேயரின் பண்பாட்டு மாற்றத்தால் ஏற்பட்ட ஒரு பண்பாட்டு மாற்றமாக இது காணப்படுகின்றது.

"இன்றைய காலைப்பொழுது நற்பொழுதாக அமையட்டும்" எனும் கருத்தினையே காலைவணக்கம் எனும் தொடர் குறிக்கின்றது. இவ்வாறே "மாலைவணக்கம்", "மதியவணக்கம்" "இரவுவணக்கம்" என்பனவும் அமைகின்றன. இத்தகைய வணக்கங்கள் குறிப்பிட்ட ஒருஎல்லையைக் கொண்ட பொருளையே உணர்த்துகின்றது. ஆனால் வணக்கம் எனும் சொல் தமிழர்களின் பரந்துபட்ட நிலையினைக் கொண்டிருக்கின்றது. தமிழர்களின் தனிப்பெரும் சிந்தனையும் அவர்தம் பண்பாடும் இன்று சிதைந்துவிட்டது.

"வணக்கம்" எனும் சொல் குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டுமே பயன்படுத்துவதன்று அரசன் முதல் ஆண்டிவரை எல்லோரிற்கும் உரிய பொதுச் சொல்லாக விளங்குகின்றது. பல்வேறு பேறுகளைப் பெற்றுள்ள வணக்கம் எனும் சொல்லை பண்பாட்டுக் கலப்பு இல்லாமல் பயன்படுத்துவது தமிழர் நம் கடமையாகும். எல்லாக்காலத்திற்கும் எல்லாச்சூழலிற்கும் பொருந்தும் வணக்கம் எனும் சொல்லை நம் பண்பாட்டிற்கு மாறாக பயன்படுத்தாது வணக்கத்தை வணக்கம் என சொல்வதே சாலச்சிறந்தது ஆகும்.

வணக்கம்.

# ஊர்ச்சிறப்பு

செல்வி க.சந்திரதேவி
ஆசிரியை, நாவற்குழி ம.வி

தன்னான னானனனே தானனனே னானனனே
தன்னான னானனனே தன்னானே தன்னான னானனனே

சம்புமா குண்டமூராம் சரித்திரத்தில் பெற்றபேராம்
நம்பிவந்தோர் தங்கிவாழும் பொன்னியே
நாவற்குழி இந்த ஊராம்-அடி பொன்னியே
நாவற்குழி இந்த ஊராம்

நாற்புறமும் நல்லவளம் நடுவினிலே நம்ம ஊரு
கரையோரம் கடல்சூழ மச்சானே
இருபுறமும் பெருநகரம் - என் மச்சானே
இருபுறமும் பெருநகரம்

தன்னான.......

கார்மேகம் காத்திருந்து கழனிதன்னில் நெல்விதைத்து
ஊர்போற்ற வாழுகின்ற பொன்னியே
உயர்வான மக்கள் குலம் அடி பொன்னியே
உயர்வான மக்கள் குலம்

வலைவீசி மீன்பிடித்து வயற்காட்டில் சுற்றலாவி
விலைபேசி விற்றுவாழும் மச்சானே
நிலையான மக்கள் உண்டு என் மச்சானே
நிலையான மக்கள் உண்டு

தன்னான.......

சந்துபொந்து வீதியெல்லாம் சந்நிதான இடம் உண்டு
பிந்தாம்லர் பிசகாமல் பொன்னியே
வந்து மக்கள் வணங்கிடுவார் அடி பொன்னியே
வந்து மக்கள் வணங்கிடுவார்

ஊருக்கு நடுவினிலே உயர்ந்திருக்கும் ஓர் விருட்சம்
நாங்கள் கற்கும் கல்விக்கூடம்- மச்சானே
நாவற்குழி வித்தியாலயம் - என் மச்சானே
நாவற்குழி வித்தியாலயம்

தன்னான.......

# கணித பாடத்தின் முக்கியத்துவம்

செல்வி தயாநிதி சடாச்சரம்
ஆசிரியை,நாவற்குழி ம.வி

ஒருவரை முழுமனிதராக்குவது கல்வியாகும். கல்வி இன்றைய கால கட்டத்தில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. நவீன உலகிற்கு தயாரப் படுத்தும் இடமாக பாடசாலை விளங் குகின்றது. கல்வி பற்றிய சிந்தனைகளும் கருத்து வெளிப்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவற் றுள் கணிதபாடமானது முக்கியமான பாடமாக கருதப் படுகின்றது. கணிதம் இல்லாவிடின் மனிதனுக்கு வாழ்கை யில்லை என்றளவிற்கு எங்கும் கணிதம் வியாபித்துள்ளது. கணிதம் ஒரு கலை என்றும் கணிதம் ஒரு மொழி என்றும் கணிதவியலாளர்கள் குறிப்பிட்டுள்ள னர். கணிதத்தில் காணப்படும் சமச்சீர்த் தன்மைகள் கேந்திர கணித உருக்கள் என்பவற்றைப்பயன்படுத்தி கட்டடக் கலைகள் வளர்ச்சிபெற்றுள்ளன. இதிலி ருந்து கேந்திர கணிதம் ஒரு கலை எனவும் கருதலாம். கணிதம் என்பது இருக்கக்கூடிய சகல கோலங்கள் பற்றிய கல்வியும் பகுத்தளவுபாடு இயற்கை யியலின் பொருட்டு அதனை எந்த விதத் திலும் பிரயோகிக்கத்திறன் கணிதத்தில் நயக்கக்கூடிய தன்மை ஆகிய இரண் டையும் உள்ளடக்கியது என கணிதவிய லாளரான W.W.சோயர் குறிப்பிடுகின் றார். வேறுவழிகளில் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளுக்கு தீர்ப்பை முன்வைக்கும் மார்க்கமாக கணிதம் ஆதிகாலத்தில் ஆரம்பமானது என்று இந்திய கணிதவியலாளராக சி. வி. பிரேமசங்கரன் அவர்கள் தமது கணிதக் கல்வி என்னும் நூலில் குறிப்பிட்டு ள்ளார். மேலும் “எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்” என்பதற்கிணங்க பிள்ளைகளின் இரண்டு கண்களாக எண்ணும் எழுத்தும் உள்ளன. இதிலி ருந்து கணிதம் முக்கியமான தொன் றாகும் என்பது புலனாகின்றது. கணித மானது சகல துறைகளிலும் ஒன்றி ணைந்து உலகிலுள்ள ஒவ்வொரு மனித னுடனும் பிரிக்கமுடியாத நிலையில் இணைந்துள்ளது. இக்கணித பாடத்தை ஆரம்பக்கல்வியிலேயே தெளிவாகவும் விளக்கத்துடனும் கற்றல் கற்பித்தல் மிக அவசியமானதாகும்.

மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருப்பது கணிதபாடம் கணித அறிவினை ஆரம்பவகுப்புக்களில் இருந் தே விருத்திசெய்தல் அவசியமானது. எனெனில் கணித பாடமானது இடை யிலோ அல்லது முடிவிலோ கற்கும் ஒரு பாடம் அல்ல அது படிப்படியாக அடையவேண்டிய பாடமாகும். கணிதத்தின் பகுதிகளானது சங்கிலி போன்று ஒன்றோடொன்று பிணைந்து ள்ளது. இதனால் இடைநிலை வகுப்புக் களில் கணிதம் கற்று சக மாணவரை ஆயத்தமாக்குவதற்காக ஆரம்பநிலைக் கணிதத்தில் ஒவ்வொரு மாணவரையும் தேர்ச்சியடையச் செய்தல் அவசிய மாகும்.

பிளேட்டோ அமைத்த கல்விக்கழகத்தின் வாயிலில் ஒரு மேற்கோள் வாக்கியம் பொறிக்கப்பட்டிருந்தது. "கேந்திரகணிதம் அறியாதவன் இங்கு நுழையாதிருப்பானாக" என்பது அந்த வாக்கியமாகும். எவ்வகைக்கல்விக்கும் கேந்திர கணிதமே அடிப்படையாகும். கணித பாடத்தின் முக்கியத்துவத்தை பிளேட்டோ கி.மு 4 ஆம் நூற்றாண்டிலேயே கூறியுள்ளார்.

இவ்வாறு பண்டைக்காலம் தொட்டு கணிதம் முக்கியமான பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பைதகரஸ் கணிதம் பொக்கிசத்தின் ஊற்றுவாய் எனக் கருதினார். அரிஸ்ரோட்டில் போன்ற கல்வியியலாளர்களும் கணிதத்தின் முக்கியத்துவத்தை அன்றே உணர்ந்திருந்தனர். இதனாலேயே எமது நாட்டு பாடவிதானத்தில் கட்டாய பாடமொன்றாக ஆரம்பநிலை தொடக்கம் கனிஸ்ட இடைநிலை தரத்தின் இறுதி வரை கணிதம் கற்பிக்கப்படுகின்றது. எனவே எமது நாட்டில், பாடசாலைக் கல்வி பெறும் எல்லா மாணவர்களும் முதல் பதினொரு ஆண்டுகளில் கணிதம் கற்க நேரிட்டுள்ளது. கணிதம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர் மட்டும் உயர்தரம் கற்க அனுமதிக்கப்படுவர்.

கணித அறிவானது ஒருவரது அன்றாட வாழ்வின் அனேக நடவடிக்கைகளில் ஏதேனும் ஒரு விதத்தில் செல்வாக்கச் செலுத்துகின்றது. மேலும் நவீன வாழ்வின் விண்வெளிப் பயணங்களைத் திட்டமிடல் நிர்வாக வேலைகள், தொழிநுட்ப விவசாய ஆராய்ச்சிகள், கடல் பிரயாணங்கள், கால நிலை அவதானிப்புகள், மருத்துவ சோதனைகள், போக்குவரத்துறை, கட்டட நிர்மானம், கனினி, இணையம் போன்றவற்றிற்கும் கணித அறிவே மிக முக்கியமனதாகும். நேர்மை,நாணயம், பணிவு, வாய்மை முதலிய நல்லொழுக்கப் பண்புகளை குழந்தைகளிடம் வளர்க்கக்கூடிய முறையில் அமைய வேண்டியது கணித பாடத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எதிர்கால வாழ்வு சிறப்புற அமைவதற்கு கணிதம் பற்றி அறிவு இன்றியமையாதது ஆகும்.

# வரலாற்றுப் பாடமும், தமிழ்மொழி மூல மாணவர்களும்

திரு.தி.மதியரன்
ஆசிரியர், நாவற்குழி.ம.வி

2008 ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) மாணவர்கள் முதல் தடவையாகப் பரீட்சையில் தோற்றக்கூடிய வகையில் வரலாற்றுப் பாடமானது இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கு 2007 ஆம் ஆண்டு பாடத்தினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதற்கு முன் சமூகக் கல்வியும் வரலாறும் என்ற கூட்டுப் பாடமாக இருந்து வந்தது. பின்னர் புவியில், குடியியல், வரலாறு என்ற மூன்று பாடத்துறைகளும் தனித்தனியாகப் பிரித்துக் கொள்ளப்பட்டது. அதுமட்டுமல்லாது க.பொ.த (சா.த) பரீட்சையில் வரலாற்றுப்பாடம் கட்டாய பாடமாக சேர்த்துக்கொள்ளப் பட்டது.

சமூக விஞ்ஞானப்பாடங்களில் வன்மையான பாடமாக வரலாற்றுப் பாடம் உள்ளது என்பது எவராலும் மறக்கமுடியாத உண்மையாகும் அந்த வகையில் மாணவர்களுக்கு இலங்கை அரசும் கட்டாயபாடம் என்ற நிலையில் இடைநிலை வகுப்பு மாணவர்களின் கலைத்திட்டத்தினுள் வரலாற்றுப்பாடத்தினை உட்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்க ஒரு விடமாக உள்ளது. உலக நாடுகளில் பொறியியல், மருத்துவம், வணிகவியல், கலைத்துறை ஆகிய கலைத்துறைசார்ந்த மாணவர்களுக்கும் கற்கக்கூடிய ஒரு பாடமாக வரலாற்றுப்பாடம் உள்ளடக்கப்பட்டு கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சர்வதேச ரீதியில் வரலாற்றுப்பாடத்தின் முக்கியத்துவத்தினைப் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

தமிழ்மொழி மூல மாணவர்கள் மத்தியில் இந்த வரலாற்றுப்பாடத்தின் கலைத்திட்டத்தில் கூடுதலான சிங்களச் சொற்களும் சிங்கள வரலாறும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் தமிழ்மொழிமூல கற்றல் செயற்பாட்டுக்கு கடினமானதாக காணப்படுகின்றது. இதனால் மிகைத்திறனுடைய மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல்தொழிநுட்பம் போன்ற பாடங்களில் அதிக அக்கறை எடுத்து தமது எதிர்கால உயர்கல்வி இலக்குகளாக கணிதத்துறை, விஞ்ஞானத்துறை, வணிகத்துறை ஆகிய துறைகளை தெரிவுசெய்து கற்பதன் மூலம் வரலாற்றுப்பாடம் கற்பதனைத்தவிர்த்துக் கொள்கின்றனர். மிகைத்திறன் குறைந்த மாணவர்களை பொறுத்தவரையில் வரலாற்றுப்பாடத்திலுள்ள கடின தன்மையினால் அதனை விருப்புடன் கற்பதற்கு முன்வருவதில்லை. இதனால் தமிழ்மொழி மூல மாணவர்களுள் சாதாரண திறமையுடைய குறிப்பிட்ட சதவீதமான மாணவர்கள் மாத்திரம் கலைத்துறையில் உயர்கல்வி கற்கும் நோக்குடன் வரலாற்றுப் பாடத்தினை ஆர்வத்துடன் கற்றுவரு

வதனை அண்மைக்கால புள்ளி விபரங் கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால் தமிழ் மாணவர்கள் சமயப் பாடத்தில் கூடுதலாக பெறுபேற்றை பெற்றுவருகின்றார்கள். அப்பாடத்தில் அவர்கள் தமிழ்ப்பெயர்கள் அதிகள வான நாயன்மார்கள், மன்னர்கள் வரலாற்றை கற்று அதில் சிறந்த பெறு பேற்றை பெற்று வருவது யாவரும் அறிந்த விடமாகும். அந்தவகையில் வரலாற்றுப்பாடத்திலும் கூடுதலான பெறுபேற்றைப் பெறுவது சிரமமாக உள்ளமைக்கு வரலாற்றுப்பாடத்தின் கடினமொழிப்பிரயோகம் தடையாக உள்ளமையே காரணமாகும். அதுதவிர தமிழ்மொழியிலான வரலாற்று நூல் களை எடுத்துக் கொள்வோமானால் அரச அங்கீகாரம் பெற்ற வரலாற்று நூல்கள் மிகவும் குறைவாகவே உள் ளது. இதனால் வரலாற்றுப் பாடத்தில் எழுகின்ற சந்தேகங்களை தீர்ப்பதற்கு போதிய நூல்கள், ஆதாரங்கள் தமிழ் மொழியில் இல்லை இதனால் மாணவர் களும் சரி ஆசிரியர்களும் சரி தங்கள் வரலாற்று ரீதியான அறிவுத் தேவை களை பூர்த்தி செய்வது கடினமாக உள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு தமிழ்மொழிசார்ந்த வரலாற்று வள வாளர்கள் முன்வந்து அரச அங்கீகாரம் பெற்ற வரலாற்று ரீதியான தமிழ்மொழி மூல நூல்களை வெளியிடுவது இப் பிரச்சினையை தீர்த்துக் கொள் வதற்கு ஏதுவாக அமையும்.

மாணவர்களின் அறியாமையை போக்குபவர் ஆசிரியர் என்றவகையில் இன்று தமிழ்மொழிமூலம் பாடசாலை களில் வரலாற்றுப் பாடத்தினை கற்பிக் கும் ஆசிரியர்கள் வரலாற்று கல்வி சார் உயர் அதிகாரிகள் இவ்வரலாற்றுப் பாடத்தில் போதிய அறிவுள்ளவர் களாக இல்லை என்று தான் கூற வேண் டும். இன்று பாடசாலைகளில் வரலாற் றுப்பாடம் கற்பிக்கும் 75 வீதத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலைத்துறை சார் பட்டதாரிகளாக உள்ள போதிலும் அவர்கள் க.பொ.த உயர்தரத்திலோ அல்லது பல்கலைக் கழகத்திலோ வர லாற்றுப் பாடத்தினை கற்காதவர் களாக காணப்படுகின்றனர். அவ்வாசிரி யர்களுக்கும் சரி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களும் சரி வரலாற் றுப்பாடத்தில் இலவச வரலாற்றுப் பாட நூலில் உள்ள விடயங்களைக் கற்று அறிவுடையவர்களாக உள்ள போது மாணவர்களை வரலாற்றுப் பாடத்தை ஆய்வுரீதியாக வழிப்படுத்த ஆசிரியர்களுக்கு போதிய பாட நிபுண த்துவம் இல்லை. ஆனால் மாணவர்கள் வரலாற்றுப்பாடத்தில் பூரணத்துவ மான ஒரு கற்கையினை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றன. இப்பிரச்சினைக்கு உடனடி த்தீர்வு காண்பது கடினமானதாகும். மாறாக எதிர்வரும் காலத்தில் க.பொ.த உயர் தரத்தில் வரலாற்றுப் பாடத்தைக் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை யை அதிகரிப்பதன் மூலமும் பூரண அறிவுடைய வரலாற்று ஆசிரிய வளத் தினை உருவாக்கி நீண்ட காலத்தில் இப்பிரச்சினைக்குத் தீர்வினைக் கண்டு கொள்ள முடியும்.

இது தவிர பாடசாலைகளில் வரலாற்றுப்பாடத்திற்கான பாட வேளை ஒதுக்கீடு சம்பந்தமாக சில சிக்கலான தன்மை காணப்படுகின்றது. வரலாற்றுப்பாடம் தரம் 10, தரம் 11,

மாணவர்களுக்கு கட்டாயபாடமாக 2007 ஆம்ஆண்டிலிருந்து அறிமுகப் படுத்தப்பட்டது. இந்நிலையில் ஏனைய கட்டாய பாடங்களான தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு கொடுக்கப்பட்ட பாட வேளை ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில் வரலாற்றுப்பாடத்துக்கு ஒதுக்கப்பட்ட பாடவேளை குறைவாகவே உள்ளது. ஏனைய கட்டாய பாடங்களுக்கு வாரா ந்தம் 5 பாடவேளைகள் வழங்கப்பட்ட போதிலும் இவ்வரலாற்றுப்பாடத் திற்கு 3 பாடவேளைகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே பரந்த விடயப்பரப்பினைக் கொண்ட வரலாற் றுப் பாடத்தினை குறித்த 3 பாடவேளை களில் புதிய முறையில் கற்றல் கற்பித்தல் மேற்கொள்வது கடின மானதாக காண ப்படுகின்றது. இதனை உரிய அதி காரிகள் கவனத்தில் கொண்டு பாட வேளையை அதிகரிப்பதன்மூலம் வர லாற்றுப்பாடத்தில் மாணவர்கள் கூடுத லாக தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற் கும் ஆய்வுரீதியான கற்றல் செயற்பாட் டினால் ஈடுபடுவதறகும் தமது அடைவு மட்டத்தை உயர்த்து வதற்கும் வழி சமைத்துக் கொள்ளலாம்.

வரலாற்றுப்பாட கலைத்திட்டத் தில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் வெளிவந்த வரலாற்று பாட இலவச நூல் பலவற்றில் முன்னுக்குப்பின் முரணான பல வரலாற்றுத்தகவல்கள் இருப்பது மாணவர்கள் வராலாற்றுப் பாடத்தினை கற்கின்றபோது பெரும் இடர்பாடுகளை ஏற்படுத்தி உள்ளது. உதாரணமாக கந்தளாய்க் குளத்தைக் கட்டிய மன்னன் குளக்கோட்டன் என்று ஆரம்ப காலத்தில் தமிழ்ப்பாட நூல்களில் குறிப்பிடப்பட்டு வெளி யிடப்பட்டது. ஆனால் அண்மைக்கால நூல்களில் கந்தளாய்க் குளத்தைக் கட்டிய மன்னன்இரண்டாம் அக்க போதி என்று குறிப்பிடப்பட்டிருப்பது மாணவர்கள் ஆசிரியர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. அத்துடன் 2010 ஆம் ஆண்டு கா.பொ.த சாதாரண வினாத்தாள்களில் கி.பி 1505 போர்த்துக்கீசர் இலங்கைக்கு வரும்போது கோட்டையைஆண்ட மன்னன் யார் என்ற வினா தொகுக்கப் பட்டபோது அதற்கு புள்ளியிடலில் தர்மபராக்கிரமபாகு என்று விடை யளிக்கப் பட்டது. ஆனால் 2011 ஆம் ஆண்டு அச்சிட்ட இலவச நூலில் எட்டாம் வீரபராக்கிரமபாகு என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் மாணவர் களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத் தியது.

அது மட்டுமல்லாமல் 2013 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்யையில் பண்டுவாசுதேவன் உட்பட குழுவினர் வந்திறங்கிய இடம் எது வென வினாவப்பட்டது அதற்கு நீண்ட காலமாக தமிழ்மொழி ஆசிரியர்கள் மகாதீர்தம்/ மாந்தை என விடை அளித் தது அவதானிக்கக்கூடியதாக இருந்த போதிலும் உண்மையில் கம்மல் தொட்ட என்று புள்ளியிடல் திட்டத் தில் தீர்மானிக்கப்பட்டு புள்ளியிடப் பட்டது. இது தமிழ் மொழிமூலம் உள்ள மாணவரை பாதித் திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வாறான பல விடயங்கள் காணப் படுவதால் தமிழ் மாணவர்கள் மத்தியில் வரலாற்றுப் பாடத்தை கற்பதில் உள்ள ஆர்வம் குறைவடைந்து செல்வதனை

அவதானிக்க முடிகின்றது. எனவே கலைத்திட்டம் தயாரிக்கும் பொழுது ஒரு தொடர்ச்சியான தகவல்களை தரம் 6 தொடக்கம் 13 வரை ஒரே மாதியான விடயங்களை கொண்ட தமிழ்மொழி மூல வரலாற்று பாடநூல்களை தயாரித்து வெளியிடுவதன் மூலம் இதனை சீர்செய்து கொள்ளலாம்.

எனவே தமிழ்மொழி மூலமானவர்கள் வரலாற்றுப்பாடத்தில் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர். எதிர்வரும் காலத்தில் தமிழ்த் துறை சார்ந்த வரலாற்றில் வளவாளர்கள் இம் மாணவர்களின் வரலாற்று ரீதியான தூண்டலுக்கு நல்லவிருந்தினை வழங்குவதன் மூலம் இவர்களுடைய பசியை போக்கி கொள்ள முடியும்.

# மனிதவளத் திட்டமிடல்
# Human Resource Planning

Mr.K.Mahinthan B.A (Hons) Eco.spe
Pgde, Med (hons),Teacher.

## அறிமுகம்

மனிதவள முகாமைத்துவ அணுகுமுறையில் மிக முக்கிய எண்ணக் கருவாக மனிதவளத்திட்டமிடல் காணப்படுகின்றது. நிறுவனம் ஒன்று தனது இலக்குகளையும் நோக்கங்களையும் அடையும் வகையில் பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்தி எதிர்கால மனிதவளத் தேவையை தீர்மானிக்கும் செயன்முறை மனிதவளத் திட்டமிடலாகும்.

நிறுவனமொன்றில் பெரும்பாலான செலவுகளையும், பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதில் மனிதவளம் பிரதான இடத்தை வகிக்கின்றது. எனவே நிறுவனத்தின் மனித வளமானது சரியானமுறையில் திட்டமிடப்பட வேண்டும்.

நிறுவனத்துக்குத் தேவையான மனித வளத்தை எதிர்வு கூறுவதென்பது மிகவும் கடினமான விடயமாகும். மனிதவள எதிர்வு கூறலில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

1) நிறுவனத்தின் மூலதன அமைப்பு
2) தொழில் நுட்ப மாற்றங்கள்
3) தொழில் நுட்ப வளர்ச்சி நிலைமை
4) நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள்
5) நாட்டின் குடிவரவு, குடியகல்வு நிலைமை
6) அரசியல் நிலைமை
7) ஊழியர்கள் தொடர்பான சட்ட திட்டங்கள்
8) சமுதாய நடவடிக்கைகள்
9) கல்வி வளர்ச்சி
10) கலாசார, விழுமிய வளர்ச்சி

போன்ற பல்வேறு காரணிகளைக் குறிப்பிடலாம்.

### மனித வளத்திட்டமிடலுக்கான முன் நிபந்தனைகள்

மனித வளம் என்பது பெறுமதி மிக்கதொரு உயிருள்ள வளமாகும். மனித வளத்திட்டமிடலானது தொடர்ந்து செல்லும் செயற்திறனுக்குரிய படிமுறையாகும். எனவே ஒரு நாட்டின் வெற்றிகரமான மனிதவளத் திட்டமிடல் ஒன்றை மேற்கொள்ளப்படும் போது பின்வரும் நிபந்தனைப்பாடுகளை நோக்கவேண்டும்.

1) நிறுவனத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்தின் ஒத்துழைப்புதொடர்ந்து இருத்தல் வேண்டும்.
2) நிறுவனத்தின் ஆளணிப் பதிவேடுகள் பூரணப்படுத்தப்பட்டதகவும், கால மாற்றத்திற்கேற்ப, புதுப்பிக்கப்பட்ட வகையில் காணப்படல் வேண்டும்.
3) மனிதவளத்திட்டமிடலானது மனித வளத்தின் மொத்த அளவைக் கருதுவதைக்காட்டிலும் அதன் வினைத்திறன் மட்டத்தை கருதியதாக காணப்படல் வேண்டும்.

4) மனிதவளத்திட்டமிடல் சார்பான தரவுசேகரிப்பு, பகுப்பாய்வு முடிவுகளைப் பெறுதல் போன்றன அனுபவ வாயிலாக மீளாய்வு செய்தல் வேண்டும்.
5) நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கு ஒவ்வொரு ஊழியரும் செயற்திறனுடன் பங்களிப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட முன் நிபந்தனைப்பாடுகளை மனிதவளத்திட்டமிடலில் கையாளப்படவேண்டும். மேலும் உலகளாவிய பார்வையில் மனிதவளத்திட்டமிடலை வினைத்திறன், விளைதிறன் மிக்கதாக மாற்றியமைத்த நாடுகள் வரிசையில் ஜப்பான் (Japan) மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

ஜப்பானியர்களின் மனிவளத்திட்டமிடலானது பின்வரும் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

1) குறித்த தொழிலின் உறுதித்தன்மை
2) தொழிலாளர்கள் பங்கு கொள்ளல்
3) தரத்தில் கூடிய கவனம்செலுத்துதல்
4) தொழிலாளர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவமளித்தல்
5) தூய்மையான தொழிற்சூழலை வற்புறுத்தல்

போன்ற காரணங்களினால் ஜப்பானியர்களின் மனிதவளத்திட்டமிடல் முன்னேற்றகரமானதாக காணப்படுகின்றது.

**மனிதவளத் திட்டமிடலின் முக்கியத்துவம்**

மனிதவளங்களின் மீது நிறுவனங்கள் பெருமளவு முதலீடுகளை மேற்கொள்கின்றன. எனவே நிறுவனங்கள் அம்முதலீடுகள் மீதான உச்ச நன்மையை பெற்றுக்கொள்ள மனிதவளத் திட்டமிடல் உதவுவதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

**மனிதவளத் திட்டமிடலின் நோக்கங்களாக**

1) மனித வளத்தை மிகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பயன்படுத்தல்.
2) தேவையான எண்ணிக்கையில் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்தல்.
3) மனிதவளத்தின் எதிர்காலத் தேவையை மதிப்பீடு செய்தல்.
4) நிறுவன உபாயத்திட்டங்களை ஒழுங்குபடுத்தி அமுல்ப்படுத்தல்.
5) ஊழியர்களின் மிகைநிலை அல்லது பற்றாக்குறையை மதிப்பிட்டு ஊழியர்களை உத்தமமாக பயன்படு த் த உதவுதல்.
6) மனிதவள விருத்திக்கு உதவுவதோடு மாற்றங்களுக்கும் வழி சமைக்கின்றது.
7) ஊழியக்கிரயத்தை திட்டமிட உதவுகின்றது.

ஒரு நிறுவனம் மனித வளத்தின் மீது பல்வேறு கிரயங்களை மேற் கொள்கின்றது. அந்தவகையில்

1) ஆட்சேர்ப்பின் போதானசெலவுகள்
2) பயிற்சியளித்தல் செலவுகள்
3) ஊதியம் மீதான செலவுகள்
4) நலன்கள் மீதான செலவுகள்
5) கொடுப்பனவுகளுடன் கூடிய விடுமுறை தொடர்பான செலவுகள்
6) இடைவிலகிச் செல்வதனால் ஏற்படும் செலவுகள்
7) இளைப்பாறிச் செல்லும்போது கொடுக்கப்படும் நிதி மற்றும் நலன் சார் செலவுகள்

மேற்கூறப்பட்ட செலவு விபரங்களை மனிதவளத் திட்டமிடலின் போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மனிதவளத் திட்டமிடல் செய்முறை**

மனிதவளத் திட்டமிடல் செய்முறையானது பல்வேறு படிமுறைச் செயற்பாடுகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டதாக காணப்படுகின்றது. மனிதவளத் திட்டமிடல் செய்முறை பின்வருமாறு காணப்படும்.

1) மனிதவளத் திட்டமிடல் தொடர்பான தகவல்களை சேகரித்தல்.
2) மனிதவளத்திற்கான கேள்வியை எதிர்வு கூறல்.
3) மனிதவளத்திற்கான நிரம்பலை மதிப்பிடல்.
4) தேவைப்பட்ட மனிதவளத்தைத் திட்டமிடல்.
5) மனிதவளம் மீதான மீளூட்டலும் அமுல்படுத்தலும்.

மேற்கூறப்பட்ட மனிதவளத் திட்டமிடல் செய்முறை ஒழுங்காக மேற்கொள்ளப்படும் இடத்து குறித்த நிறுவனம் தனது இலக்கினை இலகுவாக அடைந்து கொள்ளலாம்.

பொதுவாக நிறுவனம் ஒன்றில் காணப்படும் மனிதவளமிகைநிலை, மனிதவள பற்றாக்குறை என்பன நிறுவனத்திற்குரிய பாரிய பிரச்சினையாக அமைந்துவிடும்.

மனித வள மிகைநிலை காணப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனம் பின் வரும் உபாயங்களைக் கையாளலாம்.

1) ஊழியரின் சேவை நேரத்தைக் குறைத்தல்
2) ஊழியர்களை தற்காலிகமாகசேவையிலிருந்து நீக்குதல்.
3) இளைப்பாறுதலை தூண்டுதல்.
4) நட்டஈடு வழங்கப்படும் என உறுதியளித்து தொழிலில் இருந்து நீக்குதல்.
5) புதிய வேலைக்கான மீள் பயிற்சிகளை வழங்குதல்.
6) கொடுப்பனவுகளற்ற விடுமுறைகளை ஊக்கப்படுத்தல்.
7) வெகுமதிக்கான கிரயங்களைக் குறைத்தல்.

என பல்வேறு உபாயங்களைக் கையாண்டு மனிதவள மிகைநிலையைக் கட்டுப்படுத்தலாம்.

மனிதவளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பின்வரும் முறைகளைக் கையாளலாம்.

1) நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்.
2) தற்காலிகமாக ஊழியர்களை வேலைக்கு இணைத்தல்.
3) பகுதிநேர அடிப்படையில் ஊழியர்களை இணைத்தல்.
4) ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை இணைத்தல்.
5) உள்ளக மட்ட பதவி உயர்வுகளைச் செய்தல்.
6) ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல்.
7) மேலதிகநேர வேலைவாய்பை வழங்குதல்.

என பல்வேறு உபாயங்களைக் கையாண்டு மனிதவள பற்றாக்குறையை நீக்கலாம்.

மேலும் மனிதவளக் கேள்வியும் மனிதவள நிரம்பலும் சமமாக காணப்படும் நிறுவனங்கள் உள்ளக இடமாற்றங்களை செய்வதன் மூலம் மனித வளத் திட்டமிடலை வெற்றிகரமானதாக மாற்றலாம்.

## இலங்கையும் மனிதவளத் திட்டமிடலும்

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு ஆட்சியாளரும் காலத்திற்குச் காலம் பல்வேறு அரசியல், பொருளாதாரக் கல்விக் கொள்கைகளை முன்வைத்து வந்துள்ளனர். இக் கொள்கை மாற்றங்கள் இலங்கை மனிதவளத் திட்டமிடலில் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. அந்தவகையில்

இலங்கையில் வழங்கப்படும் இலவசக் கல்வியானது நாட்டின் பொருளாதார உற்பத்தி மூலங்களைப் பெருக்கக் கூடிய தன்மை குறைவாகவே அமைந்துள்ளது. கல்விக்கான செலவு புதிய மூலதனங்களை பெருக்காது அரசின் நுகர்வுச் செலவை அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. அரசு இலவசக்கல்வியை வழங்கியதற்காக அரச வேசைவாய்ப்பை வழங்க வேண்டும் என்ற மனநிலை கல்வியைப் பெற்றவர்களிடையே காணப்படுவதால் அவர்கள் புதிய தொழில்முயற்சிகளை உருவாக்கவோ அல்லது தனியார் நிறுவனங்களில் கடமையாற்றவோ தயக்கம் காட்டி வருகின்றனர். இந்நிலை மனிதவளத்திட்டமிடலில் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

இலங்கை அரசின் நிதி உதவியில் இலவசக்கல்வியையும், புலமைப் பரிசில்களையும் பெற்று உருவாக்கப்பட்ட மூளைசாலிகள் வேறுநாடுகளுக்குச் சென்று பணியாற்றுகின்ற தன்மை இங்கு காணப்படுகின்றது. இத்தகைய மனித மூலதன வெளியேற்றமானது இலங்கையின் மனித வளத் திட்டமிடலில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இலங்கையில் கடந்த 03 தசாப்த காலம் நிலவிய யுத்தம் இலங்கையின் மனிதவளத்தின் உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கையை ஐந்து பிரதான மத்திய நிலையங்களாக (5Hub Tourism) மாற்றுதல் என்ற எண்ணக்கருவானது இலங்கையின் பொருளாதாரத்தினையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தவென உருவாக்கப்பட்டது. இது இலங்கையின் மனிதவள மேம்பாட்டுக்கான ஓர் உந்து சக்தியாக அமைந்துள்ளது. இவ் ஐந்து உபாயங்களும் பின்வருமாறு

1) கடல்சார் மத்திய நிலையம் (Maritime hub)
2) விமானம் சார் மத்திய நிலையம் (Aviation hub)
3) வர்த்தகம் சார் மத்திய நிலையம் (Commercial hub)
4) சக்தி சார் மத்திய நிலையம் (Energy hub)
5) அறிவு சார் மத்திய நிலையம் (Knowledge hub)

இவ் ஐந்து உபாயங்களைக் கொண்டு இலங்கையை ஒரு பொருளாதார மத்திய நிலையமாக (Global Economics center) மாற்றுவதை நோக்காக கொண்டது. இதன் மூலம் இலங்கையின் சமூக பொருளாதார மேம்பாடு ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

மனிதவள மேம்பாட்டுக்கு தொழில்நுட்பம், புத்தாக்கம் என்பன அவசியமானதாகும். நாட்டின் உற்பத்தித்திறன் இதன் மூலம் மேம்பாடடையும். தற்போது தொழிநுட்ப முன்னேற்றம், புத்தாக்க செயன்முறை என்பன

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற தை நோக்கலாம்.

இலங்கை புதிய கைத்தொழில் மயமாகிய நாடுகள் (Nic) பின்பற்றிய அணுகுமுறை மூலம் மனிதவளத் திட்டமிடலை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைக்கலாம்.

## முடிவுரை

மனிதவளத்திட்டமிடலை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் "மனித வளத்திட்டமிடல் இருமுனையுள்ள ஒரு ஆயுதம்" என்ற கருத்துக்கு அமைய சிறந்த மனிதவளத்திட்டமிடலானது மனித வளங்களின் அதிகபட்ச பயன்பாட்டுக்கு வழிவகுக்கும். தவறான மனிதவளத்திட்டமிடலானது குறைந்த உற்பத்தித்திறன், வேலைத் திருப்தியின்மை, குறைவான ஊழிய அர்ப்பணிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும்.

எனவேமனித வளத்திட்ட மிடலின் போது பின்வரும் உபாயங்களை கையாள்வதன் ஊடாக அதனை வினைத்திறன் மிக்கதாக மாற்றி அமைக்கமுடியும்.

மனித வளத்திட்டமிடலினை மேற்கொள்வதற்கு போதியளவு தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளல். உ-ம் : தொழிநுட்ப மாற்றங்கள்

மேல்மட்ட முகாமையாளரின் பூரண ஒத்துழைப்பைப் பெறல்.

ஊழியர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றல்

மனிதவளத்திட்டமிடலின் போதான கிரயங்களை இழிவாக்குவதன் ஊடாக ஒரு நிறுவனம் தனது மனித வளத்திட்டமிடலை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

## உசாத்துணைகள


1) ஜெயராமன். தே. (2012) முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2) கெங்காதரன்.ந. (2012) மனிதவள முகாமைத்துவம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

3) தர்மதாசன்.வ. (2009) மனிதவள முகாமைத்துவம் முகாமைத்துவகற்கைகள் துறை பேராதனைப் பல்கலைக்கழகம்.

4) சந்திரசேகரம். செ. (2013) பொரளாதார அபிவிருத்தி சிங்கப்பூரும் இலங்கையும் அரசியல் பொருளாதார ஒப்பியல் நோக்கு- பொருளியல்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

5) வசந்தகுமார்.எஸ்.(2014) இலங்கை ஐந்து பிரதான மத்திய நிலையங்களாக

# Give hands to protect our younger generation

**Miss. Yasothei Nadarajesunderam**
**Teacher,J/Navatkuli M.V**

## Introduction

"Today's children are leaders of tomorrow". The future, whether it is that of their own, their family, the community or the nation is in their hands of the children. The world of theirs is small innocent and free from all the vices of the adult world. It is often the irresponsible parents, bad company, poverty, broken families, drinking habits and the resultant child cruelties that make the world hell for them. The present day society is ridden with crime and violence of various natures. Who commits these crimes? Why do they indulge in such activities? These are the questions arise in mind of the experts who deals with crime prevention. At family level when parents cannot provide their children with their basic needs like food, clothing and shelter, frustration results and the children end up on the street begging or become victims of child abuse in the hands unscrupulous individuals or commits suicide. Girls are often the most affected in these circumstances.

In today's modern society addiction of alcohol and drugs has become one of the most complex life threatening issues. Alcoholism and drugs are the major cause of all sorts of violence in the society. Everyone now in our society concerned about drug and alcohol abuse. It is especially acute among young people and this fact horrifies most of all. Investigations and researches done in these cases have indicated alcoholism and drug menace are the cause of all sorts of violence in the society .Murder, theft, alcohol, lust and gambling are said to be the worst of the sins which destroy the society.

## Addiction of alcohols

The first harmful menace in our society is alcoholism. What are the reasons of such wide spread alcohol dependence? According to studies the major reason for this abuse is the psychological instability of teenagers. Young people begin to drink at an early age when their psychology is unstable and their main aim is to assert themselves.

Alcohol abuse is itself very harmful for a human organism, especially for a young one as it destroys brain cells and other organs and blunts the thinking power of individuals. Alcohol impairs behaviour, judgment, memory, concentration and coordination as well as inducing extreme mood swings and emotional outbursts. Some teens feel it takes their minds off of stressful issues and helps them to escape their agonies or worries, poverty, frustration and parental neglect. Alcohol helps them to feel free and independent and to do the things that are forbidden for them. Usually being controlled by their parents, they long to break at the rules and bans. It gives the possibility to feel independent. Therefore the youth does not realize the harm caused by the abuse.

## The drug menace

The other reason for the anti social behavior of children is addiction of drugs. Drug abuse and addiction have become one of the major social menaces that have drawn the attention of everyone. The illegal drug has been identified the reason for most of the crimes and the alarming rate of violence in all parts of our country. They are related to crime in multiple ways.

Drug abuse may be defined as "the excessive, maladaptive, or addictive use of drugs for non medicinal purposes". The drug abusers experience a state of emotional and sometimes physical effects characterized by a compulsion to take drugs on a constant basis in order to experience the same mental effects. This habit grows aggressively and roots down to a point. Such an instance where the individual finds it difficult to live without taking the next dosage of the drug is termed as drug addiction. This habit will lead to both physical and psychological dependence on drugs. The effects of drug abuse on an individual are basic for many social problems.

One of the main causes of drug abuse is the problem in dealing with reality. People try to escape from reality. They lack the courage to face the challenges in life or simply they don't have the means to face it. Sometimes they do not want to deal with their current situation, emotions or circumstances due to a series of past bad experiences in their lives that finally caught up with them. As everyone knows depression result before addiction people want to escape their feelings leading to depression.

These days so many teenagers even school students get caught up in drug addiction due to peer pressure and negative peer relations , weak parental control, emotional stress, frustration, availability of drugs and infectiveness of the Lawson

drugs. These teenagers give up their moral values, principles, common sense, and beliefs behind and focus on being popular and fitting in. After using drugs our youths get rid the humane tendencies like sympathy, pity or mercy which might stand in their way to prevent them from committing crimes.

## Important persons in Child Protection

All those who are responsible for these situations? The problem is really one of coordinating various sources of instruction. This is a broad task that takes time and involves many parties.

## Parents

The family has the highest degree of influence on protecting the children from alcohol and drug abuse. Discipline, good habits and conduct are easier caught than taught. Things taught at home are usually better because they are directly related to real experiences in life. Parents should take an active part in their children's life and having noticed any signs of the abuse. The child from a happy family will learn tolerance, endurance, patience, the ability to take good judgment and conduct from his or her own family. They will share their emotions, ideas, thoughts, pains, experiences and needs with their parents and family members. When the children feel they are in a safe environment the possibility of drug use declines.

## Some suggestions for the parents to save their children

- Parent child relationship should be cordial and healthy
- Provide guidance and clear rules about not using drugs.
- Spend time with your children.
- Do not use tobacco or other drugs yourself. Children notice how parents use alcohol, tobacco, and drugs at home, in their social life, and in other relationships.
- Talk honestly with your child about healthy choices and risky behaviours.
  Listen to what your child is saying. Make talking and listening as a habit.
- Talk with your child about the negative effects of alcohol and drugs would have on their brains and bodies and their ability to learn or play sports. Ask your pediatrician about the other dangers of drug use
- Correct any wrong beliefs your child may have.
  "Everybody drinks."
  "Marijuana won't hurt you."

- Avoid TV programmes, movies, and video games that glamorize tobacco, alcohol, and drugs.
- Find time to do things together.
- Eating together as a family is a good time to talk and learn about what's going on.
- It's a parent's job to use love and experience to correct mistakes and poor choices.
- By using a mix of praise and criticism, you can correct your child's behavior without saying your child is bad. This helps children build self-confidence and learn how to make healthy and safe choices. In time, making smart choices on their own self will become easier.
- Encourage positive friendships and interests.

1. Check to see that the friends and neighbors your child spends time with are safe and have values similar to yours.
2. Find ways to get your child involved in sports, hobbies, school clubs, and other activities. These usually are positive interactions that help develop character and lead to good peer relationships.
3. Look for activities that you and your child or the entire family can do together.

    - Teach your child how to respond to someone offering drugs. It is much easier to say "No!"

    1. Firmly say, "No!"
    2. Give a reason "No thanks, I'm not into that." or "No, my parents would get really mad at me."
    3. Suggest something else to do, like watch a movie or play a game.
    4. Leavego home, go to class, go join other friends.

## Peer groups or friends

The other factor influence in a child's life is peer groups or children of same age. They are an important source of stimulation for children and adolescents. Although their capacity of encourage pro social behaviour is great. They seek thrills, have adventures and become excited by challenging authority. These days so many teenagers even students get caught up in drug addiction due to peer pressure from the society. These children give up their moral values, principles, common sense and beliefs behind and focus on being popular and fitting in. A solution to peer pressure is to realize it is not worth doing what you think others will see. Parents should seriously think through their actions towards their children and be sensitive to their children's needs and join hands with the authorities in getting rid of this drug menace.

## School community

School and teachers have great responsibilities in preventing the students from drug abuse and alcoholism. Youth who do not receive support, love and acceptance from their family, friends and society sometimes go to great lengths to cope with their pain. All youth deserve to be given support, acceptance and effective drug use prevention education. After a child comes to school he has to learn a lot of things from outside world. In schools students develop their concepts, attitudes, skills and values other than house. Teachers should realize the physical and mental disabilities of the pupils.

- Effective approaches to school-based drug and alcohol prevention include teaching students how to resist peer influences, improving generic life skills, involving families, and providing opportunities to become involved in positive experiences with others in the school and community.
- Effective programs for elementary school students are self-control, emotional awareness, communication skills, and social problem-solving skills.
- Effective programs for older students seek to build communication skills and drug resistance skills.
- School-based drug prevention programs can be implemented in conjunction with community-based strategies that reduce risk factors such as the availability of drugs and alcohol and promote norms that discourage underage drinking and drug use.

## Conclusion

All children deserve the chance to grow and prosper. Many of the programmes and services that were once appropriate to children's problems are insufficient in the face of today's changed circumstances. Nowadays we need new perspectives on social welfare programmes to the needs of the children. In which parents, school community, society where the child live, religious organizations and governmental organizations have to work together. It is the duty of all responsible citizens of the country to engage seriously in the uphill task of rescuing the drug addicted population from the menace.

## Bibliography

Botvin, G. J., & Griffin, K. W. (2003).
Drug abuse prevention curricula in schools. New York:
Kluwer Academic/Plenum Publishers.

Dishion, T. J. and D. A. Andrews (1995).
Preventing escalation in problem behaviors with high-risk young adolescents.
Journal of Consulting and Clinical Psychology.

National Institute on Drug Abuse. (2003).
Preventing drug use among children and adolescents: A research-based guide
for parents, educators, and community leaders.
Tobler, N. S., Roona, M. R., Ochshorn, P., Marshall, D. G., Streke, A. V., &
Stackpole, K. M. (2000).
School-based adolescent drug prevention programs: 1998 meta-analysis.
The Journal of Primary Prevention.

# யா/ நாவற்குழி மகா வித்தியாலயமும் கற்றல் கற்பித்தல் சவால்களும்

திரு. நா. கேதீஸ்வரன்
ஆசிரியர்,யா/நாவற்குழி ம.வி

பெரும்பாலன வகுப்பறைப் பிரச்சினைகள் குறுகியகாலத்துக் குரியவை. ஆயினும் சில மாணவர்கள் வகுப்பறையில் நீண்டகால பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களாக இருப்பார்கள். நாவற்குழி மகாவித்தியாலய வரலாற்றை எடுத்துக்கொண்டால் நீண்டகாலமாக சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி வந்த பெருமைமிக்க பாடசாலையாகும். எனினும் கடந்த இருபது வருட காலமாக பல சாதனைகளை தன்னகத்தே வைத்த பெருமை உண்டு. எனினும் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. ஏனெனில் நாவற்குழி கரையோரப்பிரதேசத்தில் பெருந்தொகையான குடியேற்றங்கள் ' குடியமர்த்தப்பட்டதன் மூலம் பல்வேறு புறச்சூழலில் உள்ள பெருந்தொகையான மாணவர்களை நாவற்குழி மகாவித்தியாலயம் உள்வாங்கியுள்ளது. இப்பிரதேசத்தில் உள்ள ஒரேயொரு 1C பாடசாலையாகும்.

கற்பித்தலும், வகுப்பறை முகாமைத்துவமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த இரண்டு அம்சங்காளகும். ஆசிரியர் தமது கற்பித்தலுக்கான நோக்கங்களைத் திட்டமிடும்போது சிறந்த முறையில் அமையும் என்பதில் சந்தேகமில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளான இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் கல்விமுறையை எடுத்துக்கொண்டால் அங்குள்ள மாணவர்களுக்கு புறச்சூழல் எனும்போது பௌதீகவளம் முக்கியமான ஒன்றாகும். மேற்குறிப்பிட்ட நாடுகளில் மாணவர்கள் விருப்புடன் கற்பதற்கான காரணம் பௌதீக வளத்திட்டமிடலுடன் அந்நாட்டு அரசே சிறந்த பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுத்து அதில் மாணவர்களை ஈடுபட வைத்து அதன் மூலம் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக சிங்கப்பூர் நாட்டை எடுத்துக் கொண்டால் Science Center,Science world போன்ற ஆய்வு கூடங்கள் மிக நல்ல முறையியல் அமைக்கப்பட்டுள்ளன. மாதந்தோறும் இருநாட்களில் மாணவர்கள் சுழற்சிமுறையில் இங்கு வருகை தந்து தாமாகவே பாடவிடயங்களை விளங்கி குறிப்பெடுத்து ஒப்படை மூலமாகவோ வாய்மொழி மூலமாகவோ விடையளிக்கவேண்டும். எனவே இவ்வாறான உயர்ந்த இடங்களில் மிகச் சிறப்பான முறையில் விருப்புடன் பாடங்களைக் கற்கின்றார்கள். எனவே சிறந்த கற்றலுக்கு புறச்சூழல் மிக அவசியமாகும்.

நாவற்குழி மகா வித்தியாலத்தில் அண்மைக்காலமாக பாடசாலை அதிபரது முகாமைத்துவத்தில் பாடசாலைச் சமூகம் பௌதீக வளங்கள் அதிகரிப்பதில் கூடிய கவனம் செலுத்திக் கொண்டிருப்பதை காணமுடிகிறது.

உதாரணமாக வரலாற்று ஆசிரியர் "குளமும் அதன் பகுதிகளும்" என்ற அமைப்பை மிகப் பிரமாண்டமாக பாடசாலை அதிபரின் வழிகாட்டலில் அமைத்திருக்கிறார்கள். இதன் மூலம் மாணவர்கள் விருப்புடன் விளங்கிக் கொள்ளத்தக்கதாக அமைகிறது. வெற்றிகரமான கற்றலுக்கு களம் அமைக்கப் பட்டிருக்கிறது.

வடமாகாணத்திலேயே முதலாவதாக தெரிவுசெய்யப்பட்ட விஞ்ஞான கூடம் எமது பாடசாலையில் அமைந்துள்ளது ஆசிரியர்களும் ஆய்வுகூட உதவியாளரும் சிறந்தமுறையில் பேணி வருகின்றனர்.

1C தர பாடசாலைகளில் மிகச் சிறந்த நூலகமாக எமது பாடசாலை நூலகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இவ் வெற்றிக்கு பொறுப்பான ஆசிரியரும், நூலக ஆசிரியரும் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். இது "கற்றல்வள நிலையம்" என அழைக்கப்படுகிறது. இதுவே பாடசாலையின் இதயப்பகுதி யாகும். இச்சிறப்பான செயற்பாட்டின் மூலம் பாடசாலை உயிரோட்டமுள்ளதாக காணப்படுகிறது. இதன் செயற்பாடுகள் பற்றி ஆராய்வோம்.

அங்கு இலங்கையின் பழைய நாணயங்கள், சேகரிக்கப்பட்டு இரு பக்கமும் பார்வையிடக்கூடியதாக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொல் பொருள் நாணயங்களும் சேகரிக்கப் பட்டுள்ளன. இங்கு முக்கிய அம்சம் என்னவெனில் ஒவ்வொரு நாணயமும் இதன் வெளியீடும் இரகசியத்தன்மையும் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளது. கலைப்பாரம்பரியம் சார்ந்த பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

யோகர்சுவாமியின் பாவனைப் பொருட்களும் சேகரிப்பட்டு பேணப் பட்டு வருகின்றது.

எழுத்துருக்களின் பரிணாம வளர்ச்சி, முத்திரைகள், பிரதேச இலக்கிய ஆக்கங்கள் தற்போது உலக நாடுகளில் Token மூலம் உள் நுழையும் முறைகழிவுப் பொருள் ஆக்கம் போன்ற பல செயற்பாடுகள் சிறப்பாக மேற் கொள்ளப்படுகின்றது. அத்துடன் கற்றல் மாதிரிகளும் முக்கிய அம்சமாகத் திகழ்கிறது. ஒவ்வொரு பாடத்துக்கான கற்றல் மாதிரி உருக்கள், கற்றல் வளநிலையத்தின் முக்கிய கோட்பாடாக அமைகிறது. அதன் பகுதியாகவே மேற் கொள்ளப்பட்ட வரலாற்றுப் பாடத்தில் குளமும் அதன்பகுதிகளும் என்ற அமைப்பு, கணித பாடத்தில் முப்பரிமான தோற்றங்களும் பலவகையான காட்சிப்பொருட்களும் அதேபோல் சங்கீதம், நடனம், சிங்களம், விஞ் ஞானம், ஆங்கிலம், தமிழ் போன்ற எல்லாவற்றுக்கும் அத்துறைசார்ந்த மாதிரி உருக்களும் ஆக்கப்பட்டுள்ளன.

செல்வி சோபனா ஜெயச்சந்திரனின் சிறுகதை ஆக்கமானது தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமைக்கு கற்றல் வளநிலையம் மிகக் பாத்திரமமான பங்களிப்பை வழங்கியுள்ளது என்றால் மிகையாகாது. அத்துடன் வரலாறு, சிங்களம், விஞ்ஞானம், நாடகம் போன்ற துறைகளில் வலய, மாவட்ட, மாகாணத்தில் சிறப்பான இடங்கள் கிடைத்தமை சிறப்பம்சமாகும். மேலும் இங்கு நீண்டகாலம் கற்பித்த கணித ஆசிரியர் அதிபரின் வழிகாட்டலுடன் தொடர்ச்சியாக வலய, மாவட்ட, மாகாண, தேசிய சாதனைகளை ஏனைய

கணித ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் கணித ஒலிம்பியாட் பரீட்சையில் ஏனைய பெரிய பாடசாலைகளைவிட இப்பாடசாலையில் தேசிய ரீதியதில் பெருமை சேர்த்த செல்வன் சு. சுபாசனை இனங்காட்டியுள்ளார்.

செல்வி சோபனா ஜெயச்சந்திரனின் சிறுகதை ஆக்கம் தேசிய மட்டதில் முதலிடம் பெற்றமைக்கு கற்றல் வள நிலையம் மிகக் காத்திரமான பங்களிப்பை வழங்கியள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ளவற்றுக்கும் வலயக்கல்விப்பணிப்பாளர் அவரோடு இணைந்த உத்தியோகத்தர்களும் சிறந்த பங்களிப்பை இப்பாடசாலை அதிபருக்கு வழங்கியிருக்கிறார்கள். மேலும் பௌதீக வழங்களை அயல் சமூகத்தவர்களின் உதவியினாலும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இவை கற்றலை மேம்பாடடையச் செய்வதற்கு பேருதவியாகவுள்ளது.

பாடசாலை மாணவர்களின் உண்மையான பிரச்சினைகளை அறிந்து பாடசாலைச்சமூகம் சிறப்பான பங்களிப்பை ஆற்றி வருகிறது. அதன் ஒரு பகுதியாக சிறந்த மாணவர்கள் தெரிவு செய்யும் போது கல்விசாரா ஊழியர்களின் சிபார்சும் தேவைப்படுகிறது. இவ்வாறு சிறந்த மாணவர்களை தெரிவு செய்வதோடு சிறப்புற வழிகாட்டப்படுகிறார்கள். அதன் வெளிப் பாடாக மாணவ சிரேஸ்ட தலைவர் 2014 க.பொ.த (சா/த) பரீட்சையில் வர்த்தகப் பிரிவரில் 3A பெற்றதை ஞாபகப் படுத்தலாம்.

மேலும் இங்கு நடைபெறும் விழாக்களில், மாணவர்களின் செயற்பாடுகள், மாணவ தலைவர்களின் பொறுப்புக்கள் ஏனைய பாடசாலைகளை விடச் சிறந்த முறையில் செயற்படுவதை காண முடிகிறது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சயில் சென்ற ஆண்டு 4 மாணவர்கள் சித்தியடைந்தமை ஆரம்பக்கல்வி பிரிவின் சிறப்பான செயற்பாட்டை காண முடிகிறது.

இவ்வாறு பல சிறப்பான அம்சங்களை கொண்டுவிளங்கும் யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் எமது பிரதேசத்தில் முன்மாதிரியான பாடசாலையாக திகழும் என்பதில் ஐயமில்லை.

# "எது தொல்லை?

வெ. ஸ்ரீகந்தநேசன் (புயல்)
ஆசிரியர்,யா/நாவற்குழி ம.வி

இது மிஹின் யுகம். புதுமையைக் கண்டு மயங்கி வாழ்க்கையை வீணடிக்கும் நவீன யுகம். அவள் அன்று ஒரு முழுநீள பெயர்கொண்ட - சினிமாக் காரர்களுக்கும் நாடககாரர்களுக்கும் தான் வாயில் நுழையாத பெயர் வைக்க நன்றாகத் தெரியுமே- சினிமான படங்களுடன் பொழுதை கழித்திருக்க வேண்டும் போல ஏனெனில் அதன் மாற்று வடிவமே இன்றைய தொலைக் காட்சி நாடகங்கள்.

எப்போதும் அவன் பாடசாலையில் இருந்து மதியம் **2.30** மணியளவில் வீடு செல்வது வழக்கம். அன்று தமிழ் பாடசெயலமர்வு நடைபெற்றதால் இரண்டு மணித்தியாலங்கள் பிந்தியே சொன்றான்.

உள்ளே எப்பொழுதும் போல கதையில் தொடர் நாடகங்களின் அட்டகாசம் அவனது மகள் நிலததில் விளையாடுகின்றாள். வழமைபோல அமளி எழும்புவதும் அடுக்களைக்குள் போவதும் மீண்டும் இருக்கையில் அமர்வதும் தானாக சிரிப்பதும் விழிகள் இரண்டும் தொலைக்காட்சிகளில் கரங்கள் இரண்டும் சோற்றுக்குகோப்பையுடன் போராட்டம்.

"உனக்கு எளப்போதும் விளையாட்டுத்தான் கொஞ்ச நேரலமானவது சும்மா இருக்க மாட்டாய்" என அங்களாய்த்தவாறு சோற்றுக் கோப்பையை வைத்துவிட்டு குழந்தையை தூக்ககுனிகின்றார் அவனது மாமியார். குழந்தை தொலைக்காட்சியில் நாடகமே வேண்டாம் என்பதுபோல அவனைப் பார்கின்றது. அவன் குழந்தையைப்பார்த்து மெதுவாகப் புன்னைகைத்து விட்டு அவனது அறைக்குள் நுழைகின்றான்.

"இஞ்ச உங்களுக்கு சாப்பாடு மேசையில் போட்டு வச்சிருக்கன் புள்ளையை முழுக வாக்கோனும்" என்றவாறு கைகளில் சோற்றுக் கோப்பையுடன் தொலைக்காட்சியை நோட்டம் இட்டவாறு கதிரையில் அமர்கின்றாள் அவனது மனைவி.

"அம்மா அவனுக்கு கல்யாணம் நடந்திடுச்சா" "சும்மா இரு நானும் உன்னோட தானே நேற்றுப் பார்த்தனான் இப்பதான் முதற்கட்டம் அவனட தம்பிக்கு கல்யாணம் நடந்திச்சு. சத்தம் போடாம பாரு"

கீழே இருந்த குழந்தை தொலைக் காட்சியின் சத்தத்தைத் தாங்கமுடியாமல் வீரிட்டு அழுதது. அவன் தனது உடைகளை மாற்றாமல் குழந்தையைத் தூககச்செனறான். அப்போது அனது மனைவி குறுக்கிட்டாள்.

"றோட்டாலே சுத்தித்திரிந்து போட்டு பிள்ளையைத்தூக்க வேண்டாம். என்ர பிள்ளைக்கு கௌரவம் தான் முக்கியம் உங்கள மாதிரி குளிக்காம கொள்ளா வேடர்கள் போல் என்ர பிள்ளையையும் நிளைச்சிட்டிங்களா" -

அவள் பேசியதில் இருந்து தொலைக் காட்சி நாடகத்தின் தாக்கத்தை காணக் கூடிவாறு இருந்ததது. நாடகத்தில் வினோதினி என்ற பாத்திரம் தனது கணவனின் பொறுப்பற்ற செயலை "உங்களுக்கு இப்ப ஒரே ஊர் சுத்துறது தான் பழக்கம்" எனத்திட்டயதும் யதார்த்தமாக வாழ்ந்த கணவனும் "உனக்கு இப்ப என்ன வேணும்.." என பதிலுக்கு கேட்கிறான். அவனது மனைவியாரும் மாமியாரும் வைத்த கண் வாங்காமல் அந்த நாடக உரை யாடலில் மூழ்கிப் போயிருந்தனர்.

T.V தொடர்ந்து பார்த்தால் ஆயுள் குறையுது. கண்பார்வை குறையுது. வாழ்க்கையில் விரக்தி ஏற்படுகின்றது. சிறுவர்கள் தவறானவழியில் செல்கின்றார்கள். குடும்பப்பிரிவு ஏற்படுகின்றது. உறவினர்களிடையே உள்ள அன்னியோன்னியம் குறைவடைகின்றது. குழந்தைகளின் மூளைச் செல்கள் பாதிப்படைகின்றது. மாணவர்களின் எழுத்தாற்றல் குறைவடைகின்றது. அவர்களுக்கு மந்த புத்தி ஏற்படுகின்றது. ஆண்கள் மதுவிற்கும், பெண்கள் வீண் பொழுதுபோக்கிற்கும் அடிமையாகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள் லீவு நாட்களில் நாடகங்களைப் பார்ப்பதால் பின்னர் பாடசாலை செல்லும்போது வெறுப்பு ஏற்படுகிறது. பெற்றோர் நாடகத்தில் கூடிய நேரத்தை செலவழிப்பதால் பிள்ளைகள் அன்பு இல்லாமல் பரிதவிக்கின்றனர். முதியவர்கள் இரவில் 3 மணித்தியாலங்களுக்கு மேல் தொலைக்காட்சியை தினமும் பார்த்துக் கொண்டிருப்பதால் இதயம் பாதிப் படைவதோடு அவர்கள் அதிகாலையில் துயில் எழவும் சங்கடப்படுகின்றனர். என முன்பு எப்பொழுதோ அவன் பத்திரிகையில் வாசித்ததை நினைத்துக் கொண்டு "இந்த வீட்டில என்றைக்காவது ஒரு நாள் இந்த நாடகத்தினாலே ஏதோ நடக்கப் போகுது. எனக்கு சாப்பாடும் வேணாம் ஒன்றும் வேண்டாம் நான் கடையில சாப்பிடுறன் வீட்டில எந்தநேரமும் நாடகம்தான்" - அவன் மோட்டர் சைக்கிளில் பயணமாகின்றன.

சிரிப்புச் சப்தம் ஓயவில்லை கணவனை தும்புக் கட்டையால் அடிக்கும் காட்சியில் இருவரும் ஊறித் திளைத்துப்போய் நின்றார்கள். T.V க்கும் அவர்களுக்கும் நடுவில் இருந்த குழந்தை இவர்கள் மீதும் T.Vயின் மீதும் வெறுப்புக் கொண்டதைப் போல கண்ணயர்ந்து நித்திரையாகி விட்டது.

"அம்மா அம்மா ..... அம்மா அம்மா....." என்று மதிபன் படலையடியில் நின்று கூப்பிடுகிறான்.

வெளியில் ஆளைக்காணவில்லை "உள்ளே வாடா கொலசிப் எக்சாம் றிசேல்ஸ் வந்திருச்சா கொண்டு வா பார்ப்பம் நீ பாஸ்பண்ணி விட்டாயா என்ற குரல் மட்டும் வெளியே ஒலித்தது.

"அம்மா அம்மா ..... அ...ம்...மா... அம்மா.... மா...அம்....ம...ம்...மா... கெதியா வாங்கோ"

T.Vயின் சத்தம் கூடுகின்றது. "நீ இப்படி ஏழையாக இருந்தா முதல்ல சொல்லியிருக்க வேண்டிருக்க வேண்டியது தானே என்ர வாழ்க்கையை வீணாக்கிப் போட்டாய். நான் எப்படி இருந்தனே அப்படியே விட்டு விட்டு எனக்கிட்ட வாங்கின காசையும் அம்மாவிக்கிட்ட வாங்கின காசையும் பொருட்களையும் தந்துவிட்டு எனக்கு நஷ்ட



தரம்–11A

தரம்–11B





தரம்–12 (கலை)

2016

தரம்–12(வர்த்தகம்)

2016





தரம்–13(கலை)

2015

ஈடும் தந்து உன்ர பாட்டுக்கு போ இல்லாட்டி நான் நல்ல லோயரிட்ட போய் உனக்கெதிரா வழக்குப் போடு வன்" என வினோதினி தொலைக காட்சியில் பேய்த்தாண்டவம் ஆடு கின்றாள்.

"அதுதான் சரியான பெண்" என பக்க வாத்தியம் பாடினார் அவளது மாமியார்.

"டேய் நீ செய்யிறதை செய் நான் என்ன பொய்யா சொல்லிப்போட்டன் உன்ர அம்மாவும் நீயும் கதைத்த கதை கொஞ்சமா என்னை என்ன மடையன் என்று நினைத்துக் கொண்டாயா மனிதனை முதல்ல மனிதனாய் மதிக்க வேண்டும்....."

நீங்க அனைவரும் கேட்டு வாங்க வேண்டிய சோப் என விளம்பரத்தோடு சிறிது இடைவெளிக்குப் பிறகு வசந்தம் தொடரும்.

மாமியார் எழுந்து குசினுக்குள் சென்றார் அவனது மனைவி சாப் பாட்டுக் கோப்பையை கழுவவதற்கு வெளியே வருகிறார்.

வீட்டுப்படலையடியில் சனக்கூட் டம் கூட்டத்தின் மத்தியில் எதிர்காலக் கனவுகளுடன் உயிரற்றுக் கிடக் கின் றான் மதிபன்.

அங்கு வந்த ஆடவர்கள் சிலர் பட லையிலிருந்த விசம்பாம்பை அடித்து இழுத்துச் சென்றனர்.

"அவனது மனைவி மதிபனை நோக்கி ஓடுகின்றாள். அவனது கரங் களுக்குள் கிடந்த கடதாசியை எடுத்துப் பார்க்கின்றாள். 150 புள்ளிகளைப் பெற்று புலமைப் பரீட்சையில் மதிபன் சித்தியடைந்துள்ளான். என ஆசிரி யரின் கையெழுத்துடன் இருந்தது"

"அம்மா.... அம்மா... அம்மா..."

அம்புலன்ஸ் வண்டி விரைந்துவந்தது, சனக் கூட்டம் கலைந்தது, மேகக் கூட்டங்கள் ஓடின, அவரவர் தங்கள கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

கோபத்துடன் சென்ற அவன் கோபம் தணியவே வீடு நோக்கி வருகிறான்.

"வசந்தம் தொடரும்" எடின தொலைக்காட்சியில் சத்தம் எனது காது களை துளைக்கின்றது. அதைப பார்ப் பதற்கு அங்கு எவருமில்லை.

அவனது மகள் விழித்துக் பார்க் கின்றான், என்னை வாஞ்சையுடன் பார்கின்றான். அங்கே என்னைத் தவிர வேறு யாருமில்லை.

அவன் ஆசையோடு தனது மகளை கட்டி அணைக்கின்றான். அப்போது சட்டைப்பைக்குள் இருந்த அவனது தொலைபேசி அலறுகின்றனது. தொலைக்காட்சியின் சப்தத்தினாலர் இந்த சத்தம் அவனது செவிகளில் வழவில்லை.

"மகளே! இப்ப அண்ணா பாட சாலையில் இருந்து வருவான் நீயும் அவனமாதிரி நன்றாக படிக்க வேண் டும்" - படலையை நோக்கி நகரு கின்றான்.

படலையின் முன்னால் "வைற் கவுஸ்" கார் நின்கின்றது.

காரைக்கண்டதும் தன்னை மறந்து "எ...கே...கே... எ...கே...எ... என குழந்தை சிரிக்கின்றது.

# காலந்தோறும் ஆலயங்களில் நாட்டியக்கலை

திருமதி தர்சினி வசீகரன்
ஆசிரியை, யா/நாவற்குழி.ம.வி

ஓம் என்ற பிரணவ ஒலி அண்ட சராசரம் எங்கும் வியாபித்துள்ளது. அண்ட சராசரங்களில் ஒன்றான பூமியிலுள்ள இயற்கையின் படைப்புகளில் மிளிரும் அசைவுகளை நாம் காணும் போது ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான தெளிவுசார் நலினங்கள் வேகங்கள் தெரிகின்றமையை உணரலாம்.

பன்னெடுங்காலமாகக் கலைகள் சமயத்துடன் இணைந்து வளர்ந்து வந்துள்ளன. இன்று சமயத்திற்கும் கலைகளுக்குமிடையே பிரிக்கமுடியாத ஒன்றிணைந்த தொடர்பு நிலவி வந்துள்ளது. இத்தொடர்பை வடநாட்டு காலம் தென்நாட்டுக்காலம் என்ற ரீதியில் பிரித்து கூறமுடியும் வடநாட்டு கால வரையறைக்குள் வேத ஆகம உபநிடத காலங்களும் தென்நாட்டு கால வரையான சங்ககாலம் தொடக்கம் இன்றைய காலம் என வரையறுக்கலாம். இவ் வரையறைக்குள் "தேன் மொழி தமிழ் மேன்மைகொள் சைவமும் பெற்ற வான்புகழ் கொண்ட ஒப்பிலா கலைகளின் சங்கமம் நிறைந்துள்ளது. இக்கலைகளில் மனம் என்னும் அபூர்வ இயந்திரத்தில் உண்டாகும் சிறு உணர்ச்சி உடலில் உள்ள அவ்வளவு அவையவங்களையும் ஆட்டி வைக்கும் சக்திபடைத்து ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு பாவம் இருக்கின்றது. அது இயற்கையே இதிலிருந்து பிறந்ததுதான் நாட்டியம் இவ் நாட்டியமானது காலந்தோறும் ஆலயங்களில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தியுள்ளது என நோக்கின்

**வேதப்பிரமாணங்களில் நாட்டியம்**

பிரம்மா நான்கு வேதங்களையும் மனதில் நினைத்துக் கொண்டு இவற்றில் இருந்து உண்டாக்கக்கூடிய நாட்டிய வேதத்தை செய்தார். நாட்டியத்தின் உரையை இருக்குவேதத்திலும் பாவங்களை அதர்வன வேதத்திலிருந்து எடுத்துக்கொண்டு ஐந்தாவது வேதமாக நாடடிய வேதத்தை வேத ஆகம உபநிடதங்களோடு ஒன்றி அணைத்து கருத்துக்களையும் தெரிவிக்கக் கூடியதுமான வகையில் பிரம்ம தேவர் சிருக்ஷ்டி செய்தார்.

**இறைவனே கலைஞன்**

சைவசமயத்தின் முழுமுதற்கடவுளான சிவன் ஆடற்கரசனாக நடராஜனாக நிற்கின்றார். ஆடல் வல்லானின் ஆடற் கூடத்தில் இயங்கும் இவ்வுலகம் அவனருளிய பரதக்கலையின் ஆத்மாரத்தமாக இணைந்துள்ளது. சிவனின் நடராஜ வடிவததிற்குள் இவ்வுலக ஒடுக்கம் அமைந்துள்ளது. நடராஜ தத்துவம் இந்துக்களின் பெரும்கடல் என்றே கூறவேண்டும் சிவனின் 108 கரணங்கள் நர்த்தன கணபதியின் ஆடல் வடிவம்,வேங்குழல் கொண்டு ஆடும்

கண்ணன் விக்கிரகங்களில் சிற்பங்களில் கரண வகை வெளிப்பாடு விக்கிரகங் களில் வெளிப்படும் முத்திரைகள் என் பன இறைவனே கலைஞன் என்பதனை உறுதி செய்யும்

**இறைவனின் வழிவந்த நாட்டியம்**

பிரம்மாவினால் கற்பனை செய்யப் பட்டு ஐந்தாவது வேதமாக தொகுக்கப் பட்ட நாட்டியக்கலை பிரம்ம பரதருக்க அருளி பரதர் தனது 100 பிள்ளைகளுக்கு கற்பிக்க அவர்கள் அக்கலையைப் பூமியில் பலருக்கு கற்பித்துப் பரவச் செய்தனர் என்பது புராணவரலாறு. மேலும் சிவன் கைலாயம் பதியில் இக்கலையைக்கண்டு மகிழ்வெய்திய சிவபெருமான் தாண்டவத்தைக் கற்பிக் குமாறு தண்டுமுனிவருக்கப் பணிப்ப தண்டுமுனிவர் பரதருக்கு கற்பிக்க உமை லாசியத்தை உஷைக்கும் உணவு துவாரகையிலுள்ள கோபிய ஸ்திரி களுக்குக் கற்பிக்க இவர்கள் செலிராஷ் டிர தேச மக்களுக்கு கற்பிக்க இவ்வாறு இந்நாட்டியக்கலையானது பூவுலகில் பரவியது.

**ஆலய அமைப்பில் நாட்டியம்**

சமய உணர்வினையும் அறிவினை யும் புகட்டும் நிலையங்களாக மட்டு மன்றி கவின்கலைமையங்களாக ஆலய ங்கள் மிளிர்ந்த கொண்டு அதில் ஊறிக்கிடக்கும் இசையமும் இவ் இரண் டையும் தழுவிய நாட்டியத்தின் நளின முமான இம்மூன்ற முத்தமிழும் மயங்கி கலந்து காண்போரை கேட்போரை இன்பக்கனவில் தவழச்செய்யும் தெய் வீகச் சிறப்புவாய்ந்த கச்சேரி கிரமமுறை காணப்படுகின்றது. இவ் நாட்டிய உருப்படிகளையும் இசைவகைகளை யும் முறையாக வகுத்துக்கொடுத்த பெருமை தஞ்சை நாட்டிய சகோதரர் கள் நால்வரைச்சாரும். அதில் இவ் நாட்டிய உருப்படிகள் கிரமத்தை ஒரு கோயிலின் அமைப்புடன் அபிநய அரசி ஸ்ரீமதி பாலசரஸ்வதி ஒப்பிட்டுக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. “அலாரிப்பு” என்ற கோபுர வாயில் வழியே பிரவேசித்து “ஜதீஸ்வரம்” என்ற அர்த்த மண்டபத்தையும் “சப்தம்” என்ற மகா மண்டபத்தையும் கடந்து வந்தால் புனிதத்திலும் புனிதமான தெய்வீக சந்நிதானத்தில் “வர்ணம்” வருகின்றது. லய ஜதிகளைக்கொண்ட பாவ அபிநய ங்கள் மொழியவும் விஸ் தாரமாக இடம்கொடுக்கும் சந்நிதா னமது. இதன்பின் “பதங்கள்” எனும் கர்ப்பக் கிரகத்தினுள் புகுந்தவுடன் ஏற்படும் ஓர் அடக்கம் குளிர்ச்சி அமைதி இந்தப் பதங்களுக்கு அபிநயம் புரியும்போது ஏற்படுகின்றது. இது ஆண்டவனுக்கு மறைமந்திரம் ஓதும் தன்மையை வெளி ப்படுத்துவது பதம் பின்னர் இறைவனு க்கு கற்பூர ஆராத்தி காட்டுவது போல் “தில்லானா” வருகின்றது. முடிவாக புறத்தில் வழிபடும் இறைவனை அகத் தில் இயக்கிக் கொள்வது போல் “விருத் தமாக” பக்திப்பாடல் ஒன்றை அபிநயி ப்பது பத்ததி என்பதாகும்.

மேலும் மண்டப ஒழுங்கு அமைப் பில் நிருத்த மண்டபமும் ஒன்று சிதம்பரத்தில் நடராஜபெருமான் திரு மஞ்சனம் கொள்ளும் இடமாக “கனக சபை” மண்டபம் திகழ்கிறது. இதனால் நடராஜர் கனக சபாபதி எனவும் அழைக் கப்படுகிறது. ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி “நிருத்த சபையில்” எழுந்தருளி உள்ளார்.

## கிரியைகளில் நாட்டியம்

இறைவனை வழிபடுவதற்கு மலர் நைவேத்தியம் ஆகியவற்றிலும் பார்க்க நிருத்ததானமே சிறந்ததென "விஷ்ணு தர்மோத்திர புராணம்" கூறுகின்றது. கடவுளரை வழிபடும் நித்திய நைமித் திய கிரியைகளில் அவரவர்களின் இயல் புகள் குணாதிசயங்கள் ஈடுபாடு விருப் பம் ஆகியனவற்றின் அடிப்படையிலே யே தாளம், ராகம், நிருத்தம், பண், வாத்தியம் ஆகியன அமையும் இக் கடவுளிற்குரிய வேதங்கள் நவசாந்தக் கௌத்துவங்களும் பாடப்பட்டு வந் தன. நித்திய நைமித்திய கிரியைகளி டம் பெறும் 16 வகை சோடச உபசாரங் களிலேயே 15வது அங்கமாக "நிருத்தி யோபசாரம்" குறிப்பிடப்பாலன. நிருத் தியோபசாரம் முற்காலததில் நைமித் திய, நித்தியகிரியைகளிலும் இடம் பெற்றதாயினும் இன்று அது சொல்லு வதோடு மட்டும் நின்று விடுகின்றது. "ஈசன்குருகே", "பத்ததி" எனும் நூல்கள் கோவில் வழிபட நிருத்தம் எவ்வாறு பயன்பட்டன என்று கூறுகிறன.

ஆகம விதிப்படி அபிடேகம் ஆராதனையின் பின்னர் நடனம் இறை யற்பணமாக ஆடப்பட்டது. இதைத் தொடர்ந்தே ஆலயங்கள் "நவஸந்தி நாட்டியம்" இடம் பெற்றது. "நவஸந்தி நாட்டியம் என்பது மூலமூர்த்தியி லுள்ள அறிமுகமான கோவில் வாசலில் பிரம்மாவையும் கிழக்குமுதல் ஈசானம் வரை எட்டுத்திசையிலும் இந்திரன் முதல் அட்டதிக்குப்பாலகர்களையும் உற்சவம் தொடங்கி முடிகின்ற காலம் வரையும் அவ்வாததியங்களில் சமூக மாகிச் ஒவ்வொருதேவதைக்கும் தனித் தனி நிருத்த வாத்தியங்களில் சமூக மாகிச் காவல் புரியும்படி பூ,சித்து வேண்டிக்கொள்ளும் வழிபாடு சம பாதம் புஜங்கம் லலிதம் சந்நதிய நிருத்தம் மண்டலம் தண்ட பாதம், புஜங்கத் திராசசம், ஆகிய ஒன்பது "நவஸந்தி நாட்டியங்கள்" ஆகும். கொடியேற்ற கொடியிறக்க திருவிழா விலும் இக்கிரியை இடம்பெறுகின்றது.

## இலக்கியங்கள் வெளிப்படுத்தும் ஆலய நாட்டியங்கள்

சங்ககாலம் தொட்டு இன்றுவரை எழுந்த பதிகங்கள் இலக்கியங்களில் நாட்டியம் பற்றி வெளிப்பாடுகள் அதிகம்.

சங்க காலத்திலே வேத்தியல், பொதுவியல் என்கின்ற இரண்டு வகை நடனங்கள் இடம்பெற்றன. இவ் நடனங்கள் மகிழ்ச்சியூட்டும் சாதன மாக மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை இவற்றை அறிவிக்கும் ஊடக மாக இருந்தனவேயன்றி ஓர் இறை வழிபாட்டுச் சாதனமாக இருக்க வில்லை. சங்க இலக்கியங்களில் குரு வை, துணங்கை, வெறியிடல் எனும் மூன்று பகுதியாகவே நடனங்கள் இருக் கும். நற்றிணை, எட்டுத்தொகை, பத்து ப்பாட்டு, தொல்காப்பியம் போன்ற நூல்களில் நடனம் பற்றிய செய்திகள் உள்ளன. "வேங்கை முன்றிற் குருவையும் கண்டே" எனும் நற்றிணை ப்பாடல் எடுத்துக்காட்டு.

சங்கமருவிய கால இலக்கியங்களில் சிலப்பதிகாரம் நடனத்தை வெளிப் படுத்தும் மகுட இலக்கியம் இங்கு மாதவி ஆடிய 11 வகை ஆடல்களை கூறுகின்றது. இவ் 11 வகை ஆடல்கள் இறைவனால் ஆடிய கூத்தினுள் அடங் குபவை உதாரணமாக சிவன் ஆடிய கொடுகொட்டி திருமால் ஆடிய அல்லி

# புலமைப்பரிசில் சாதனையாளர்கள் – 2014



இதயகுமார் சங்கீதன்



நந்தகுமார் சஞ்சய்



ஜீவகரன் புரீசன்



ஜனார்த்தன் அபிநயா

# சாதனையாளர்கள்



சோபனா ஜெயச்சந்திரன்
சிறுகதை ஆக்கம்
தேசிய மட்டம்
1ஆம் இடம் 2014



சுப்பிரமணியம் சுபாஜன்
ஒலிம்பியாட் போட்டி
3ஆம் இடம் தேசிய மட்டம்



விஜயகுமார் சுவேதா
சமூக விஞ்ஞானப் போட்டி
2ஆம் இடம் 2014 மாகாணமட்டம்



திருச்செல்வம் புஸ்ரூபன்
க.பொ.த(உ / த) 2014
வர்த்தகப்பிரிவு 3A சித்தி

யம் முருகன் ஆடிய குடை, உமைஆடிய மரக்கால் எனக்கூறலாம். குன்றக்குரவை எனும் கூத்து குறிஞ்சிநில மக்கள் முருகனை புகழ்ந்து வாழ்த்தி ஆடும் கூத்து, ஆலயங்கள் பற்றி எச் செய்தியும் இல்லை என்றாலும் இறைவ னுடன் இணைத்த கலை வெளிப்பாடு இருந்துள்ளது.

முதன் முதலில் ஆலயங்களில் நாட்டிய வெளிப்பாடு பல்லவர்காலத்தியே தோன்றியது. நாயன்மார்களும் ஆழ்வார் பாடிய பாடல்களும் இதற்கு தக்க சான்றாக அமைகின்றது. நடனங்கள் கோயில் வழிபாட்டில் ஓர் அங்கமாக திகழ்ந்தது.

"ஆடிப்பாடி அண்ணாமலை தொழ"

எனதிருநாவுக்கரசரும்

"ஆடல் பாடல் பேணீர் என"

சம்பந்தரும்

"பன்னாளும் பாடியாடி"

என சுந்தரரும்

"ஆடியாடி அகம் குழைந்திரை பாடிப் பாடி கண்ணீர் மல்கி" என நம்மாழ்வாரும்

ஆலயத்திலுள்ள நடனமாதர் "நித்திய சுமங்கலி" களாக இறைவனை திருமணம் செய்தவர்கள் என்ற வகையில் என்றும் சுமங்கலிகளாகக் கோவில்களிலே இசை நடனப்பணி செய்து வந்தார்கள். ஆகவே ஆலயங்களை யொட்டியும் அரச சபைகளையும் இணைத்தும் நடனங்கள் வளர்ந்தது.

பொற்காலம் எனப்போற்றப்படும் சோழர்காலத்தில் கம்பராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய நூல்கள் எடுத்துக்காட்டாக உள்ளன.

கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல ஐய நுண்ணியைடர் ஆடும் ஆடக அரங்கு கண்டார்" எனக் கம்பராமாயணம் கூறுகின்றது.

ஒரு செயலில் நடனமும் இசையும் சிவப்பிரானுக்குரியனவே என "நாட்டியச் செயல்யாவையும் சிவனது நாடக் பாட்டிசைத்திறன் யாவையும் மன்னாதே" என பந்தபுராணம் கூறுகின்றது. பல்லவர் காலத்தில் அறிமுக மான "நாட்டிய சாஸ்திரம்" நன்கு அறியப் பட்ட காலம் இறைவனின் 108 கரணங் களை வெளிப்படுத்தும் நூல்.

**ஆலயச்சிற்பங்களில் நாட்டியம்**

ஆலயச்சிற்ப ஓவியங்களில் முதன் முதலில் நாட்டியங்கள் சேர்த்த பெருமை பல்லவர் காலப்பகுதி மன்னர் களையே சாரும். மாமல்லபுரததில் சிற்பங்கள் இதற்கு சான்றாக அமைந் துள்ளது. சிவன் தண்டு முனிவருக்கு நடனத்திற்கான கால் அசைவை கற்பிப் பதைச் சித்தரிக்கும் சிற்பமும் தண்டு முனிவர் பரதருக்கு நாட்டியத்திறனைக் கற்பிக்கும் காட்சியினைக் காட்டும் சிற்பமும் நன்கு குறிப்பிடற்பாலது. சித்தன்ன வாசல் ஓவியங்கள் இக் காலத் தில் புகழ்பெற்றவை. காஞ்சி யிலுள்ள வைகுந்த பெருமாள் காலத்தில் ஆண் களும் பெண்களும் சேர்ந்து குழநடன மாடும் காட்சிகள் உள்ளன. காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தில் அபூர்வமான நடராஜர் வடிவம் நடன வடிவத்தி லிருந் து சற்று வேறுபட்ட தாக விளங்கு கின்றது.

சிற்ப ஓவியங்கள் மூலம் நாட்டியம் வளர்ச்சியடைந்த காலம் சோழர்காலம். இதற்கு சிதம்பர நடராஜர் ஆலயம் சிறந்த எடுத்துக்காட்டு. இராசராசனால் இக் கோயில் 108 கரணங்கள் சிற்பங் களாக செதுக்கி பெருமை பெற்றவர். சமயப்பற்றும் கலைவளமும் ஒருமித்து வெளிப்படுத்தும் ஆலயம் தஞ்சைப்

பிருகதீஸ்வரர் இசைநடனக்கலைஞரின் இவ் ஆலயத்தில் நியமித்திருந்தமை 400 நாட்டிய மகளிரை திருப்பணி புரியும் வண்ணம் நியமித்தல், ஆலயங்களில் வேதம், நடனம், வாத்தியம் ஒழுங்காக பேணப்பட்டது. தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் ஒழுங் காகப் பேணப் பட்டது. தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் விண்ணுலக மண்ணுலக நாட்டிய நிகழ்ச்சிகளைக் சித்தரிக்கும் ஓவியங்களும் உள்ளன. திருமுறைப் பாடல்கள் இசையுடனும் நடனத்துடனும் பயிலப்பட்டன. திருவாவடுதுறையில் உள்ள திருக் கோயில் ஒன்றிலே "நானாவித நடன ராணி" ஒன்று இருந்ததாக 1 ஆம் குலோத்துங்கன் காற்ச்சாசனம் ஒன்று கூறுகிறது.

தொடர்ந்து நாயக்கர் மதுரையிலும் தஞ்சையிலும் நடனத்தை மிகவும் செழித்தோங்க செய்தனர். ரம்பா, ஊர்வசி போன்ற தேவலோக கன்னிகள் ஆடிய நடனக் குறிப்புகள் வெளியான காலம். இறைவனைப்புகழ்ந்து போற்றக்கூடிய பதங்கள் தோன்றிய மங்கல மணிகள் முழங்க நாட்டிய நிகழ்ச்சிகள் துவக்கம் அமைந்தது. பின்னர் ஆங்கிலேயே காலத்தில் இந்துக்கள் நாட்டியத்தை ஓர் உயர்வுள்ள நுண்கலையாக மதித்தனர் என்றாலும் நடத்ததின் இருண்டகாலம் என்றால் அது ஆங்கிலேயர் காலம் என கூறப்படுகிறது. இதன்பின் ருக்மினி அம்பாள் கிருஸ்ணையர், பாலசரஸ்வதி, மீனாட்சி சுந்தரம்பிள்ளை என நாட்டியக் கலைஞர்கள் நடனத்தை மெருகூட்டி இன்றைய வளர்ச்சிக்கு உற்ற துணையாக நின்றவர்கள் இவர்கள் இறை பக்தியில் ஆலயங்களை மையமாக கொண்டு நாட்டியத்தை வளர்த்தனர்.

# மரக்கறிச் செய்கையில் ஒருங்கிணைந்த பீடைமுகாமைத்துவத்தின் அவசியமும் இயற்கைக் கட்டுப்பாடும்

ஐ.தெய்வேந்திரம்
ஆசிரியர்,யா/நாவற்குழி ம.வி

எமது உணவில் மரக்கறி முக்கியத்துவம் வகிக்கின்றது. மரக்கறிப் பயிர்களுக்கு விவசாயிகள் அடிக்கடி அதிகளவான பீடை நாசினிகளை விசிறி வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் அறுவடைக்கு முந்திய கால இடைவெளியை கருத்திற்கொள்ளாது மரக்கறிப்பயிர்களுக்கு நாசினிகளை விசிறி குறுகிய கால இடைவெளியிலேயே அதனை சந்தைக்கு அனுப்புகின்றனர். தாணியங்கள்/ பருப்பு வகைகள் போரல் மரக்கறிகளை நீண்டகாலம் சேமித்து வைக்காது அவை 3 நாட்களிற்குள் உண்ணப்படுகின்றன. அத்துடன் தானியங்களைப்போல் அதிகளவு அவிக்காது ஓரளவு அவித்தோ அல்லது பச்சையாகவோ மரக்கறிகள் நுகரப்படுகின்றன. இதன்காரணமாக பீடைநாசினிகளால் மரக்கறிகள் நஞ்சாவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. எனவே மரக்கறிகளுக்கு விசிறும் பீடைநாசினிகளின் அளவைக் குறைப்பதற்கான கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளின் போது மனிதர்களுடன் போட்டியிட்டு பொருளாதார சேதத்தை விளைவிக்கும் எந்த ஒரு உயிரினமும் "விவசாயப் பீடை" எனப்படும். ஆனால் சில விசேட சந்தர்ப்பங்களில் பொருளாதார சேதம் ஏற்படாத போதிலும் கூட அவை பீடைகள் எனப்படுகின்றன. நுண்ணுயிர்கள் முதல் பெரும் விலங்குகள், தாவரங்கள் வரயான பரந்த வீசசில் பீடைகள் காணப்படலாம் இதற்கு அமைய சில பக்ரீரியா, பங்கஸ், வைரஸ், போன்றன தாவர நோய்க் காரணிகள் பூச்சிகள், சிற்றுண்ணிகள், நத்தைகள், புழுக்கள், பறவைகள், முலையூட்டிகள் போன்ற விலங்குகள் பீடைகள்.
சில தாவர இனங்கள் (களைகள்) சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பீடைகள் எனவகைப்படுத்தலாம்.

விவசாய பீடைகள் தமது உயிரியற் தேவைகளுக்கு மனிதனுடன் போட்டியிடுகின்றன. ஆனால் உயிரியல் அடிப்படையில் இவை ஏனைய தாவர விலங்குகளைப் போன்றே சுற்றாடல் சமநிலைக்கு விவசாயச் சூழலியற் தொகுதியிலும் சூழலில் இயற்கைச் சமநிலையைப் பேணுவதிலும் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. இவற்றின் குடித்தொகை அடர்த்தி இயற்கையாக கூடிக்குறைவதோடு சூழலில் வித்தியாசமான வேகத்தில் பயணித்து வாழ்கின்றன. எனவே இவற்றை முற்றாக ஒழிப்பதைவிட தேவைக்கேற்ப கட்டுப்படுத்துதல் அல்லது முகாமை செய்வதே மிகவும் உன்னதமானதாகும்.

பீடைநாசினிகளை அதிகளவில் விசிறுவதால் ஏற்படக்கூடிய தீங்குகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

**மனிதனுக்கு நஞ்சாதல்**

அனைத்துப் பீடைநாசினிகளும் அவை மனித உடலில் சேரும்முறை, கால எல்லை, வடிவம் என்பவற்றிற்கு அமையகுறைவாகவோ/கூடுதலாகவோ நஞ்சாக மாறலாம் இவற்றை கையாளும் வியாபாரிகள், விவசாயிகள் பண்ணைக்கு அருகே வாழ்வோர் ஆகியோருக்கு இவை நஞ்சாகலாம். இதன் காரணமாக புற்றுநோய், இறந்த குழந்தை பிறத்தல், குழந்தையின்மை, சிறுநீரக நோய்கள் அகால மரணம் என்பவற்றிக்கும் இவை காரணமாக அமையும்.

**சூழல் மாசடைதல்**

நீர், வளிமண்டலம், மண் என்பன பீடைநாசினிகளால் மாசடைகின்றன. விசேடமாக விவசாய நிலங்களிலும் நீரிலும் உயிரினங்களின் எண்ணிக்கை குறையவும் அவை நஞ்சூட்டப்படவும் பீடைநாசினிகள் முக்கிய காரணியாக அமைகின்றது. இதன் காரணமாக நீரிலும் நிலத்திலும் வ்ாழும் தீங்கு விளைவிக்காத உயிரினங்கள் அழிந்து விடுகின்றன. உதாரணமாக வயல்களிலும் நீரோடைகளிலும் வாழும் மீன் இனங்கள் அழிகின்றன. அத்துடன் பல்வேறு மூலிகைகள் இல்லாமல் போகின்றமையும் குறிப்பிடலாம்.

**விவசாய நடவழக்கைகள் பாதிக்கப்படல்**

அதிகளவு பீடைநாசினிகள் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவு அதிகரிக்கும். பீடைநாசினிகளின் எதிர்ப்புத் தன்மை விருத்தியடையும். இதனால் பீடைகளை இரசாயன முறையில் கட்டுப்படுத்த முடியாமற் போவதோடு பல புதிய பீடைநாசினிகள் விசிற வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அது மட்டுமல்லாது பீடைநாசினி இல்லாது பயிர்செய்யமுடியாத நிலையும் ஏற்படும். அதிகளவு பீடைநாசினிகள் விசிறுவதால் ஏற்படும் மிக மோசமான விளைவு முகாமைத்துவம் செய்ய முடியாத அளவிற்கு நோய் பீடைகளின் தாக்கம் அதிகரிப்பதனால் பயிர்கள் அழிவடைவதுடன் இலாபமும் குறைவடையும் இதனால் விவசாயத்தில் நாட்டம் குறைவடைந்து செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இவற்றைக்கருத்திற்கொண்டு ஒருங்கிணைந்த பீடைமுகாமைத்துவம் செய்வது சிறந்ததாக அமையும்.

பீடைத்தாக்கத்தை அல்லது குடித்தொகையின் எண்ணிக்கையை பொருளாதார சேத அளவை விடக்குறைந்த மட்டத்திற்கு கொண்டுவர ஒன்றிற்கொன்று பொருந்தக்கூடிய ஒன்றிற்கு மேற்பட்ட உபாயங்களை குறிப்பிட்ட ஒரு திட்டத்திற்கு அமைய ஒன்றிணைந்து பயன்படுத்துவது "பீடை முகாமைத்துவம்" எனப்படும். இங்கு ஒவ்வொரு உபாயமும் பீடைகளின் மீது வித்தியாசமான அளவிற்கு செல்வாக்குச் செலுத்துவதனால் அனைத்து உபாயங்களும் குறிப்பிட்ட பீடையில் கூடிய அளவிற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் குறிப்பிட்ட ஒரு உபாயததில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும் அவற்றின் முழுமையான தாக்கதில் எவ்விதகுறைபாடும் காணப்படாது. ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தின் பலாபலன் உடனடியாக ஏற்படாவிடினும் நீண்டகால அடிப்படையில் நம்பிக்கையான பீடைக் கட்டுப்பாட்டிற்கு வழி வகுக்கும் இங்கு பீடைகள் முற்றாக அழிக்கப்படாவிட்டாலும் பொருளாதார சேதம்

ஏற்படாத அளவிற்கு பீடைகளைக் கட்டுப்படுத்தும். இது சூழலுக்கும் பொருளாதாரத்திற்கும் மிகவும் சாதக மான ஒரு முறையாகும்.

**ஒருங்கிணைந்த பீடை முகாமைத்து வத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை உபாயங்கள்.**

1. பயிரை நாட்டுவதற்கு முன்னரே பீடைகளின் எனண்ணிக்கையை கட்டுப்படுத்தல்.

பீடைகளின் எண்ணிக்கையைக் குறைத்து புதிய பயிர்களை செய்கை யில் ஆரம்பித்து பீடைகளின் சேதத் தினை தவிர்ப்பதற்கான சிறந்த முறை யாகும்.

2. முன்னைய பயிரை முற்றாக அழித்தல்.

மரக்கறிப்பீடைகள் பிரதான பீடைகளின் விருந்து வழங்கிகளான பழைய பயிர்களை முற்றாக அழித்தல். பழைய பயிர் மீதிகளை அழித்தல் இதனால் பீடைகளின் பரவுகை கட்டுப்படுத்தப்படும்.

3. அனைத்து விவசாயிகளும் ஒற்று மையாக செயற்படல்.

அதாவது ஒரு விவசாயி தனது தோட்டத்திலுள்ள பயிர் மீதிகளை அழித்தால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது அப்பிரதேசத்தில் பயிரிடும் அனைத்து விவசாயிகளும் தெளிவாக விளங்கி தோட்டத்தை சுத்தமாக செய்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

4. பழைய பயிரை தேவையில்லாது பராமரிப்பதை விட இறுதியாக அறுவடை செய்தவுடன் அதனை முழுமையாக பிடுங்கி அழிக்கப் படவேண்டும். இது சிறந்தபலனைப் பெற உதவும்.

5. தொடர்ச்சியாக ஒரே குடும்ப பயிரை செய்கைக்குட்படுத்தாது வேறு குடும்பபப்பயிரை மாற்றி பயிர்ச்செய்கையில் ஈடுபடல். இதனால் பீடைகள் தொடர்ச்சியாக வாழமுடியாது அழிவடையும்.

6. மண்ணைப் பரிகரிப்புச் செய்தல்.

நீண்டகாலத்திற்கு மரக்கறி பயிரிடும் போது அம்மண்ணில் பீடை களின் பல வளர்ச்சிநிலைகள் காணப் படலாம். இதனைக்கப்பட்டுப்படுத்து வதற்கு மண்ணைக்கொத்திப்புரட்டு தல், சூரிய வெப்பத்தினால் மண்ணை அரித்து மண்ணுடன் சேதனப்பசளை கலத்தல். போன்ற செற்பாட்டை மேற்கொள்ளல்.

7. புதிய பயிரை சரியான காலத்தில் பயிரிடல்

பழைய பயிரை அழித்தபின்னர் குறிப்பிட்ட கால இடைவெளியின் பின்னர் புதிய பயிரை ஆரம்பித்த லாகும்.

8. கலப்புப் பயிர்ச் செய்கை மேற் கொள்ளல்.

வெவ்வேறு குடும்பப்பயிரை மாற்றி மாற்றி அடுத்தடுத்த வரிசை களில் நடும்போது பீடைகள் பரவுவதை கட்டுப்படுத்தலாம்.

9. பயிர்களைச்சூழ மறைப்பு அல்லது உயிர்வேலி அமைத்தல். வேலி ஒரு பௌதிக தடையாக அமையும். மெல்லிய வலை பொலித்தீன் அல்லது உள்ளூரில் கிடைக்கும், உகந்த பொருட்களைப் பயன் படுத்தல்.

10. தரிசாக விடல்

தொடர்ச்சியாக பயிர் செய்யும் போது சில பீடைகளைக்கட்டுப்படுத்த முடியாது எனவே தொடர்ச்சியாக பயிர்

செய்யாது 4-6 மாத கால இடைவெளியில் பயிரிடாது தரிசாக விடுவதால் அவற்றின் வாழ்க்கை வட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாது அழிவடையும்.

11. மரக்கறிப்பீடைகளின் இயற்கை எதிரிகளை அதிகரிக்க கூடியவாறு சூழலை ஏற்படுத்தல்.

பயிர் செய்யப்படாத சகல இடங்களிலும் பற்றைக்காடுகளைப் பாதுகாப்பதன்மூலம் இயற்கை எதிரிகளின் வாழிடம் சிறப்பாக அமைவதால் இயற்கை எதிரிகள் அதிகரிக்கும் இவ் எதிரிகளின் மூலமாக பயிர் பீடைகளைக் கட்டுப்படுத்தலாம். இதை நாம் உயிரியல் கட்டுப்பாட்டு முறை என குறிப்பிடுகின்றோம். இயற்கை எதிரிகளை தோட்டத்தில் அதிகரிப்பதற்காக

1. முட்டை ஒட்டுண்ணியை தோட்டத்தில் விடுதல்.

சிலந்திக் குஞ்சுகளை தோட்டத்தில் விடுதல்.

இயற்கை எதிரிகளை கூடுகளில் இனப்பெருக்கம் செய்து தோட்டத்தில் விடுதல்.

உலர் புல்/ வைக்கோல் தோட்டத்தில் ஆங்காங்கே இடல் இது சிலந்திகளுக்கு வாழிடமாகும்.

பூச்சிகளை இரையாக உண்ணக்கூடிய பறவைகளை வரவழைத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் இயற்கை எதிரிகளுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலமும் அவற்றின் பெருக்கத்தை அதிகரிக்கலாம்.

12. வெளிச்சப்பொறிகளைப் பயன்படுத்துதல். இதன்மூலம் வெளிச்சத்தை நாடிச்செல்லும் பூச்சிகள் அழிக்கப்படுகின்றது.

13. இயலுமானவரை சேதனப்பசளைகளை மண்ணுடன் கலப்பதன் மூலம் பீடைகளின் தாக்கத்தை குறைக்கலாம். எனவே மேற்படி செயற்பாட்டை நடைமுறையில் கடைப்பிடித்தால் பயிர்பீடைகளின் பெருக்கம் கட்டுப்படுவதுடன் சூழல் மாசடைவதும் கட்டுப்படுத்தப்படுகின்றது. நஞ்சுகலக்காத மரக்கறிகளினை பெறக்கூடியதாகவுள்ளதுடன் உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்த மரக்கறிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே மரக்கறிப்பயிர்களை செய்கை பண்ணும் அனைவரும் மேற்குறிப்பிடப்பட்ட முறைகளை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் நஞ்சுத்தன்மையற்ற தரமான மரக்கறிகளைப் பெறமுடியும். இதனால் இரசாயன நாசினிகள் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நஞ்சுத்தன்மை கொண்ட மரக்கறி களை உணவாக உற்கொள்வதனால் ஏற்படக்கூடிய நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். எதிர்கால சந்ததியும் ஆரோக்கியமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உகந்த கற்பித்தல் முறை விஞ்ஞான பாட அடைவுமட்டத்தின் மூலமான ஓர் ஆய்வு

திருமதி.த.ஜீவபாலன்
ஆசிரியை,யா/நாவற்குழி.ம.வி

மெஞ்ஞானம் இல்லாதோர் வாழ்க்கை பயனற்றது என அன்றை சமயப் பெரியோர்கள் குறிப்பிட்டுள்ளது போன்று இன்று விஞ்ஞானம் இல்லாதோர் வாழ்க்கை பயனற்றது என்று கூறுமளவிற்கு விஞ்ஞானமானது வாழ்வின் பல்வேறு துறைகளிலும் ஊடுருவி உள்ளமையைக் காணமுடிகின்றது. ஆரம்பத்தில் நத்தை வேகத்தில் வளர்ந்த விஞ்ஞானப்புரட்சி இன்று வேகத்தைக் கணக்கிட முடியாதளவிற்கு வளர்ந்து வருவது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இதனாலேயே பாடசாலைக் கலைத் திட்டத்திலும் விஞ்ஞான பாடம் புகத்தப்பட்டு தரம் 6-11 வரையான பிரதான பாடங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. அத்துடன் தரம் 6-9 வரை வாராந்தம் 5 பாடவேளைகளும் தரம் 10,11 ற்கு 6 பாடவேளைகளும் விஞ்ஞான பாடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதிலிருந்து விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் புலப்படுகின்றது.

இவ்வாறு முக்கியதுவம் பெற்ற விஞ்ஞான பாடத்திற்கு மாணவர்கள் எவ்வகையில் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதற்கும் பல காரணங்கள் உள அவற்றைப் படிப்படியாக நோக்குவோம். மாணவர்களை அவர்களின் மீதிறன் அடிப்படையில் பிரதானமாக 3 பிரிவினராக வகைப் படுத்தலாம்.

1. மேல்மட்டம்
2. நடுத்தரமடம்
3. கீழ்மட்டம்

மேல்மட்ட மாணவர்கள் மீதிறன் கூடியவர்களாக காணப்படுவர். இவர்களின் பிரதான நோக்கம் க.பொ.த சாதாரண தரத்தில் சகல பாடங்களிலும் விசேட சித்தி எடுக்கவேண்டும் என்பதே ஆகும். இவர்கள் தாமாகவே கற்கும் ஆற்றல் உடையவர்கள் ஆசிரியரின் கற்பித்தல் முறை எவ்வாறு இருப்பினும் அவர்களின் விளங்கிக்கொள்ளும் ஆற்றல் காரணமாக பாடம் சார் தேர்ச்சி பெற்றவர்களாக காணப்படுவர். இவர்களுக்கு விஞ்ஞான பாடம் சுமையாக தென்படாது எனவே ஆசிரியர்களும் இவர்களது சித்திவீதம் தொடர்பாக கவலையடையத்தேவையில்லை.

ஆனால் நடுத்தர, கீழ்மட்ட மாணவர்களே குறிப்பாக விஞ்ஞான பாடத்திற்கு சவால் விடுபவர்காளக அமைகின்றனர். நடுத்தரமட்ட மாணவர்களை நோக்கினால் இவர்களது நோக்கு எப்படியாவது க.பொ.த உயர்தரததை அடையவேண்டும் என்பதே ஆகும். அவ்வகையில் அவர்கள் இலகுவான பாடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது விஞ்ஞான பாடத்தை சுமை எனக் கருதி தவிர்த்து விடுகின்றனர். இதனால் ஏனைய பாடங்களுடன் விஞ்ஞான பாட சித்திவீதத்தை ஒப்பிட்டு நோக்கும்போது அடைவுமட்டத்தை

உயர்த்த முடியாது. தவிப்பவர்கள் விஞ்ஞான பாட ஆசிரியர்களே எனும் கருத்தையும் இவ்வாக்கத்தின் மூலம் வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

எனினும் ஆசிரியரின் தொடர்ச்சியான மேலதிகமான பங்களிப்புக் காரணமாகவும், ஆசிரியரின் கண்டிப்பிற்கும், தூண்டுதலுக்கும், நெருக்கடிக்குமாக மிகச் சிரமப்பட்டுக் கற்று விஞ்ஞான பாடத்தில் சித்தி பெற்று பெருமைப்படுத்தும் மாணவர்களும் சிலர் நடுத்தர மட்டத்தில் உளர்.

அடுத்து மெல்லக்கற்கும் மாணவர்கள் பற்றி நோக்குவோம். இவர்களது மீதிறன்மட்டம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இவர்கள் விளங்கிக் கொள்ளும் ஆற்றல், கிரகிக்கும் திறன், சிந்தனைத்திறன், பிரயோகத்திறன் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்கு கலைத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைக்கு அமைய கற்பிப்பது பொருத்தமற்றதாகும் உதாரணமாக விஞ்ஞான பாடத்தில் குறித்த ஒரு தேர்ச்சிக்கு 3 பாடவேளைகள் (120 நிமிடம்) ஒதுக்கப்பட்டுள்ளது எனின் அத்தேர்ச்சி மட்டத்தை இம் மாணவர்களுக்கு விளங்க வைக்க 6 பாடவேளைகள் தேவைப்படுகின்றது. ஏனெனில் குறித்த 40 நிமிடத்திலும் இவர்களது கற்றல் கொள்ளளவு அண்ணளவாக 15-20 நிமிடங்களே யாகும். இதற்குமேல் நாம் மேலதிகமாக குறிப்பிடும் எந்த விடயத்தையும் இவர்கள் கிரகிப்பதாக தெரியவில்லை.

எனவே இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் எல்லாப்பாட அலகுகளையும் கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பாடப்பிரிவுக்கு ஏற்ப மாணவர்களுக்கு ஒப்புவித்து பாடத்திட்டம் (Sylabus) முடித்துவிட்டோம். என்று திருப்திப்படுவதை விட சிறுசிறு பகுதிகளாக பிரித்து கற்பித்து மாணவர்களுக்கு சிறு பகுதியேனும் விளங்க வைத்து விட்டோம் எனத் திருப்தி அடைவதே மேலாகும்.

எனது கல்விமாணி பட்டநெறிக் காலப்பகுதியில் என்னால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் உள்ளடக்கப் பட்ட மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு குறித்த தேர்ச்சி மட்டத்தை கற்பிக்க பின்வரும் கற்பித்தல் உத்திகள் கையாளப்பட்டன.

1. குழுமுறை
2. கண்டறிமுறை
3. காட்சிப்படுத்தல்முறை
4. வினாவுதல் நுட்பமுறை
5. விரிவுரை முறை

குறிப்பிட்ட தேர்ச்சி மட்டத்தினை குறிக்கப்பட்ட பாடவேளைக்குள் கற்பிக்க மேற் காட்டிய ஒவ்வோர் உத்தியும் தனித்தனியே பிரயோகிக்கப்பட்டன. அனைத்துமே தோல்வியில் முடிவடைந்தன.

1. குழுவில் தேவையற்ற கலந்துரையாடலில் ஈடுபடல்.
2. பிழையான வழியில் கண்டறிய முற்படலும் பொருத்தமற்ற சிந்தனையும்
3. காட்சிப்படங்களை தவறாக பிரயோகித்தல் கிரகித்தல்.
4. பாடத்திற்கு அப்பாற்பட்ட விடை பகிர்தல்
5. விரிவுரையை எவ்வகையிலும் கிரகிக்காது இருத்தல்.

போன்ற இடர்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. குறித்த தேர்ச்சி மட்டம் பற்றிய அறிவை மாணவர் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும்

என்பதற்காகவும் எப்படியாவது அத் தேர்ச்சிமட்டத்தை மாணவருக்கு விளங்க வைக்கவேண்டும் எனும் நோக்கத்துடனும் புதிய கற்பித்தல் முறை ஒன்றினை உருவாக்கி பிரயோகிக்க முற்பட்டேன்.

குறித்த தேர்ச்சி மட்டத்தினை 5 பிரிவுகளாகப் பிரித்து படிமுறைக் கற்பித்தல் எனும் புதிய உத்திமூலம் ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியே கற்பித்து மதிப்பீடு செய்யப்பட்டு பின்னர் அனைத்து படிமுறைகளும் நிறைவு பெற்றதும் இறுதி மதிப்பீட்டை மேற்கொண்டபோது விளைவு வியக்கத்தக்க வகையில் உயர்ந்து காணப்பட்டது.

இதேபோன்று மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பல்வேறு தேர்ச்சி மட்டங்களை இவ்வாறு உப பிரிவுகளாக்கி படிமுறைக்கற்பித்தல் முறை மூலம் கற்பித்து வெற்றிகண்டமை இங்கு குறிப்பிடக்கூடியதொன்றாகும். இவற்றில் இருந்து நோக்கும் போது மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு படிமுறைக்கற்பித்தல் உகந்த முறையாகும் என்பதே எனது கருத்தாகும்.

படிமுறைக் கற்பித்தல் மூலம் கலைத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட அனைத்துப் பாடங்களையும் மாணவருக்கு ஒப்புவிக்க முடியாது என்பது ஓர் பிரதிகூலமாக இருப்பினும் கற்பிப்பது சிறு பகுதியாகினும் மாணவர் பூரண விளக்கம் பெற்றிருத்தலே மேலான திருப்தி ஆகும்.

# எல்லாம் என் மகனுக்காக

திருமதி.க.அண்ணாமலை
ஆசிரியை, யா/நாவற்குழி ம.வி

தலையணையில் தலையை சரித்து திவாகரின் உடல் முழுதும் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தது. ஆனால் அவனின் பிஞ்சு நெஞ்சம் மட்டும் உள்ளுக்குள் குமுறிக்கொண்டு இருந்தது அரவணைக்க அன்னை இல்லை. தட்டிக் கொடுப்பதற்கு தந்தையும் இல்லை.

இறந்த தந்தையை நினைக்கும் போதும் விபச்சாரி எனும் பட்டத்துடன் தலைமறைவான தனது தாயை நினைக்கும்போதும் அவனுடைய கண்ணீர்க்குளம் வற்றுவது வழக்கம் தான் அம்மாவின் மேலுள்ள கோபமும் வெறுப்பும் நாளுக்கு நாள் அதிகரித்தது.

இதில் இன்னமும்தன் தாயின் முகத்தை அறியாதவனாயிருப்பது பரிதாபத்திற்குரிய விடயம். ஆனாலும் சமுதாயத்தில் தனக்கென்று ஒரு மரியாதையை ஏற்படுத்திக் கொள்வதற்காய் விடாமல் படித்தான். எதிர்காலத்தில் தன் பெயருக்கு முன் டாக்டர் எனும் பெயர் வருவதற்குத்தான் அவன் அயராது உழைத்தான்.

டாக்டர் படிப்பென்றால் கொஞ்சம் அப்படி இப்படி செலவுகள் அதிகரிக்கும் அதற்கெல்லாம் மாதாந்தம் தவறாது அவனது சித்தப்பதா நைஜீரியாவிலிருந்து அனுப்பி வைப்பார். திவாகரின் வாழ்க்கைச்சக்கரம் உருண்டது. இலங்கையிலிருந்து டாக்டர் திவாகர் எனும் பட்டத்துன் வெளியேறினான்.

அவனுக்கு தனது வைத்தியத் தொழிலை மேற்கொள்வதற்காக நைஜீரியாவிற்கு ஒப்பந்த அடிப்படை யில் இடமாற்றம் பெற்றுச் சென்றான். தன் பணியை ஏற்றுக்கொள்வதற்கு முன் தன் சித்தப்பாவை காண்பதற்கு அவருடைய முகவரி தேடி வாடகைக் காரில் பயணித்தான்.

இலங்கையிலிருந்து நைஜீரியாவிற்கு அவனுக்கு இடமாற்றம் கிடைத்தமைக்கு காரணம் உண்டு ஆம் இரண்டு நாட்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உயிர்களைக் குடிக்கும் எபோலா வைரஸ் நோய் நைஜீரியாவில் காட்டுத்தீ போல பரவியது. பாரதூரமான இந் நோய்க்கு இன்னமும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. என்பதே உண்மை.

திவாகர் காரில் செல்லும் போதே வீதி நடுவிலும், கடையிலும், மணி ஆடர்கள் அனுப்பும் தபால் நிலையத்திலும் மூன்று பிணங்களைக்கண்டான். எபோலா வைரஸ் எந்நேரத்திலும் ஒருவரின் உயிரைக்கொல்லும் இது ஒரு தொற்றுநோய் என்பதால் நடந்து செல்லும் போதே இறந்த மனிதர்களின் பிணங்களின் அருகில் செல்வதற்குக் கூட மக்கள் பயப்பட்டார்கள் அதனால் தான் அந்தப் பிணங்களை யாருமே அப்புறப்படுத்தப்படவில்லை என்பது புரிவதற்கு திவாகருக்கு சிறிது நேரம் தேவைப்படத்தான் செய்தது.

ஒரு மாதிரியாக தன் சித்தப்பாவின் வீட்டை அடைந்தான் ந்ன்றி மறக்காமல் அவருடைய கால்களில் விழுந்து "நீங்கள் இல்லையெனில் இன்று நானில்லை" என கண்ணீர் மல்க கூறினான் அவனது சித்தப்பாவோ "நான் உனக்கு பணம் அனுப்பவில்லை இவ்வளவு நாளும் உனது படிப்பிற்கும் வாழ்க்கைக்கும் உதவி செய்தது நானல்ல" என கூறினார்.

ஏதும் புரியாதவனாய் நின்றான் திவாகர் சித்தப்பா தனது சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து கண்களின் ஓரம் வழிந்த கண்ணீரை துடைத்தவராக கூறத் தொடங்கினார்.

"ஆம் திவாகர் கணவன் இறந்தவுடன் மனைவிக்கு விதவை எனும் பட்டத்தை இந்த சமூகம் கொடுக்கின்றதோ இல்லையோ ஆனால் விபச்சாரி எனும் பட்டத்தை தவறாமல் கொடுக்கின்றது. அவ்வாறு பொய்ப் பட்டம் சூட்டப்பட்டவர்தான் உனது அம்மா அதனால் உன் எதிர்காலம் பாதித்துவிடக்கூடாது என்பதற்காக இங்கே பணிப்பெண்ணாக வந்தாள் இரவு பகல் பாராது உழைத்தாள்.

நீ அவள் மீது வெறுப்புக் கொண்டதை அறிந்த அவள் எங்கே தனது பெயரில் பணம் அனுப்பினால் நீ ஏற்றுக் கொள்ளமாட்டாய் என நினைத்து என் அனுமதியுடன் மாதம் மாதம் எனது பெயரின் மூலம் பணம் அனுப்பினாள். அப்போதுதான் இந்த எபோலா வைரஸ் பரவத் தொடங்கியது.

இந்நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளைக் கவனிக்க அவரது உறவினர்கள் கூட பயப்பட்டனர். அந் நேரத்தில் உனக்கு பல்கலைக்கழகப் படிப்பிற்கு அதிக பணம் தேவைப் படுவதாக கூறினாய் அதை நான் உன் அம்மாவிடம் கூறினேன்.

அதிக பணம் உழைப்பதற்காக தனது உடல் ஆரோக்கியத்தையும் பலி கொடுத்து எபோலா நோயாளர்களை பராமரிக்கத் தொடங்கினாள். அவ்வாறு சேவை செய்வதை என்னிடம் கூட மறைத்து விட்டாள். இதனால் வெகு சீக்கிரமே எபோலா நோய்க்கு உட்படுவதற்கான அறிகுறிகள் கொண்டு காணப்பட்டாள் ஆயினும் வீடுவீடாக, வைத்தியசாலை வைத்திய சாலைகளாக சேவை செய்து உன் படிப்பிற்கு பணம் அனுப்பினாள். நீ நிச்சயமாக பெரிய ஆளாய் வருவாய் என அடிக்கடி கூறுவாள். இப்போது அவள் எங்கேயென்று எனக்கும் தெரியாது. சித்தப்பாவின் வார்த்தைகளைக் கேட்ட அவன் உணர்வுகள் அனைத்தும் இழந்தவனாய் தரையில் சாய்ந்தான் தனது தாயின் தியாகங்களுக்கு முன் அவன் பெற்ற பட்டமும் ஏன் அவனது உயிர் கூட பெரிதாகத் தெரியவில்லை இதயத்தின் ஒரு மூலையில் இந்த சமுதாயத்தை கடித்துக்குதற வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது.

எதுமே இல்லாத சிறு பிள்ளையாய் ஆனான் வாய்கள் பேசவில்லை. அவன் கத்தினான் கதறினான் அவனது விழிகள் தன் தாயை தேடுவதை உணர்ந்தான். தன் சித்தப்பாவுடன் தனது தாயைத் தேடும் பணியில் ஈடுபட்டான் அவரை எங்குமே காணவில்லை. அவனது உயிர் போவது போலிருந்தது.

மனமுடைந்து அமர்ந்துவிட்டான் அப்போது அவனது பள்ளித்தோழனை கண்டு கொண்டான். அவனுடன் தனது சோகக் கதையைக் கூறுவதற்கு மனம் எத்தனிததாலும், வாயிலிருந்து வார்த்

தை வரவில்லை தன்தாயின் புகைப் படத்தை அவனிடம் காட்டினான் அதைப்பார்த்த அந் நண்பன் இந்த அம்மா எனது வைத்தியசாலையிலுள்ள எபோலா நோயாளிகளை பராமரிப்ப வாறவராச்சே மிகவும் நல்லவர் வயது முதிர்ந்த காலத்தில் அதுவும் எபோலா வைரஸ் தாக்கியும் இவர் கடின வேலை களை செய்வார். ஏனென்று கேட்டால் "எல்லாம் என் மகனுக்காக" என கூறு வார். ஆனால் மாதந்தோறும் வரும் பணத்தை தவறாமல் மணி ஆடர் செய் யும் தபாலகத்திற்கு கொண்டு செல்வார். இப்போது கூட அங்குதான் தனது ஊதியத்தை எடுத்துக் கொண்டு நடந்து சென்றார்.

நண்பனின் இவ் வார்த்தைகளைக் கேட்ட திவாகரின் நெஞ்சில் பாலை வாரத்தது போல் இருந்தது. சிறிதும் தாமதியாமல் மணி ஆடர்களை அனுப் பும் பெரிய தபாலகத்திற்கு தனது காரை செலுத்தினான். இடையிடையே தனது தாயின் புகைப்படத்தைப் பார்த்த அவன் ஏதோ நினைவு வந்தவனாய் காரை திருப்பி உபதபால் நிலையத் திற்கு செலுத்தினான்.

அத் தபாலகத்தை நெருங்க நெருங்க அவன் உள்ளம் வியர்க்க தொடங்கியது. தான் வரும் பொழுது பார்த்த அந்த பிணங்களில் ஒன்றாக தனது தாயின் பிணமும் இருக்குமோ என நினைத்தான் போலும். அந்த தபாலகத்தை அடைந்த வுடன் அதன் முன் கிடந்த பிணத்தின் கிட்டே சென்று முகத்தைப் பார்த்தான். திவாகரின் இதயம் சுக்கு நூறாக உடைந்தது. ஒரு கையில் பணத்துடன் வாய் நிறைய இரத்தம் கக்கியபடி தனது தாயின் உடலைப்பார்த்த அவன் தலை சுற்றியது. தாயை தூக்குவதற்கு முற்பட் டான். ஆனால் அவனது சித்தப்பாவோ வேண்டாம் தம்பி பின்பு எபோலா உனக்கும் தொற்றிவிடும் என தடுத்தார். சிறுவயதிலிருந்து தாயின் முகத்தை அறியாத அவன் உள்ளம் இந்த நிலை யில் தாயை பார்த்தவுடன் சும்மா இருக்குமா? சித்தப்பாவின் கைகளை உதறிவிட்டு தனது தாயை தன் மடியில் தூக்கி வைத்து அழுதான். கதறினான். தாயை அன்புரோடு முத்தமிட்டான். தாயின் கையிலிருந்த ஒரு கடிதத்தை பார்த்தான். அதில் அவனுடைய தாய் "எல்லாம் என் மகனுக்காக" என எழுதியிருந்தார்.

விக்கி விக்கி அழுதான் திவாகர் தனது தாய் பட்ட துன்பத்தை நினைத் தான். தன்னைப்போலவே உறவுகளை இழக்கச் செய்யும் இந்த எபோலா வைரசுக்கு தடுப்பு மருந்தொன்றை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுள் தோன்றியது.

தனது வாழ்க்கையையே மறந்து பல துன்பங்களை அனுபவித்து அந்த தடுப்பு மருந்தை கண்டு பிடிக்க முயற்சி செய்தான். தனது தாய் பட்ட துன்பங் களுக்கு முன்னால் தனது கஷ்டங்கள் யாவும் ஒரு கால் தூசி என நினைத்தான். ஆம் திவாகர் சாதனை படைத்து விட்டான். எபோலா வைரசை தடுக்கும் மருந்தை கண்டு பிடித்து அதில் வெற்றி பெற்றுவிட்டான்.

இதற்காக அந்த நாட்டு அரசாங்கம் அவனுக்கு பாராட்டு விழா ஏற்பாடு செய்திருந்தது. பல பாராட்டுக்களும், நினைவுச்சின்னங்களும் அவனுக்கு வழங்கப்பட்டன. தனது தாய் தனது அருகிலே இருந்து தன் பாராட்டுக் களைக் கண்டு மகிழ்ந்து தனக்கு ஆசி வழங்குவதாக நினைத்தான்.

திவாகரின் உரைக்காக இந்த உலக மே காத்திருந்தது. மேடையில் ஏறிய திவாகர் தனது தியாகத்தாயை நினைத்து மேடையில் ஒரே ஒரு வார்த்தையை மட்டுமே பேசினான் அது தான் “எல்லாம் என் அம்மாவுக்காக” ஆம் இவ்விதவைத் தாயின் மகனை இழந்த வேதனையும், மரணமுமாவது இந்த சமுதாயத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு ஒரு விடிவு காலமாய் அமையுமா? இல்லை கற்புநெறி தவறாத பெண்களுக்கு விபச்சாரிப்பட்டம் தான் தொடருமா?



தரம்–13(கலை)

2014



தரம் – 13 (வர்த்தகம்)

2014



மேலைத்தேய வாத்திய அணி



சாரணிய அணி

# சாதனையாளர்கள்



ஜெயச்சந்திரன் ஒல்வியாடிலக்சனி
சிங்கள வாசிப்பு போட்டி
வலயம்ட்டம் 1
மாகாணமட்டம் 2



தென்மோடிக் கூத்து
மாகாணமட்டம் 3ம் இடம் - 2014



முழுநேரத்தொண்டர்
திரு. க. சுந்தரலிங்கம்

# மாணவர்
# ஆக்கவியல்

# மண்ணின் மணம்

செல்வன் சு.சுபாசன்
தரம் 11B

## அறிமுகம்

நாற்புறமும் இந்து மாதாவால் சூழப்பட்ட இலங்கைக்கு திருநாட்டின் எழில்மிகு சோலைகளையும் பல்கலைக் கழகங்களையும் நாற்றிசையும் அசையும் பனை மரங்களையும் கொண்ட யாழ் குடா நாட்டிலே வளம்மிகு வயல்களை யும் நாற்றிசையும் கண்கவர் ஆலயங் களையும் கொண்டது நாவற்குழிப் பிரதேசம். நாவற்குழிப் பிரதேசமானது தச்சன்தோப்பு, வேலன்பிராய், கோவி லாக்கண்டி, கொல்லன்கிராய், தனங் கிளப்பு போன்ற உபகிராமங்களை உள்ளடக்கியுள்ளது. காலம் காலமாக பல்வேறு வரலாற்று சங்கமங்களை தன்னகத்தேகொண்ட இப்பிரதேசத்தை ஆராயும் பொருட்டு எமது பிரதேசத் தின் அம்சங்கள் எம்மை வியப்பூட்டு வனவாய் அமைந்துள்ள துடன் எம்மை மேலும் மேலும் ஆராயவும் தூண்டு கின்றது.

வரலாற்றுள் பல தடங்களை பதித்த எமது பிரதேசமானது பல துறைகளில் பல சாதனைகளை நிலைநாட்டி யுள்ளது. இனி நாம் பல்வேறு சிறப்புக் களை கொண்ட நாவற்குழி பிரதேசம் பற்றி விரிவாக உற்று நோக்குவோம்.

## பொருளாதாரப் பன்முகம்

எமது பிரதேசத்தின் பொருளா தாரம் மன்னராட்சி காலம் முதல் இன்று வரை பரிணாம வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. எமது பிரதேச பொருளா தாரத்தை விவசாயம், வர்த்தகம் என இருவகைப்படுத்தலாம். எமது பிரதேச த்தில் மன்னராட்சிக்காலத்தில் எமது பிரதேசம் வடக்கின் நெற்தானியக் களஞ்சியமாக திகழ்ந்ததாக வரலாற்று சம்பவத்திரட்டுக்கள் கூறுகின்றன. அக்காலத்தில் எமது பிரதேசத்திற்கு நெற்துறை என்ற பெயர் வழங்கப்பட் டதற்கு எமது பிரதேசம் விவசாயத்தில் சிறந்து விளங்கியதற்கே காரணம். விவசாயத்திற்கு மன்னர்களது ஆதரவு முற்றுமுழுதாக கிடைத்துள்ளது. கிரா யக் குளம், புன்னைகுளம், சம்பைகுளம் போன்ற விவசாயக்குளங்கள் மன்னர் களின் அனுசரணையுடனே கட்டப்பட் டுள்ளது. எமது பிரதேச வர்த்தகமானது பண்டமாற்றை அடிப்படையாக கொண்டுள்ளது. எமது பிரதேசத்தில் தற் போதைய தச்சன்தோப்பு புகையிரத நிலையத்தின் அருகிலும் மற்றும் வேலன்பிராய் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகிலும் அக்காலத்தில் பண்டமாற்று சந்தைகள் இருந்ததாக வும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அக்கால மக்கள் முஸ்லீம்களுடன் வர்த் தகத்தில் ஈடுபட்டதாக ஆதாரங்கள் கூறுகின்றது.

## தொழிற்சிறப்பு

இப்பிரதேச மக்களின் தொழி லானது கிராமத்திற்கு கிராமம் வேறு

படுகின்றது. நாவற்குழி தெற்கு பிரதேசத்தின் முக்கிய தொழிலாக மீன்பிடியும் அதனுடன் இணைந்த கைத்தொழிலும் பரவலாக செய்யப்படுகின்றது. வேலன் பிராய் மக்களின் முக்கியதொழிலாக கட்டடவாக்க துறையும் கோவிலாக் கண்டி பிரதேசத்தினது முக்கிய தொழிலாக மீன் பிடியும். தச்சன்தோப்பு பிரதேச முக்கிய தொழில்களாக தச்சு தொழிலும், இரும்புத் தொழிலும் சிறப்பாக அமைந்துள்ளன. எமது பிரதேசத்தில் இவ்வாறு பன்முகத்தன்மை காணப்படுவது சிறப்பம்சமாகும்.

**போக்குவரத்து**

எமது பிரதேசமானது மன்னராட்சி காலத்தில் போக்குவரத்து மத்திய நிலையமாக திகழ்ந்துள்ளதாக கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் இறுதி மன்னனான இரண்டாம் சங்கிலி நாவற்குழி பிரதேசத்தினை போக்குவரத்திற்காக பயன்படுத்தியதாகவும் போர் உபகரணத்தை தருவிப்பதற்கு பயன்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

**சமயப்பிரவாகம்**

எமது பிரதேசத்தில் சைவசமயம், கிறிஸ்தவ சமயம் என்பன மக்களால் பின்பற்றப்படும் சமயங்களாக உள்ளன. சைவசமயமே எமது பிரதேசத்தில் அதிகம் கடைப்பிடிக்கும் சமயமாக உள்ளது. எமது பிரதேச சைவமக்கள் ஆகமம் சாரந்த, ஆகமம்சாராத இரு முறைகளில் தமது வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். ஆகமம் சாராத என்ற முறையில் நாட்டார் தெய்வங்களான அண்ணமார், வதனமார், வீரபத்திரர், போன்ற தெய்வங்களும் அத்தெய்வங்களுக்குரிய ஆலயங்களும் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. தச்சன்தோப்பு பூதவராயன் ஆலயம், வேலன்பிராய் அண்ணமார் ஆலயம், நாவற்குழி வீரபத்திரர் ஆலயம் என்பன அவற்றுள் சிலவாகும். ஆகமம் சாரந்த முறையில் வேதாகமங்களுக்கு உட்பட்ட பரிவாரத் தெய்வங்களிற்கு ஆகம விதிக் கேற்ப ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடாற்றப்படுகின்றது. தச்சன்தோப்பு வயலூர் முருகன் ஆலயம், நாவற்குழி சித்திவிநாயகர் ஆலயம் என்பன அவற்றுள் சிலவாகும். ஆறுமுக நாவலரின் கஞ்சித்தொட்டி தர்மத்திற்கு தேவையான நெல் எமது பிரதேச மக்களிடமிருந்தே இலவசமாகப் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் விவேகானந்தரின் யாழ்ப்பாணத்திற்கான பாதயாத்திரை நாவற்குழி பிரதேசத்திலிருந்தே ஆரம்பமாகியதாகவும் கூறப்பட்டுள்ளது. இதன் மூல எமது பிரதேசத்தில் சைவசமயம் வேரூன்றி உள்ளதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

**கல்வி**

எமது மக்களின் எழுத்தறிவு மட்டமானது 30.02 வீதமாக காணப்படுவதாக கூறப்பட்டுள்ளது. எமது பிரதேசத்தில் கல்வி கற்பதற்கு தேவையான வளங்கள் அதிகவில் காணப்படுகின்றது. எமது பிரதேச கல்வி தாய் உருவாக்கிய கல்வியியலாளர்கள் பலர். அவர்களுள் நாவற்குழியூர் நடராஜன், சந்திரசேகரன், லிங்குசாமி, சாமிநாதன் ஆகியோர் என்றுமே எமது மனதை விட்டு நீங்காதவர்கள். மரபுவழிக் கல்வியில் இருந்து நவீனவழிக்கல்விக்கு எமது பிரதேச கல்விமுறையும் மாற்ற

மடைந்து வருகின்றமை குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

**மக்கள் வழிப் பரம்பரை**

எமது பிரதேச ஒவ்வொரு மக்கள் கூட்டமும் ஏதாவதொரு மன்னர் பரம்பரை குல முறையை பின்புலமாக கொண்டதாக உள்ளது. கோவிலாக் கண்டி மற்றும் நாவற்குழி தெற்கு பிரதேச மக்கள் இராமனின் நண்பனான குகனுடைய வழித்தோன்றலாக உள்ள தாக கூறப்படுகின்றது. அது மடடுமல் லாமல் தச்சன்தோப்பு பிரதேசத்தில் விஸ்வகுலத்தைச் சேர்ந்த ஆசாரியர் பரம்பரை மக்கள் வாழ்ந்து வருகின் றனர். நாவற்குழி மத்திய பிரதேசத்தில் சித்திவிநாயகர் ஆலய ஸ்தாபகர் வழிப் பரம்பரைகள் வாழ்கின்றனர். இதன் காரணமாக எமது பிரதேச மக்களின் கலாசாரம், பாரமபரியம் என்பன இடத்துக்கிடம் வேறுபடுகின்றன.

**கலை விம்பம்**

எமது பிரதேச கலையை நாம் நாட்டுப்புறம் சார்ந்த, நாட்டுப்புறம் சாராத என்ற முறையில் வகுக்கலாம். கின்றது. ஆக நாட்டுப்புற முறைக்கு ஏற்ப அமைந்துள்ள நாடகங்கள், கூத்துக்கள் உளளன கூத்துக்கள் என்ற வகையில் எமது பிரதேசத்தில் அரிச் சந்திரன் கூத்து, காத்தவராயன், சத்திய வான் சாவித்திரி, இராவணேசன் ஆகிய கூத்துக்கள் எமது பிரதேசத்தில் காணப் படுகிறன. அதனை விட எமது பிரதே சத்தில் செதுக்கல் கலையம் வளர்ச் சியுற்றுள்ளது. எடுத்துக்காட்டாக மகாதித்தனது மன்னன் காலத்தில் அமைக்கப்பட்ட வேலன்பிராய் கண்ணகி அம்மன் ஆலய தேரில் சில்லில் காணப்படும் சிறப்பமசம் பொருந்திய செதுக்கல் நாவற்குழி தச்சன்தோப்பை சேர்ந்த ஒருவரால் செதுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. எமது கலையின் புகழ் மட்டுப்படுத்தப் பட்டது அல்ல. இது ஒரு மிகப்பெரிய அண்டமாக காணப்படுகின்றது.

எமது பிரதேசத்தின் ஒவ்வொரு கிராமங்களினது பெயர்கள் ஏதாவ தொரு பொருளை விளக்க கூடியதாக அமைந்துள்ளது.

**நாவற்குழி**

நாவல் மரங்கள் நிறைந்த பகுதியாக காணப்பட்டதால் இது நாவற்குழி என அழைக்கப்படுகின்றது.

**மறவன்புலவு**

மறவர்- வீரர், புலவு- வயல் வீரர்கள் ஒன்றுசேர்ந்து வாழும் வயற் பகுதி களாக காணப்படுவதால் மறவன் புலவு என அழைக்கப்படுகின்றது.

**கொல்லன்கிராய்**

பஞ்ச கம்மாளர்களினுள் ஒரு பிரிவி னரான இரும்புத் தொழிலாளர் வாழ் கின்ற ஊராக இது உள்ளதால் கொல் லன்கிராய் என அழைக்கப்படுகின்றது.

**தச்சன்தோப்பு**

தச்சர் நிறைந்து வாழும் இடமாக உள்ளதால் தச்சன்தோப்பு என பெயர் பெற்றது.

**கோயிலாக்கண்டி**

கோயில் ஆ கண்டி என வகுத்து நோக்கினால் கோயில்களும் பசுக்களும் அதிகமாக உள்ள இடம்.

**வேலன்பிராய்**

வேலமரமும் பராய்மரமும் சேர்ந்த நிலையால் இப் பெயர் பெற்றுள்ளது.

**சவால்கள்**

நாவற்குழிப் பிரதேசம் பல்வேறு சவால்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கும் ஒரு வலயமாக காணப் படுகின்றது. எடுத்துக்காட்டாக எமது பிரதேச மக்களில் அதிகமானோர் விவ சாய வர்த்தத்தினராக காணப்படுகின் றனர். எமது பிரதேசத்தில் விவசாயத் திற்கு தேவையான நீர் மார்கழிமாத பருவ மழை மூலமே கிடைக்கின்றது. சிற்சில வருடங்களில் பருவமழை பெய்யாது விடுவதால் விவசாயம் சீரழி கின்றது. இதனால் வறுமைக் நிலை தோன்றலாம்.

போக்குவரத்து என்ற ரீதியில் எமது பிரதேச சிறுவீதிகள் பழுதடைந்து காணப்படுகின்றன. இது ஒரு போக்கு வரத்து அச்சுறுத்தலாக உள்ளது. வறு மை, பெற்றோர்விருப்பம் காரண மாக சிறுவர்களது கல்வி உரிமை மறுக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக் கது. அடுத் ததாக எமது பிரதேச கற்றவர்க்கத்தினர் அதிகமாக நகர்ப்புறம் நோக்கிச் செல்வ தால் எமது பிரதேசம் கல்வியறிவு இல்லாத சமூகமாக மாறிவருகின்றமை வருந்தத்தக்க விடயமாகும்.

# கல்வி

அபிராமி சுரேஸ்கரன்
தரம் 12 கலைப்பிரிவு

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி, ஒருவற்கு எழுமையும் ஏமாப்பும் உடைத்து"

ஒரு மனிதனுடைய அறிவு, திறன், ஆற்றல், மனப்பாங்கு போன்றவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சிறந்த செல்வம் இருக்குமெனில் அது கல்விச்செல்வம்தான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கல்வியானது ஒரு மனிதனுக்கு அறிவினைப் புகட்டு கின்றது. இதனால் அவன் தெரியாத வற்றை தெரிந்துகொண்டு ஒரு சிறந்த அறிவாளி ஆகிறான். கல்வி ஒருவரு டைய திறனை வளர்க்கின்றது. அத னால் அவன் ஒரு திறமைசாலிஆகிறான். கல்வி ஒருவருடைய மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் அவன் ஒரு நற்குணம் உடையவனாகிறான். கல்வியினால் ஒருவன் சிந்திக்கும் ஆற்றல் உடைய வனாகவும் சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் மிக்கவனாகின்றான்.

கல்வியின் சிறப்பினை கூறுவதற்கு எந்த புலவரும் கவிஞரும் மறப்ப தில்லை. கல்வி பற்றி திருக்குறள், நாலடி யார், கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி, மூதுரை போன்ற பல நூல் களில் கூறப்பட்டிருக்கின்றன.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற பொய்யா மொழிப் புலவரான வள்ளுவர் தனது திருக் குறளில் கூறியுள்ளார். கற்கவேண்டிய நூல்களை நாம் குற்றம் இன்றி கற்க வேண்டும் அதேபோல் கற்றபடி நடந்து கொள்ளவும் வேண்டும் என்பதே இதன் பொருள் ஆகும். இக்குறளின் ஊடாக வள்ளுவர் கல்வியினை சிறப்பாக கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கற்றபடியே ஒழுக வேண்டும் என்றும் தனது கருத்தை கூறியுள்ளார்.

"மன்னனுக்கு தன் தேசத்தில் தான் சிறப்பு ஆனால் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு"

ஒரு மன்னனுக்கு தான் ஆளும் தேசத்தில் தான் சிறப்பு ஆனால் கற்றவ னுக்கு எங்கு சென்றாலும் சிறப்புத்தான். என்ன செல்வம் உடையவனாக காணப்பட்டாலும் கல்விச்செல்வம் காணப்பட்டாலே அவ்மனிதனுக்கு சிறப்பு எனவே கல்வியைத்தேடி வருந்தி கற்கவேண்டும்.

உயர்குலமும் உடையவனாயினும் கல்வி கற்றாலே அவனுக்கு சிறப்பு. கல்வி அறிவில்லாதவன் முருக்கம் பூவிற்கு சமனாவான்.

"இளமையிற்கல் என்ற ஔவையார் ஒருவன் கல்வினை சிறுவயதிலேயே கற்கவேண்டும் அப்போதுதான் அது மனதில் நன்கு பதியும் வயதுமுதிர்ந்த பராயத்தில் கல்வி கற்றாலும் அது மனதில் நன்கு பதியாது. இதனாலேயே ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளை யுமா? என்றார்கள்.

கல்வியினை கள்வர்களினால் கொள் ளையிட முடியாது தீயினால் அழி

யாதது வெள்ளத்தால் அழியாது இதனாலேயே கல்வியினை அழியாச் செல்வம் என்கின்றார்கள். ஒருவன் இறந்தாலும் கூட அவன் கற்ற கல்வி அவனைவிட்டு விலகாது.

"எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்"

என்றார் ஔவையார்

"எண்ணென்ன ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என திருவள்ளுவரும் கூறியுள்ளார்.

ஔவையாரும் திருவள்ளுவரும் ஒரே கருத்தினையே கூறுகின்றனர். எண் என்பது இங்கு கணக்கினையே குறிக்கின்றது. இங்கு எண்ணும் எழுத்தும் இரு கண்களைப் போன்றன என்பது இதன் பொருளாகும்.

"குஞ்சியழகும் கொடுந்தானைக்
கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் எனும் நடு நிலைமையால்
வந்த கல்வி அழகே அழகு"

என்கிறது நாலடியார்.

முடி அழகும் மஞ்சள் பூசி வருகின்ற அழகும் ஒருவனுக்கு சிறந்த அழகல்ல கல்வியினால் வரும் அழகே அழகு என்கின்றது இந்நாலடியார். கல்வியானது ஓர் அழியாச் செல்வம் ஆகையினால் கல்வியானது ஒருவனுக்கு கொடுக்கக்கொடுக்க கூடுமேதவிர குறையாது இத்தகைய சிறப்பு மிக்கது கல்வியாகும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றார் ஔவைப்பாட்டியார்.

நாம் சிறந்த செல்வமாகிய கல்வியை பிச்சை எடுத்தாவது கற்க வேண்டும்.

கல்வி கற்றவர்களோடு சேர்ந்து பேசி மகிழ்வது தேவலோக வாழ்வினை விட மகிழ்ச்சிதருவதாகும். கற்றவரோடு நாம் சேர்ந்து பழகும் தன்மையானது கரும்பினை நுனியில் இருந்து அடிவரை உண்பதனை போன்றது கரும்பினை நுனியில் இருந்து அடிவரை உண்பதானது முதலில் கசக்கும் ஆனால் போக போக இனிக்கும் இது போன்றதே ஆகும்.

"விலங்கொடு மக்கள் அனையர்
இலங்கு நூல்"

கற்றாரோடு ஏனையவர் கற்காதவர் விலங்கிற்கு ஒப்பாவார். என்று கல்வி கற்காததால் ஏற்படும் தீமையை குறிக்கின்றது. எனவே வசதி வாய்ப்புக்கள் உள்ளவர்கள் கல்வியின் சிறப்பினை அறிந்து கற்கவேண்டும் அதேபோல ஏழைகளுக்கும் கல்வி கற்க உதவி செய்யவேண்டும்.

கல்வியிலே சிறந்து விளங்க வேண்டும் ஆயின் கல்வியினை இடைவிடாது கற்க வேண்டும். ஒருநாள் ஊக்கமாகவும் ஒருநாள் சோம்பலாகவும் கற்க கூடாது. எப்பொழுதும் தங்கள் முயற்சிக்கேற்ப கல்வியினை சிறப்பாக பயில வேண்டும்.

"முயற்சி திருவினையாக்கும்"

# ஏழை மக்கள் வாழ்வில் ஒளியை ஏற்றி வைத்த பாடசாலை!

செள. பிரவீனா
தரம் 3

நாவற்குழி என்னும் ஊரில்
நடுவமைந்த பாடசலை
ஏழை மக்கள் வாழ்வில் ஒளியை
ஏற்றி வைத்த பாடசலை

கல்வியோடு ஒழுக்கத்தையும்
கட்டிக்காக்குமே - நாம்
நல்விதாமய் வாழும் வழிகள்
சுட்டிக்காட்டுமே

கலைகள் பலவும் கற்று
வாழ்வின் நிலையுயரவே
உடலும் உளமும் உறுதி பெற்று
நாங்கள் உயர்வு காணவே

கலைமகளின் கருணைப்பார்வை
எம்மில் கிட்டவே- இந்தக்
கல்விச்சாலை என்றும் எமக்கு
உதவும் உண்மையே

கற்ற பலரின் உதவி
கையில் கிடைக்கவே
யுத்தவடுக்கள் சுமந்த போதும்
மீண்டும் எழுந்து நிற்குதே...

காலமாற்றத்தோடு இணைந்த
கல்வித்திட்டமும்
நாளை உலகை எதிர்கொள்ளும்
நவீன தொழில் நுட்பமும்

சீலமும் சிறந்த சிந்தனைகளும்
வாழ்வில் நிலைக்க உதவி
ஞானம் முழுதும் புகழ் பரப்பி
வாழ்க! வாழ்கவே!!

# Electricity

**Miss. Banuya Sivasuthan**
**Grade 8A**

The discovery of electricity was a great event. Mordern life is unthinable without electricity. It has made so easy and comfortable. There are life hundreds of other uses of electricity. Electricity has removed darknes.

It helps us enjoy air - conditioners in summer. People use electric heaters in winter. There are Cookers, fans. Coolers and other things that run with electricity. Electricity has helped in many other discoveries. Electricity canbe generated with the help of running water. It is called hydro electricity. It can be generated with the help of cool and called thermal electricitys.

Electricity is very good Servant, but badmaster. "Banjamin Franklin" proved with the help of a kite that there is electric power in the clouds. The lightening is nothing but the discharge of electricity that the clouds contain. Now-a-days electricity has become quite - common in the world. Trains and trams are run by the electric Power. Electric power is the lifeline ofthe busy modern world. Wecannot imagine a world without electricity even for a moment.

# My Self

S. Thivinsha
Grade 02

My name is Thivinsha
I am six years old.
I live at Navatkuli.
I Study at Navatkuly maha vidyalayam
I like Ice cream
My best friend is Anpanuka.

Thank you

# My Pet

Y.Priyanka
Grade 04

1. I have a pet
2. Its Name is Kitten.
3. It's White and grey in colour.
4. It has lovely green eyes.
5. It is very soft and furry.
6. It eats fish and drinks milk.
7. It likes to play with ball in the garden.
8. It sleeps in a small basket near my bed
9. I love my pet very much.

# In life......

J.Jathurshana
Grade-11A

Think positively
Network well
Exercise daily
Eat healthy
Work hard
Stay strong
Build faith
Worry less
Read more
Be happy
Volunteer freely
Relax often
Love always
Live forever.



விளையாட்டுச்செயற்குழு



முகாமைத்துவ அணி



கல்விசாரா ஊழியர்கள்

# பகுப்பாயில்

# எமது பாடசாலையின் கடந்த 10 வருட கால பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வு (2005 - 2014)

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் வடமாகாணமும் ஒன்றாகும். இந்த மாகாணத்தில் ஐந்து மாவட்டங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றே யாழ்ப்பாண மாவட்டம் ஆகும். யாழ்ப்பாணத்தில் ஐந்து கல்விவலயங்கள் உள்ளன. இவற்றுள் தென்மராட்சி கல்விவலயமும் அடங்கும். தென்மரா ட்சி கல்விவலயத்தில் உள்ள 60 பாட சாலைகளில் யா/நாவற்குழி மகா வித்தியாலயமும் ஒன்றாகும்.

எமது பாடசாலை தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை ( கலை,வணிகப் பிரிவு உட்பட ) வகுப்புக்களைக் கொண்ட 1C பாடசாலையாகக் காணப்படுகின்றது. இங்கு நாவற்குழிப் பிரதேச மாணவர் கள் மட்டுமன்றி கோவிலாக்கண்டி, தச்சன்தோப்பு, கைதடி நாவற்குழி, மறவன்புலவு ஆகிய கிராம மாணவர் களும் கல்வி கற்கின்றனர். தற்போது 672 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர். இவர்களது கல்விப் பசியைத் தீர்க்க 45 ஆசிரியர்கள் தேவையான போதும் 36 ஆசிரியர்களே உள்ளனர்.

இலங்கையின் கல்விக் கொள்கைக்கேற்ப தரம் 5 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையும், தரம் 11 மாணவர்களுக்கு கல்விப் பொதுதராதர சாதாரணதரப் பரீட்சையும், தரம் 13 மாணவர்களுக்கு கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையும் பொதுப் பரீட்சைகளாக இடம்பெறுகின்றன. இப்பரீட்சைகளின் கடந்த 10 வருடகால பெறுபெறுகளின் பகுப்பாய்வு பற்றி நோக்குவோம்.

**புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு**

பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமான 5ம் தர மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வு வருமாறு

| வருடம் | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 36 | 32 | 28 | 23 | 36 | 45 | 51 | 42 | 44 | 55 |
| தகுதிபெற்றோர் | 03 | 02 | 04 | 02 | 03 | 01 | - | - | 03 | 04 |
| தகுதிபெற்றோர் வீதம் | 08% | 06% | 14% | 09% | 08% | 02% | 00% | 00% | 07% | 07% |
| 100 இற்குமேல் புள்ளிபெற்றோர் | 08 | 16 | 08 | 07 | 16 | 12 | 12 | 05 | 10 | 20 |
| 100 இற்குமேல் புள்ளிபெற்றோர் வீதம் | 22% | 50% | 29% | 30% | 44% | 27% | 24% | 11% | 23% | 36% |
| 70 இற்குமேல் புள்ளிபெற்றோர் | 18 | 19 | 17 | 16 | 25 | 30 | 26 | 21 | 31 | 35 |
| 70 இற்குமேல் புள்ளிபெற்றோர் வீதம் | 50% | 59% | 61% | 70% | 69% | 67% | 51% | 50% | 70% | 64% |

மேற்படி காலப்பகுதிகளில் **2011, 2012**ம்ஆண்டுகள் தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில் மாணவர்கள் தகுதிநிலை அடைந்துள்ளார்கள். மேலும் அதிகூடிய சித்தியாக **2007, 2014** காலப்பகுதிகளில் தலா **4** மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆய்வுக் காலப்பகுதியில் மொத்தம் **22** மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

**சித்தியடைந்த மாணவர்கள் விபரம்**

**( வருட ரீதியாக )**

| | |
|---|---|
| 2005 | 2009 |
| செல்வி. ச.கஜேந்தினி | செல்வி. செ.சிந்துஜா |
| செல்வன்.மா.சிவகண்ணன் | செல்வன்.சு.சுபாசன் |
| செல்வன்.ச.டிலக்சன் | செல்வி. க.ரெபேக்கா |
| 2006 | 2010 |
| செல்வன்.ச.சன்சீவி | செல்வன்.ச.நிதர்சன் |
| செல்வி. மோ.டிசாலினி | 2013 |
| 2007 | செல்வி. சி.கதிர்விழி |
| செல்வன்.மா.சிவரதன் | செல்வி. பு.கஜானா |
| செல்வி. பு.வைஷ்ணவி | செல்வி. வி.சுவேதா |
| செல்வன்.பா.சுஜந்தன் | 2014 |
| செல்வி. சு.அபிராமி | செல்வி. ஜெ.அபிநயா |
| 2008 | செல்வன். ஜீ.பகீஷன் |
| செல்வன்.சி.சிவகரன் | செல்வன்.இ.சங்கீதன் |
| செல்வன்.த.பிரதீபன் | செல்வன். ந.சன்னைு |

தற்போது எமது பாடசாலையில் 10 மாணவர்களே புலமைப் பரிசில் நிதி பெறுபவர்களாகக் காணப்படுகின்றனர். அம்மாணவர்கள் விபரம் வருமாறு

| | |
|---|---|
| தரம் - 6 | தரம் - 11 |
| செல்வி. ஜெஅபிநயா | செல்வன்சுசுபாசன் |
| செல்வன் ஜீபகீஷன் | செல்வி. கரெபேக்கா |
| செல்வன்இசங்கீதன் | செல்வி.ஜெஜதுர்ஷனா |
| செல்வன் நசன்னைு | தரம் - 12 |
| தரம் - 7 | செல்வி. சுஅபிராமி |
| செல்வி. வி.சுவேதா | செல்வி.குநிவேஜா |

கடந்த காலப்பகுதிகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைபவர்கள் வேறு பாடசாலையை நாடிச் செல்லுதல் வழமையாக இருந்தது. ஆனால் சென்ற வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நால்வரும் எமது பாடசாலையில் கல்வி கற்பது குறிப்பிடத்தக்கது.

## க.பொ.த (சா/த) பரீட்சைப்பெறுபேற்றுப் பகுப்பாய்வு

எமது நாட்டின் கல்விக் கொள்கைக்கேற்ப 2007 ஆம் ஆண்டிற்கு முன் க.பொ.த (சா/த) பரீட்சையில் 10 பாடங்கள் காணப்பட்டன. 2008 ஆம் ஆண்டிலிருந்து பிரதான பாடங்கள் ஆறும் தொகுதிப்பாடங்கள் மூன்றுமாக மொத்தம் ஒன்பது பாடங்களில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். அதனடிப்படையில் பெறுபெறுகளின் பகுப்பாய்வு வருமாறு

| பாடம் | சித்தி வீதங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
| சைவசமயம் | 75 | 71 | 80 | 84 | 84 | 85 | 93 | 94 | 83 | 84 |
| கிறிஸ்தவசமயம் | 100 | 100 | 100 | 100 | 75 | 100 | 60 | 100 | 100 | 89 |
| கிறிஸ்தவமல்லாதது | - | - | - | - | - | - | 100 | - | - | - |
| தமிழ் மொழி | 52 | 56 | 64 | 63 | 63 | 81 | 60 | 68 | 58 | 63 |
| ஆங்கிலம் | 04 | 09 | 08 | 00 | 10 | 16 | 11 | 15 | 08 | 17 |
| விஞ்ஞானம் | 27 | 13 | 19 | 17 | 24 | 33 | 35 | 46 | 36 | 30 |
| கணிதம் | 29 | 25 | 25 | 30 | 39 | 40 | 32 | 44 | 31 | 33 |
| சமூகக்கல்வியும்,வரலாறும் | 43 | 41 | 39 | 57 | 34 | 49 | 53 | 63 | 41 | 70 |
| தொகுதி - 1 | | | | | | | | | | |
| வணிகமும் கணக்கீடும் | 79 | 100 | 75 | 78 | 71 | 75 | 67 | 100 | 50 | 75 |
| புவியியல் | 33 | 31 | 56 | 24 | - | - | 89 | 88 | 100 | 100 |
| குடியுரிமைக்கல்வி | - | - | - | - | 22 | 56 | 51 | 67 | 57 | 74 |
| தொகுதி - 11 | | | | | | | | | | |
| சங்கீதம் | 36 | 50 | 65 | 61 | 57 | 70 | 96 | 84 | 100 | 100 |
| சித்திரம் | 42 | 14 | 13 | 40 | - | 17 | 06 | 50 | 22 | 10 |
| நடனம் | 50 | 00 | 100 | 100 | 100 | 100 | 80 | 100 | 100 | 100 |
| தமிழ் இலக்கியம் | 25 | - | - | - | - | - | 00 | - | - | - |
| தொகுதி - 111 | | | | | | | | | | |
| ICT | - | - | - | - | - | 40 | - | 100 | 100 | 50 |
| விவசாயம் | 88 | 62 | 50 | 100 | 23 | 55 | 100 | | 57 | 50 |

இப்பரீட்சையில் ஒவ்வொரு வருடமும் பெற்ற அதிசிறந்த பெறுபேறுகளின் விபரம் பின்வருமாறு:

| வருடம் | மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| 2005 | செல்வி சிரோமி சத்தியசீலன் | 5A,3B,2C |
| 2006 | செல்வி நிஷாலினி அற்புதநாதன் | 4A,3B,2C |
| | செல்வி ருசாந்தா கோடீஸ்வரன் | 4A,2B,3C,S |
| 2007 | செல்வி கஜேந்தினி ஆனந்தராஜா | 5A, 4C,S |
| 2008 | செல்வி சுவர்ணா அழகேந்திரம் | 7A,B |
| 2009 | செல்வி சங்கீதா சிவா | 5A,B,2C,S |
| 2010 | செல்வி லாவண்யா சற்குணநாதன் | 3A,B,3C,2S |
| 2011 | செல்வி டிலக்ஷனா சிவபாதம் | 4A,2B,2C,S |
| 2012 | செல்வி லக்சிகா சந்திரன் | 5A,3B |
| 2013 | செல்வி தாரங்கினி கோணலிங்கம் | 3A,2B,C,2S |
| 2014 | செல்வி ஜதுர்ஷனா ஜெனார்த்தன் | 6A,B,2C |

**க.பொ.த உயர்தரம் பெறுபேற்றுப் பகுப்பாய்வு**

க.பொ.த உயர்தரத்தில் கலைப் பிரிவு பல ஆண்டு காலமாக இடம்பெறுகின்றது. க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவு **2012**ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு முதன் முறையாக கடந்த வருடமே பரீட்சைக்குத் தோற்றி '3A' தர சித்திகளைப் பெற்ற திருச்செல்வம் புஸ்பருபன் மாவட்ட மட்டத்தில் **44**வது நிலையைப் பெற்று பாடசாலை வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார்.

| பாடங்கள் | சித்தி வீதங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
| பொருளியல் | 00 | - | - | - | - | - | - | 00 | 100 | 57 |
| வணிகக்கல்வி | - | - | - | - | - | - | - | - | - | 75 |
| கணக்கியல் | - | - | - | - | - | - | - | - | - | 75 |
| தமிழ் | 75 | 88 | 100 | 100 | 89 | 100 | 67 | 38 | 94 | 100 |
| இந்துநாகரிகம் | 100 | 89 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 87 |
| அரசியல் | - | - | - | - | - | - | - | - | 78 | 33 |
| சங்கீதம் | 00 | 100 | - | - | 100 | 100 | - | 100 | 100 | 100 |
| நடனம் | - | - | - | - | - | - | - | - | - | 100 |
| புவியியல் | - | - | 100 | - | 100 | 90 | 67 | 50 | 100 | 57 |
| கிறிஸ்தவநாகரிகம் | 100 | - | - | 100 | 100 | - | - | 100 | 100 | - |
| அளவையியல் | 100 | 75 | 100 | 82 | 83 | 50 | - | 50 | - | - |
| மனைப்பொருளியல் | - | 100 | - | - | - | - | - | - | - | - |
| பொதுஆங்கிலம் | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 04 |
| பொதுஅறிவு | 22 | 56 | 100 | 73 | 56 | 58 | 00 | 25 | 06 | 33 |
| பல்கலைக்கழகஅனுமதி | 67 | 67 | 100 | 82 | 83 | 83 | 67 | 25 | 81 | 44 |

க.பொ.த உயர்தரத்தில் கடந்த 10 வருடங்களில் பெற்ற அதிசிறந்த பெறுபேறு பின்வருமாறு

| வருடம் | மாணவர் பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 2005 கலைப்பிரிவு | செல்வி கார்த்திகாயினி நாகராஜா | 2A,B | 107 |
| 2006 கலைப்பிரிவு | செல்வி நிவேதகௌரி கந்தசாமி | B,2C | 816 |
| 2007 கலைப்பிரிவு | செல்வி கிருபாலினி பாலசுந்தரம் | A,2B | 344 |
| 2008 கலைப்பிரிவு | செல்வி கஜனி சுப்பிரமணியம் | 2A,C | 462 |
| 2009 கலைப்பிரிவு | செல்வி லவப்பிரியா விக்னேஸ்வரமூர்த்தி | 2A,B | 324 |
| 2010 கலைப்பிரிவு | செல்வி தர்சிகா அருளம்பலம் | A,2B | 157 |
| 2011 கலைப்பிரிவு | செல்வி பிரியா பாலச்சந்திரன் | C,2S | 1613 |
| 2012 கலைப்பிரிவு | செல்வி பிரியதர்சினி ஸ்ரீபன் | B,2S | 1604 |
| 2013 கலைப்பிரிவு | செல்வி நிரோஜினி கனகதேவர் | A,2B | 271 |
| 2014 கலைப்பிரிவு | செல்வி சோபனா ஜெயச்சந்திரன் | A,B,C | 350 |
| 2014 வணிகப்பிரிவு | செல்வன் திருச்செல்வம் புஸ்பருபன் | 3A | 44 |

**சவால்கள்**

1. தரம் 5 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த 10 வருடங்களில் 22 பேர் சித்தியடைந்த போதும் 9 மாணவர்களே இப்பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்கின்றனர்.
2. க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் உயர்தரத்திற்குத் தகுதி பெறுபவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் கலை வர்த்தகப் பிரிவுகளுக்கே வேறு பாடசாலையை நாடுதல்.
3. காலத்திற்கு காலம் ஏற்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள்
4. ஆசிரியர்களின் இடமாற்றமும் அதற்கான பதிலீடின்மையும்
5. ஆண் மாணவர்கள் உயர்ந்த பெறுபேற்றை அடைவதில் பின்னிற்றல்

**எதிர்பார்ப்பு**

1. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் எமது பாடசாலையில் கல்வி கற்கும் சூழலை ஏற்படுத்துதல்
2. வள உச்சப்பகிர்வில் சாதக சூழ்நிலையை எதிர்பார்த்தல்
3. ஆண் மாணவர்களின் உயர் பெறுபேற்றை உறுதிப்படுத்தல்

**தீர்வு**

1. பெற்றோர், மாணவர் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமாக இப்பாடசாலையிலேயே கற்றலைத் தொடருகின்ற நிலையை ஏற்படுத்துதல்
2. கற்கின்ற மாணவர்களின் பெறுபேற்றை உன்னதப்படுத்தி பாடசாலையில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் எடுத்துக் காட்டாக செல்வன் திருச்செல்வம் புஸ்பரூபன் 3A பெறுபேற்றை பெற்றமை

# நன்றியுணர்வுடன்....

யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் நீண்ட வரலாற்றையும் சாதனையும் கடந்து தலைநிமிர்ந்து நிற்கின்றது. பல்வேறு இலக்கியகர்த்தாக்களையும் கல்வியியல் வல்லாளர்களையும் ஆக்கியளித்த பெருமைக்குரியது. இவ்வாறான செய்திகளை இளந்தலைமுறையினருக்கு கைமாற்றுவதற்காகவும் பதிவதற்காகவும் 146வது ஆண்டு நிறைவில் **"நாதக்குடம்"** எனும் சிறப்பு மலர் வெளிவருகின்றது.

இம்மலரின் கனதி கட்டுரையாளர்களிலேயே தங்கியுள்ளது. அவ்வகையில் தமது ஆக்கங்களை தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை மனதுள் நினைத்து மகிழ்கின்றோம்.

மலரின் மாண்புகருதி தமதாக்கங்களை தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் தலைசாய்க்கின்றோம்.

என்றும் மக்கள் சேவையால் மனம் மகிழும் ஆன்மீக ஆற்றுப்படுத்துனர், அரச அதிகாரிகள், அரசியல் வல்லாளர்கள் எமக்கு ஆக்கியளித்த ஆசிச்செய்தி, வாழ்த்து செய்திகளுக்காக உளம் கனிந்து சிரம் தாழ்த்துகின்றோம்.

நன்றாய் எம்பள்ளி வளர என்றும் வள்ளண்மையால் உதவும் நல்லுள ளங்கள் அனைவருக்கம் நன்றிகள்.

இவை யாவற்றிற்கும் மேலாக வரலாற்றை தொகுக்கும் முயற்சிக்கு தகவல்கள் தந்துதவிய ஆசிரியர்கள் இ. சொக்கலிங்கம், பொ.சுப்பையா ஆகியோரு க்கும் கிராமசேவகர் ஆ.நடராசா அவர்களுக்கும் எழுத்தாளர் செ.குமாரசாமி அவர்களு க்கும் தா. தர்மராசா அவர்களுக்கும் நன்றிகள் பலகோடி. இவர்கள் அனைவராலும் குறிப்பிடப்பட்டு அதிக தகவல்களை தந்துதவிய ஊர்ப்பெரியவர் செ. தம்பிராசா காலத் தால் போற்றப்படவேண்டியவர்.

மலர் நன்கு மலர்வதற்குதவிய தீபம் பதிப்பகத்தார் நினைவிற்குரியவர்கள். 146 வது விழாச்சிறக்க அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் அகம் மலர்ந்த நன்றிகள் கோடி.

–நன்றி–

**மலர்க்குழு**








தீபம் பிறிண்டேர்ஸ். 717, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 222 6188